# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 256 ஆடி 24ஆம் நாள் வியாழக்கிழமை 09 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### ஆளுநர் தலைமையில் அவசரக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலமை தொடர்பில் பொலிஸார், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்களுடன் >> 25

## வடக்கு அமைச்சரவை விவகாரம் இன்றைய அமர்வும் குழம்பலாம்!

யாழ்ப்பாணம், ஓக. 9
வடக்கு மாகாண அமைச்சரவை விவகாரத்தால், மாகாண சபையின் இன்றைய அமர்விலும் குழப்பம் ஏற்படக்கூடும் என்று தெரியவருகின்றது.
வடக்கு அமைச்சரவை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரினால் அவசர கோரிக்கை ஒன்று அவைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவசர கோரிக்கை இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான விவாதத்தால் மாகாண சபையில் குழப்பம் வரக் கூடும் >> 24

## அரசமைப்பு வரைவுக்கான நகல் நிபுணர் குழு சமர்ப்பித்தது

*மூன்று நிபுணர்கள் வேறுகருத்துக்களையும் முன்வைத்தனர்*

யாழ்ப்பாணம், ஓக. 9
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அரசமைப்பு வரைவுக்கான நகலை நேற்றுச் சமர்ப்பித்தது. சமர்ப்பிக்கப்பட்ட நகலை வழிநடத்தல் குழு ஆராய்ந்து, அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றத்துக்கு எப்போது >> 22

### நீதிமன்ற அவமதிப்பு:

## விக்கியை மன்றில் முன்னிலையாக அழைப்பாணை

### இடைக்காலக் கட்டளையும் அடுத்த மாதம் வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன், க.சிவநேசன் ஆகியோரை எதிர்வரும் 7ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் நேரடியாக முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.
மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்காலக் கட் >> 25

### நீதிமன்ற அவமதிப்பு:

## ஞானசாரருக்கு 19 ஆண்டுகள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஓக. 9
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார். அவருக்கு 19 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
19 ஆண்டுகள் சிறைத் தண்டனையை 6 ஆண்டுகளில் அனுபவிக்கமேன்முறையீட்டுநீதிமன்றின் நீதிபதிகள் குழு கட்டளை >> 25



## கோட்டையில் பெரும் பதற்றம்

### தொடருந்து ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

- போராட்டத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள்
- சிறப்பு அதிரடிப் படையினர் குவிப்பு
- ஓய்வுபெற்ற இயந்திர சாரதிகளுக்கு அழைப்பு
- உரிமமில்லாது பேருந்துச் சேவை நடத்த அனுமதி.

>> 24



## அறிஞர் அண்ணாவின் வலக்கரத்தில் நீண்ட துயில்கொண்டார் கருணாநிதி

சென்னை, ஓக. 9
முதுபெரும் தமிழ்த் தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழகத்தின் முன்னாள் முதல்வர், தி.மு. கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி நேற்று மாலை 7 மணியளவில் மெரீனா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள அறிஞர் அண்ணா நினை >> 23

### குள்ள மனிதர்கள் விவகாரம்:

## பொலிஸ் சுற்றுக் காவல் நடைமுறைப்படுத்தப்படும்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 9
வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அராலிப் பகுதியில் இளைஞர்களையும், பொலிஸாரையும் இணைத்து >> 25

### குள்ள மனிதர்கள்

## கட்டுக்கதை என்ற சயந்தன் ரோந்துக்கு வான் தருகிறாராம்

யாழ்ப்பாணம், ஓக. 9
அராலியில் குள்ளமனிதர்கள் என்று சொல்வது கட்டுக்கதை, குள்ளமனிதர்கள் >> 24

### விசாரணைக்குச் சென்ற

## இளைஞன் படுகொலை ராணுவத்தினருக்கு தூக்கு

### இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு

திருகோணமலை, ஓக. 9
விசாரணை என்ற பெயரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனை அழைத்துச் சென்று கொலை செய்த குற்றத்துக்காக இராணுவத்தைச் சேர்ந்த இருவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றில் தூக்குத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் 1998ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி குருந >> 25








Member of David Pieris
0114 700 100 / 0767 447 084
எசட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டெட்
எசட்லைன்

புங்குடுதீவு மாணவி கொலை:

# குற்றவாளிகளின் மனு இன்று விசாரணைக்கு

யாழ்ப்பாணம், ஒக. 9

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு கொழும்பு உயர்நீதிமன்றில் இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

**மாணவி கொலை**

புங்குடுதீவு மாணவி 2015 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் புங்குடுதீவுப் பகுதியையே உலுக்கியிருந்தது. யாழ்ப்பாணம் குடாநாடு மட்டுமல்லாமல் நாடளாவிய ரீதியில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களில் இருவருக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லை என்ற காரணத்தால் அந்த இரண்டு பேரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்ற ஆரம்ப விசாரணைகளின் பின்னர் கொலை வழக்கு ட்ரயல் அட் பார் முறையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகியது.

**தூக்குத் தண்டனை**

வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 7 பேருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்தது. மாணவியின் குடும்பத்துக்கு தலா 10 லட்சம் ரூபா இழப்பீடும் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

**மேன்முறையீடு**

இந்தத் தீர்ப்புக்கு எதிராக குற்றவாளிகள் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீடு செய்திருந்தனர். அது இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(ந-114)

---

# திருநெல்வேலியில் கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஒக. 9

திருநெல்வேலி தபாற் கட்டை சந்திப் பகுதிக்கு அண்மையிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளதாக, கடை உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11.20 மணிக்கு கடையின் மேற்பகுதி ஊடாக உள்நுழைந்த திருடன், கடையிலிருந்த 4 ஆயிரத்து 500 ரூபா பணத்தையும், 8 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளையும் எடுத்துச் சென்றுள்ளதாகப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடையிலிருந்த மறைகாணியில் (சிசிரிவி) திருட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

(5.114)

---

# சுகாதாரப் பரிசோதகர்களின் பணிக்கு நேற்று இடையூறு

*கீரிமலையில் ஒருவர் கைது*

யாழ்ப்பாணம், ஒக. 9

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் பணிக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்களைத் தகாத வார்த்தைகளால் பேசிய குற்றத்துக்காக, கீரிமலை யைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் திருவிழா மற்றும் ஆடி அமாவாசை தினம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கீரிமலைப் பகுதியில் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை உள்ளடக்கிய குழு உணவுகையாளும் நிலையங்கள் மற்றும் பல்பொருள் விற்பனை நிலையங்கள் என்பவற்றுக்குச் சென்று சுகாதார நிலைமைகளை ஆராய்ந்தது.

விற்பனை நிலையத்துக்கு சோதனைக்குச் சென்ற குழுவை பணிசெய்யவிடாமல் தடுத்ததுடன் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளார். எச்சரிக்கை செய்யும் வகையில் கைப்பேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார். அலைபேசியில் அழைப்பு எடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மிரட்டும் வகையில் செயற்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர். கைப்பேசியையும் கைப்பற்றினர். பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை மிரட்டும் வகையில் அவரால் மேற்கொள்ளப்பட்ட அழைப்புத் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(5.114)

---

*போரால்*

# நாட்டிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு ரணில் அழைப்பு

*உதவிகள் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக. 9

போர்க் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிய சகல இலங்கையர்களும் மீண்டும் இலங்கைக்கு வரவேண்டும். நாம் அனைத்து மக்களுக்கும் இந்த அழைப்பை விடுக்கின்றோம். நாட்டுக்குத் திரும்பி வரும் மக்களுக்கு சகல உதவிகளையும் வாழ்வாதார நடவடிக்கைகளையும் செய்துகொடுக்க தயாராக உள்ளோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை, கேள்வி நேரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், போரின் போது நாட்டை விட்டு வெளியேறிய ஏதிலிகள் குறித்தும் இந்தியாவில் உள்ள ஈழ ஏதிலிகளை மீண்டும் நாட்டுக்கு வரவழைப்பது குறித்தும் போரின் பின்னர் தற்போது வரையில் இலங்கைக்குத் திரும்பியுள்ள ஏதிலிகளின் வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பிலும் அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டம் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

2010ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் இந்தியாவில் இருந்து 9 ஆயிரத்து 509 ஏதிலிகள் நாடு திரும்பியுள்ளனர். இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களில் மேலும் 3 ஆயிரத்து 815 பேர் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது. இவர்கள் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வர முயற்சிகளை எடுத்த போதிலும் இந்திய அரசு இந்திய வான்படையின் உதவியுடன் அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்துள்ளது. அவர்களுக்கான இலவச வானூர்திப் பயணங்களை முன்னெடுப்பதுடன் உதவிகளையும் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளது.

நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இலங்கை மக்கள் இங்கு சுதந்திரமாக வாழ வேண்டும். போர்க் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிய சகல இலங்கையர்களும் மீண்டும் இலங்கைக்கு வரவேண்டும். அரசாக நாம் அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். நாட்டுக்குத் திரும்பி வரும் மக்களுக்கு சகல உதவிகளையும் வாழ்வாதார நடவடிக்கைகளையும் செய்துகொடுக்க நாம் தயாராக உள்ளோம். அதேபோல் ஏதிலிகளாக வெளியேறி இப்போது நாடு திரும்பியுள்ள மக்களின் நிலைமைகள் குறித்தும் நாம் ஆராய்ந்து அவர்களுக்கான அடுத்த கட்ட உதவிகளைச் செய்து கொடுப்பது குறித்தும் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம் - என்றார்.

(5.61)

---

*வடக்கு வீடமைப்பு:*

# உரிய நிறுவனங்களுடன் அரசு தொடர்ந்தும் பேச்சு

*சபையில் ரணில்*

கொழும்பு, ஒக. 9

வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பது குறித்தும் மேலதிக 25 ஆயிரம் வீடுகளை மறுசீரமைப்பது குறித்தும் உரிய நிறுவனங்களுடன் அரசு பேச்சு நடத்தி வருகின்றது. வடக்கு வீடமைப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் பேச்சு நடத்தி விரைவில் முடிவெடுக்கப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

போரின் போது நாட்டை விட்டு வெளியேறி மீண்டும் நாடு திரும்பியுள்ள ஏதிலிகள் குறித்து நாம் அதிக அக்கறை செலுத்துகின்றோம். அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் வீடுகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். மன்னார் மற்றும் வவுனியாவில் ஏதிலிகளாக இருக்கும் மக்களுக்கான வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பது குறித்து உரிய நிறுவனங்களுடன் நாம் பேச்சு முன்னெடுத்து வருகின்றோம். மேலதிகமாக 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் வேலைகளையும் கையாண்டு வருகின்றோம். விரைவில் சகல மக்களுக்கும் வீடுகள் வழங்கப்படும். அடிப்படைப் பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் தீர்ப்போம். இந்த நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுடன் விரைவில் பேச்சு நடத்தி தீர்வுகளைப் பெற்றுத்தருவது அரசின் பொறுப்பு - என்றார். (5.61)

---

# தொண்டையில் பாண் சிக்கி முதியவர் பரிதாபச் சாவு

சாவகச்சேரி, ஒக. 9

பாண் தொண்டைக்குள் சிக்கி 61 வயதான முதியவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தென்மராட்சி தெற்கு, மறவன்புலவில் நேற்று நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் கணேசபிள்ளை (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தோட்டத்துக்குச் சென்று வீட்டுக்கு திரும்பி வரும்போது பாண் வாங்கி வந்துள்ளார். முற்பகல் 11.30 மணியவில் பாண் உண்டுள்ளார். உடனே மயக்கமடைந்தார். உறவினர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-9.159)

---

# தென்மராட்சி வாள்வெட்டு: சந்தேகத்தில் 2பேர் கைது

தென்மராட்சி ஒக. 9

யாழ்ப்பாணம், தென்மராட்சியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர் என்றும், சந்தேக நபர்களில் ஒருவர் தென்மராட்சியில் இயங்கும் வாள்வெட்டுக் குழுவொன்றின் தலைவர் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

ஜெ. அஜித்குமார் என்பவர் துன்னாலைப் பகுதியில் வைத்தும், க. நிரோஜன் என்பவர் மந்துவிலில் வைத்தும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரானக. நிரோஜன் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப் பட்டு எதிர்வரும் 17ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றைய சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர் நீதிமன்றில் நாளை முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-9.159)

---

# மீனவர் பிரச்சினை 12ஆம் திகதி முல்லையில் சந்திப்பு

முல்லைத்தீவு, ஒக. 9

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டம் கொழும்பில் நேற்று இடம்பெறவில்லை. எதிர்வரும் 12ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அந்தக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நிறுத்தக் கோரி கடந்த 2ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர். எதிர்வரும் 8ஆம் திகதி இது தொடர்பில் கொழும்பில் கூட்டம் நடத்தப்படும் என்று கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது மீனவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.

கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று முல்லைத்தீவு மீனவர்கள் தீர்மானித்திருந்தனர். இந்த நிலையில் கொழும்பு நீரியல்வளத் திணைக்களத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு நிறுத்தப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ. சேனாதிராசா, திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா இருவரும் திணைக்களத்துக்கு நேற்றுச் சென்றார்கள். 12ஆம் திகதி முல்லைத்தீவில் உயர்மட்டக் கூட்டம் நடைபெறவுள்ளதால், கொழும்புக் கூட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(5.105)

# வவுனியாவில் நீண்ட சர்ச்சையின் பின்னர் பொருளாதார மையக் கட்டடம் கையளிப்பு

**வவுனியா, ஓக. 9**
**2010ஆம் ஆண்டு வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அப்போதைய அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.**

அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான றிசாட் பதியுதீன் மற்றும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுனர் சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள். அரச அதிபர். அரச அதிகாரிகள். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என 82 பேரின் பங்கு பற்றுதலுடன் பொருளாதார மத்திய நிலையத்துக்கு என ஓமந்தைப் பகுதியில் காணியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.
இந்நிலையிலேயே புதிய அரசின் வரவு- செலவுத் திட்டத்தில் வடக்கிற்கான ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியாவில் அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருந்தது.
இந்த நீண்ட சர்ச்சையின் பின்னர் மதகுவைத்த குளத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார மையக் கட்டடம் அதன் பணிகள் முடிவுற்று மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
அமைச்சர் கரிஸ்சின் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வவுனியா மாவட்டத்தில் ஓர் பொருளாதார மையம் கட்ட முற்பட்ட நிலையில் அது தாண்டிக்குளம் பிரதேசத்திலா அல்லது ஓமந்தையிலா அமைவது என்பதில் பெரும் சர்ச்சை ஏற்பட்டு. பின்னர் கூட்டமைப்பின் மத்தியில் வாக்கெடுப்பு வரையில் சென்றும் இறுதியில் ஓமந்தையும் இன்றி தாண்டிக்குளமும் இன்றி மதகுவைத்த குளம் பிரதேசத்தில் குறித்த பொருளாதார மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது.
பொருளாதார மையத்துக்காக ஒதுக்கிய நிதியில் 200 மில்லியன் ரூபாவில் தற்போது மதகுவைத்தகுளத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்தினில் 55 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பணிகள் நிறைவுபெற்று அதன் இயக்கத்துக்காக கடந்த திங்கட்கிழமை மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கையளிக்கப்பட்ட கட்டிடம் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
(105)

முல்லைத்தீவில்

## தப்பி ஓடிய நான்கு கைதிகளில் இருவர் பொலிஸாரல் கைது

முல்லைத்தீவு,ஓக.9
முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்ற வளாகத்தில் இருந்து நேற்று முன்தினம் நான்கு கைதிகள் தப்பி ஓடியுள்ளார்கள். முல்லைத்தீவு பொலிஸார் தீவிரமாக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது. முக்கிய கைதிகள் இருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.
இதில் குறிப்பாக கொலைக் குற்றவாளியும் ,களவுகளுடன் தொடர்புடைய முதன்மை கைதியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் செல்வபுரம் பனங்கூடல் காட்டுப்பகுதியில் ஒளிந்து இருந்த வேளை, முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்கள் ஏனைய இரண்டு கைதிகளும் தப்பி ஓடிவிட்டதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.
(ரி3)

## வவுனியாப் பொலிஸாருக்கு குவியும் பாராட்டு

வவுனியா, ஓக.9
மீன் வியாபாரி தொலைத்த 35ஆயிரம் ரூபா பணம், மற்றும் ஆவணங்களைக் கண்டெடுத்து அப்படியே மீன் வியாபாரியிடம் ஒப்படைத்துள்ளனர் வவுனியாப் பொலிஸார்.
இலங்கையில் சில பொலிஸார் மீது இலஞ்சக் குற்றச்சாட்டுகள் சுமத்தபப்பட்டு பொலிஸ் திணைக்களத்தையே தூற்றுகின்ற இந்தச் சூழலில் வவுனியாவில் இடம்பெற்ற சம்பவம் அனைவரையும் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது. இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்படும் விடையமாகவும் இது காணப்பட்டது. சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. புத்தளத்தில் இருந்து முல்லைத்தீவுக்குச் சென்று மீன் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவர் பணப்பையுடன் 35 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட வாகன ஆவணங்களையும் தொலைத்துள்ளார்.
நேற்று முன்தினம் இரவு வவுனியா மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு அருகில் பணப்பை தவறியுள்ளது. வவுனியா புதிய பேருந்துநிலையப்பகுதியிலுள்ள போக்குவரத்துப் பொலிஸார் தமது சோதனை நடவடிக்கையின்போது வியாபாரியை வழிமறித்துள்ளனர்.
இதன்போதே பணப்பை தவறியுள்ளது தெரியவந்துள்ளது. பொலிஸாரும் இணைந்து பணப்பையைத்தேடியலைந்த போதிலும் பணப்பை, ஏனைய ஆவணங்கள் எவையும் கிடைக்கவில்லை. பொலிஸாரின் ஆலோசனைக்கு அமைய வியாபாரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டுவிட்டுச் சென்றுள்ளார். கடமை முடிந்து வந்த அந்தப் போக்குவரத்துப் பொலிஸார் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னால் பணப்பையை கண்டெடுத்தனர்.
பணம், ஆவணங்கள் இருப்பதை அவதானித்தனர். நேற்றுக் காலை வியாபாரிக்குத் தகவல் வழங்கினர். அவர் தவறவிட்ட 35ஆயிரத்து 640 ரூபா பணம் உள்ளிட்ட வாகனத்தின் ஆவணங்கள் அனைத்தும் வியாபாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.
(21)

## கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு 12 பதவிகளுக்கான வெற்றிடங்கோரல்

யாழ்ப்பாணம், ஓக.9
வடக்கு மாகாண கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு இரண்டு அதிகாரிகள் உள்ளிட்ட பன்னிரெண்டு உத்தியோகத்தர்களுக்கான விண்ணபங்கள் கோரப்படவுள்ளன.
வடக்கு மாகாணத்தில் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினை செயற்படுவதற்கு உத்தியோகத்தர்களை கோரும் நடவடிக்கையில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் க.சிவனேசன் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.
இதற்கான அனுமதியினை கோரி வடமாகாண ஆளுனரின் அனுமதி கிடைப்பதற்காக காத்திருக்கின்றோம் என்றும் ,ஆளுனரின் அனுமதி கிடைத்தவுடன் உத்தியோகாத்தர்கள் உத்தியோகபூர்வமாக மாகாணசபையினால் கோரபப்படுவர் என்றும், இதில் இரண்டு அதிகாரிகளும் பத்து உத்தியோகத்தர்களும் கோரப்படவுள்ளதாகவும் , இதற்காக மீன்பிடி டிப்ளோமா படித்தவர்களே விண்ணப்பிக்க முடியம் என்றும் வடக்கு மாகாண கடற்தொழில் மற்றும் விவசயா அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.
(ரி3)





## மாடுகளைக் கடத்த முயன்றவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

புதுக்குடியிருப்பு ,ஓக.9
தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வளர்த்த மூன்று பசு மாடுகளைக் காணவில்லை என நேற்று முன்தினம் பகல் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தமைக்கு அமைவாக
தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் மகேந்திரா ரக வாகனத்தில் கடத்தப்பட்ட மாடுகளை மீட்டதுடன் வாகனத்துடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.
இந்தச் சம்பவத்துடன் மேலும் சிலர் தொடர்பு பட்டிருப்பதாகவும் அவர்களையும் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் ,கைது செய்யப்பட்டவரை நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
(35)

## உணவகத்தின் முன் நிறுத்தும் வாகனங்களால் தவிர்க்க முடியாத விபத்துக்கள் நிகழ்கின்றன

### சாவகச்சேரி மருத்துவமனை பாதை தொடர்பில் மக்கள் கவலை

சாவகச்சேரி, ஓக.9
சாவகச்சேரி மருத்துவமனையை அண்டியுள்ள முதன்மைப் பாதையில் உணவருந்த நிறுத்தப்படும் வாகனங்களால் ,மருத்துவமனையிலிருந்து வாகனங்களில் வெளியே செல்லும் பொதுமக்களுக்கு ஏற்படும் மறைப்பு காரணமாக விபத்துகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது .
இது குறித்து கவலை தெரிவித்த பொதுமக்கள் மருத்துவமனை வாயிலை அண்டிய பகுதியில் வாகனங்களை நிறுத்த விடாமல் தடுக்குமாறு மருத்துவமனை நிர்வாகத்தைக் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
அந்தப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் உணவருந்துவதற்காக பல வாகனங்கள் பாதையின் இருபுறமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது .தொடராக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் நோயாளர் காவு வண்டி உட்பட மருத்துவமனைக்கு வரும் வாகனங்கள் வெளிச் செல்லும் வேளையில் முதன்மைச் சாலையில் வரும் வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகின்றனர். இதனால் உணவகத்துக்கு வரும் வாகனங்கள் சாலையின் ஒரு பக்கத்தில் நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கமாறும் கோரியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
நேற்று முன்தினம் பகல் 3 மணியளவில் கடமை முடிந்து வீடு திரும்பிய மருத்துவமனை பெண் பணியாளர் சாலையில் கொள்கலன் வாகனம் நின்றதால் எதிரே வாகனம் வருகிறதா எனப்பார்க்க உந்துருளியில் முன்னேறியபோது முதன்மைச்சாலையில் வந்த உந்துருளி மோதியதில் இருவரும் காயமடைந்தனர்.
காயமடைந்த மருத்துவமனைப் பணியாளரும் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த 36 வயது நபரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
(9)

மாபெரும் இசைநிகழ்ச்சி

அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்
ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.
ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.
Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்
K.T.Prassath - 078 612 5929, 071 381 5114
Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)

# சகல வீதிகளின் விவரங்களையும் தயார் நிலையில் வைத்திருக்கவும்

## பிரதேச சபைத் தவிசாளர் அறிவுறுத்தல்

தென்மராட்சி ஓக. 9

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளின் விவரங்களும் பெறப்பட்டு சீரமைப்புக்கான மதிப்பீடும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பிரதேச சபையில் ஆறு உப பணியகங்கள் உள்ளன என்பதால் ஒவ்வொரு பணியகங்களில் உள்ள வீதிகளின் விவரத்தை அடையாளப்படுத்தச் சபை உறுப்பினர்கள் ஆறு பேர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது தவிசாளர் க.வாமதேவன் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு உப பணியகத்திலும் உள்ள வீதிகளின் விவரங்கள் பெறப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனித் தனியான கோவைகள் உருவாக்கி எந்தநேரமும் விவரங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறு சேகரிக்கப்படும் வீதிகளின் விவரங்களை உப பணியக ரீதியாக முன்னுரிமை அடிப்படையில் வைத்திருந்தால் சாலைச் சீரமைப்புக்கு அரசு மாகாண சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரும்பட்சத்தில் உடனடியாகக் கையளிக்கமுடியும் என்று தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மாகாண ஆளுநரைச் சந்திக்க முன்னர் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்ட பின்னர் சந்திப்பதால் குறிப்பிட்ட அளவு வீதிகளை அபிவிருத்தி செய்ய நிதி கோரமுடியும். கையில் முழுமையான விவரங்களை வைத்திருக்காவிடின் எமக்குக் கிடைக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி வேறு இடங்களுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்படலாம்.

சபை எல்லைக்கட்பட்ட 49 கிராம அலுவலர் பிரிவுகளில் 100க்கும் மேற்பட்ட சாலைகள் இன்னமும் மணல் சாலைகளாகவே உள்ளன. அவற்றைச் சீரமைக்க சபைக்குக் கிடைக்கும் வருமானம் போதாது. அரச நிதிகள் மூலமாகவே அபிவிருத்தி மேற்கொள்ள முடியும். நாம் எந்தநேரமும் தயார் நிலையில் இருந்தால் அரசின் மூலமாகக் கிடைக்கும் நிதியின் மூலம் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வீதிகள் பலவற்றை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும் அவர் கூறினார்.

அந்தக் கருத்துகளை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்.

(4.9.159)

# புகைப்படக் கண்காட்சி



யாழ்ப்பாணம்.ஓக 9

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பியல் ஊடகமும் மற்றும் சித்திரக்கழகமும் இணைந்து நடத்திய புகைப்படமற்றும் சித்திர கண்காட்சி அண்மையில் கல்லூரியின் பேச் மண்டபத்தில் கழக தலைவர் ஸ்ரீ.சாதுசன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கல்லூரியின் அதிபர் விருந்தினராக கலந்துகொண்டு நடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

# முத்துக்குமரன் நூல் வெளியீடு



தென்மராட்சி ஓக. 9

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோவில் குடமுழுக்கை முன்னிட்டு சி.மதீசன் எழுதிய முத்துக்குமரன் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயமண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வெளியீட்டுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறைதலைவர் பேராசிரியர் சி.நிமலதாசனும், மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் நிகழ்த்தினர். (9)

# ஆடி அமாவாசைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 9

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை அபிசேகம், பூசைகள் இடம்பெறும். காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெறும் பின்னர் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

# கூவில் தீபஜோதி ச.ச.நிலைய விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 9

வடமராட்சி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆடிஅமாவாசை தினமான நாளை மறுதினம் சனிக்கிழமை விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு இடம்பெறவுள்ளது.

இது கூவில் தீபஜோதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. விளையாட்டு நிகழ்வில் மரதன் ஓட்டம், 1500மீற்றர் ஓட்டம், பலூன்உடைத்தல், அஞ்சல் ஓட்டம், மற்றும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன. வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(4)

# கலந்துரையாடல்கள் மூலமாக அபிவிருத்திகள் பற்றி ஆராய்வு

கொடிகாமம், ஓக. 8

கிராம அபிவிருத்தித் திட்டத்துக்கான கலந்துரையாடல்கள் கிராம உத்தியோகத்தர்கள் தலைமையில் கெற்பேலி, கச்சாய், விடத்தற்பளை, பாலாவி, ஆகிய கிராமங்களில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றன.

அதில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடி ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருதிட்டத்தைச்செயற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி,கெற்பேலிக் கிராமத்தில் செல்லப்பா வீதியைச் சீரமைப்பது என்றும்,

விடத்தற்பளைக் கிராமத்தில் சம்பாவெளி இந்து மயானம் அபிவிருத்தி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பாலாவி கிராமத்தில் வாகையடி வீதியைச் சீரமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கச்சாய் கிராமத்தில் கச்சாய் துறைமுக வீதியைச் சீரமைப்பது என்றுதீர்மானிக்கப்பட்டது.

(4.159)

# துப்புரவாக்கிச் சீராக்கப்பட்டது சோனகன்புலவு இந்து மயானம்



கொடிகாமம், ஓக. 9

கொடிகாமம் சோனகன் புலவு பொது இந்து மயானம் துப்புரவு செய்யப்பட்டு தற்போது சீராக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு பொதுமக்கள் திண்மக்கழிவுகளைக் கொட்டியிருந்தனர். அதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இந்தநிலைமைகளைக் கருத்திற்கொண்டு புதிய பிரதேச சபையைப் பொறுப்பேற்ற பின்னர் உபதவிசாளர் செ.மயூரன் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலில் உரிய மயானத்தில் இருந்த திண்மக்கழிவுகள் அனைத்தும் அருகு வெளிப் பகுதிக்கு மாற்றப்பட்டு புதைத்தும் எரித்தும் முகாமை செய்யப்பட்டது.

உரிய மயானம் எந்தவிதமான திண்மக்கழிவுகளும் அற்ற தூய்மையான மயானமாகத்தற்போது காட்சியளிக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(4,159)




பருத்தித்துறை வீதியில் பயணித்த மகிழுர்ந்து கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதி விபத்துக்குள்ளானது. மகிழுர்ந்தின் முன்பக்கம் சேதமடைந்தது. தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்தச் சம்பவம் பருத்தித்துறைச் சந்தி பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகில் நேற்று மாலை 5.45 மணியளவில் நடைபெற்றது. (67)

# பெருந்திருவிழா

சாவகச்சேரி ,ஓக. 9

சாவகச்சேரி அருள்மிகு சிறி துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பன்னிரண்டு நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத்தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

காணி ஆணைக்குழு வழங்கிய காணிகளில் வசிப்போர்

# பணம் செலுத்தினால்தான் காணிக்கான உறுதி வரும்

யாழ்ப்பாணம், ஓக. 9

காணி சீர்திருத்த ஆணைக்குழு வழங்கிய காணியில் தங்கி இருப்போர் பயன்பாட்டுப் பணத்தைக் கட்டாயம் விரைவில் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தினால்தான் ஒவ்வொருவரும் காணி உறுதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வடக்கு பிராந்திய காணி சீர் திருத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கில் காணி இல்லாதவர்கள் வசிப்பதற்கென 1978ஆம் ஆண்டு தொடக்கம் பல ஏக்கர் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அந்தக் காணிகளில் இன்றும் பலர் குடும்பங்களாக வசித்து வருகின்றனர். வடக்கு மாகாண மக்களின் தேவைகளை அறிந்து அந்தக் காணிகள் வழங்கப்பட்டன. அந்தக் காணிகளுக்கான உறுதிகள் தற்போது வழங்கப்படவுள்ளன. இந்தவருடம் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களுக்குக் காணி உறுதிகள் வழங்கவேண்டிய தேவை உள்ளது.

ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் பல குடும்பங்கள் வசிக்கக்கூடியதாக நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கான வீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு உதவிகளுக்குக் காணி உறுதி அவசியம். அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும். வழங்கப்பட்ட காணிகளுக்குப் பயன்பாட்டுப் பணமாக ஒரு ஏக்கருக்கு வருடாந்தம் 650 ரூபாவை அனைவரும் செலுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு செலுத்தினால்தான் தற்போது குடியிருக்கும் காணிகளுக்கான அளவிடும் வேலைகள் நடைபெற்று உறுதி வழங்குவதற்காகத் தலைமைப் பணியகத்துக்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்கமுடியும். ஒரு குழுமமாக வழங்கப்பட்ட காணியில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் இந்தப் பணத்தைக் கட்டுவது அவசியம்.

ஒருவர் பணம் கட்டவில்லை என்றாலும் பணம் கட்டிய பற்றுச் சீட்டுப் பிரதியைத் தலைமைப் பணியகத்துக்கு எங்களால் அனுப்ப முடியாது. அனுப்பாவிட்டால் காணிகளுக்கு உறுதிகள் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அதற்கான பயன்பாட்டுப் பணத்தைச் செலுத்துவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக காணி சீர் திருத்தக் கிளையுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (4.7)

# மைதானம் அமைப்பதற்கு தெரிவு செய்த இடம் பொருத்தமல்ல என்கிறார் சபைத் தவிசாளர்

யாழ்ப்பாணம், ஓக. 9

அராலியில் மைதானம் அமைப்பதற்கு அந்தந்தப் பிரதேச இளைஞர்களால் தெரிவு செய்யப்பட்ட இடம் பொருத்தமற்றது. மழை நீர் தேங்கி 3 அடி உயரத்துக்கு நிற்கின்ற இந்தப் பிரதேசத்தைச் மண் போட்டு உயர்த்தினால் அந்த இடத்தில் தேங்காது, அருகில் உள்ள குடிமனைகளுக்குள் தண்ணீர் சென்று சேதமாக வாய்ப்புகள் உருவாகிவிடும் என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் தெரிவிக்கிறார்.

"மாரிகாலத்தில் மூன்றடி வெள்ளம் தேங்கி நிற்கும் அராலி வடக்கு ஜே-164, அராலி கிழக்கு ஜெ-163 பிரதேசத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பது பொருத்தமற்றது" என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

தெல்லிப்பளையில் இருந்து ஆரம்பிக்கும் பெரும்போக மழைநீர் ஐந்து கண்மதகு ஊடாக அராலி வடக்கு- அராலி கிழக்கு வழுக்கையாற்று பகுதியிலேயே முடிவடைகின்றது. எனவே வெள்ளம் தேங்கும் பகுதியில் மைதானம் அமைக்கும் முயற்சியைக் கைவிட்டு பொருத்தமான மழைநீர் தேங்காத மேட்டு நிலத்தில் மைதானம் அமைக்குமாறு அராலி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, அராலி வடக்கில் மைதானம் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் நிரந்தர கள்ளுத்தவறணை ஒன்றும் உள்ளது. பல மில்லியன் ரூபா செலவில் வழுக்கையாற்று நீர்த்தேக்கத் திட்டம் 2014இல் மீள்சீரமைப்புச் செய்யப்பட்டு மழைநீர் கடலுக்குள் செல்லாது பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பிரதேசத்தில் மைதானம் அமைப்பது தொடர்பான அனுமதியை வலிகாமம் மேற்கு பிரதேச சபையோ, வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமோ வழங்கக்கூடாது என்று மக்கள் கோருகின்றனர். இதேவேளை, இளைஞர்கள் விளையாடுவதற்கு ஏற்ற மழை தேங்காத மேட்டு நிலத்தைத் தெரிவுசெய்து பொருத்தமான விளையாட்டு மைதானத்தை அமைக்குமாறு இளைஞர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக தவிசாளர் நடனேந்திரனிடம் கேட்டபோதே, அந்த டம் பொருத்தமற்றது என்று தெரிவித்தார்.

இளைஞர்களால் இனங்காணப்பட்ட இடத்துக்கு அருகில் கள் விற்பனை நிலையம் இருக்கின்ற காரணத்தால் அதனூடாக வேறுவிதமான பிரச்சினைகள் உருவாக வாய்ப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் இந்த மைதானம் அமைப்பது தொடர்பில் பிரதேச சபைக்கு விடயம் பாரப்படுத்தப்படவில்லை. பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர்கள் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான அனுமதிகள் வழங்குதல் இல்லாமலாக்கல் என்பன மாகாண காணி ஆணையாளர் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று மேலும் தெரிவித்தார். (4.114)

# பூதவராயருக்கு 17இல் கொடி

கொடிகாமம், ஓக. 9

சுன்னாகம் கிழக்கு சிவபூதவராயர் ஆலய பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. தினமும் காலைப் பூசை 8 மணிக்கும் மாலைப் பூசை 6மணிக்கும் நடைபெறும் என்றும் ஆலய முதன்மைக் குரு தெரிவித்துள்ளார். (4.159)

# கிணற்றுக்குள் வீழ்ந்தவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஓக. 9

வலிப்பு ஏற்பட்டதால் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த இளைஞர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் யாழ்ப்பாணத்தில் வடமராட்சியின் புலோலி மேற்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த மகிபாலன் சதீஸ்வரன் (வயது - 28) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 30ஆம் திகதி பிற்பகல் அவரது வீட்டில் குளித்துவிட்டு ஆடை மாற்றியபோது அவருக்கு வலிப்பு ஏற்பட்டுக் கிணற்றுக்குள் வீழ்ந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அயலவர்களால் மீட்கப்பட்ட அவர் மலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். (4)

# சிறி பாரதி வித்தியாலய பரிசளிப்பு சிறப்புற்றது






யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் சிறிபாரதி வித்தியாலய பரிசளிப்பு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி ஆ. இராசரத்தினம் தலைமையில் பரிசளிப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லயன் கலாநிதி சு.சி.அருளானந்தம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்) பு.ஈழநேசன் கலந்துகொண்டார். மதிப்புறு விருந்தினர்களாக ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி கா.உதயகுமார், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் வித்தியாலய பழைய மாணவன் பூ. அகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (4.159)



யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சங்கானை இந்து இளைஞர் மன்ற கல்வி கலாசாரத் துறையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (126)



யாழ்ப்பாண நகரில் கஸ்தூரியார் வீதியில் உள்ள கால்வாயைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார். வடிகால்வாய் ஊடாகக் கழிவுநீர் வழிந்தோடுவது தடைப்பட்டதையடுத்து அந்த இடத்தில் சுகாதாரச் சிக்கல் ஏற்பட்டது. அதனையடுத்து அது சீரமைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (4.17)



## போராளி குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம்,ஓக.9

முல்லைத்தீவில் போரில் 3 பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளி குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ், முல்லைத்தீவில் வசித்துவரும், போரில் 3 பிள்ளைகளை இழந்தும், மேலும் இரு பிள்ளைகள் போரில் காயப்பட்ட நிலையிலும் மிகுந்த நலிவான பொருளாதாரச் சூழலில் வாழ்ந்துவரும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு நாளுக்கு 9 போத்தல் பால் வழங்கத்தக்க ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான பசுமாடும், பசுக்கன்றும் வழங்கப்பட்டது. இந்த வாழ்வாதார உதவியின் தேவையை நேரில் சென்று உண்மைத்தன்மையை உறுதி செய்து பசுமாட்டையும், பசுக்கன்றினையும் நேற்று முன்தினம் சங்க உறுப்பினர்கள் வழங்கிவைத்தனர். (113)

# பாக்குநீரிணையின் 12 தீடைகளில் மீன்பிடிப்பதற்கு அனுமதியுங்கள்

## கடற்படையினரிடம் கோருவதற்கு முடிவு

**மன்னார், ஓக. 9**

**மன்னார் கடல் பகுதியில் பாக்குநீரிணையில் அமைந்துள்ள பன்னிரண்டு தீடைகளில் (மண் திட்டி) தலைமன்னார் மீனவர்கள் முன்னைய காலங்களைப் போன்று கடற்றொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கடற்படையினரிடம் கோரிக்கை விடுவது என மன்னார் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

கடந்த திங்கட்கிழமை ,மன்னார்மாவட்ட.2ஆவதுஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், இணைத் தலைவர்களான வடக்கு மாகாண சபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் றிசாட் பதியுதீன், பிரதி அமைச்சர் கே.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தலைமையில்நடைபெற்றது. கூட்டத்தில் கடற்தொழில் சம்பந்தமாக ஆராயப்பட்டபோது , தலைமன்னார் மீனவர்கள் பாக்கு நீரிணையில் அமைந்துள்ள தீடை எனஅழைக்கப்படும்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் போது ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கடற்தொழில் திணைக்கள அதிகாரி தெரிவிக்கையில் தலைமன்னாரிலிருந்து தனுஸ்கோடி வரையும்பாக்குநீரிணையில் 12 தீடைகள் காணப்படுகின்றன.இவற்றில் ஒன்றிலிருந்து எட்டு வரைக்குமான தீடைகள் இலங்கைக்குரியதாக காணப்படுகின்றது. இந்த எட்டுத் தீடைகளிலும் முன்னையக்காலத்தில் இலங்கை மீனவர்கள் குறிப்பாக தலைமன்னார் கிராம மீனவர்கள் இறங்கி நின்று அடசு வலை என்ற தொழில் மூலம் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் தற்பொழுது ஒன்றிலிருந்து எட்டு வரையும் உள்ள தீடைகளில் மூன்றாவது தீடையை வனவிலங்கு திணைக்களம் பறவைகள் முட்டையிடும் இடமாக மாற்றி வைத்துள்ளது.

மற்றைய நான்காவது தீடையைக்கடற்படையினர் வைத்திருக்கின்றனர். எட்டு தீடைகளில் இந்த இரண்டையும் விட ஏனையவற்றில் தலைமன்னார் மீனவர்கள் பகல் நேரத்திலாவது சுதந்திரமாக இறங்கி நின்று அடசு வலை மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள கடற்படையினருக்கு தெரிவிக்க வேண்டும் எனவும்கூட்டத்தில்தீர்மானம் எடுக்கப்பட்டது. (60)

## தொற்றாத நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு

கிளிநொச்சி ,ஓக.9

தொற்றாத நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது .

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளையோர்களுக்கான கருத்தரங்கு, எதிர்வரும் 13,14, 15 ஆகிய திகதிகளில், ஜெயந்திநகரில் உள்ள காந்தி சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் கரைச்சிப் பிரதே சத்தில் இருக் கும் 25 இளையோர்களுக்கு சந்தர்பம் உள்ளது பங்கு பற்ற விரும்பியவர்கள் கரைச்சி பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரியை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது . (222)

## நடுவர் சபை தற்காலிக இடமாற்றம்

இதுவரை காலமும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்த நடுவர் சபை உயர்தரப் பரீட்சை நடைபெறும் காரணத்தால், எதிர்வரும்12ஆம்திகதி புதுக்குடியிருப்பு சி.சி.பாடசாலையில் நடைபெறும் எனத் தவிசாளர் எஸ்.சுந்தரலிங்கம் தெரியப்படுத்திக் கொள்கிறார். (323)

## மணல் ஏற்றுவதற்குக் கிராம அலுவலர்கள் அனுமதி வழங்குவது தடை செய்யப்பட்டது

கிளிநொச்சி, ஓக. 9

விற்பனைக்காக மணல் ஏற்றி நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டு பிணை விண்ணப்பத்துக்காக கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் விண்ணப்பத்துக்கு வருபவர்களுக்கு, அதனை வழங்கக் கூடாது என்ற தீர்மானத்தை முகமாலை கிராம மட்ட அமைப்புக்கள் எடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே முகமாலை.

இந்தக் கிராமம் போரினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் ,அங்குள்ள மக்கள் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு கிராம கட்டமைப்புக்களை படிப்படியாக் வளர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது மணல் கொள்ளை பெரும் பிரச்சனையாக காணப்படுகின்றது. குறிப்பாக வேம்பொடுகேணி அல்லிப்பளை போன்ற பகுதிகளில் இருந்து, மணலைக் கடத்தும் மணல் கடத்தல் காரர்கள் முகமாலை தெற்கு வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அதே போல் முகமாலை தரவைப்பகுதியிலும் தொடர்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

நாளடைவில் உவர் தண்ணீர் கிராமத்தை நோக்கி வரக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை உரிய அதிகாரிகளால் மேற்க்கொள்ளப்படாத நிலையில் மக்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

நேற்று முன் தினம் குறித்த கிராமத்தின் அமைப்பு ஒன்றின் கலந்துரையாடல் இடம்பெற்ற வேளை, மணல் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடிய போதே மக்கள் பல்வேறு முறைப் பாடுகளைத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து குறித்த கிராமத்தில் உள்ளவர்களின் ஆதரவின்றி மணல் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. இதனால் குறித்த கிராமத்தில் உள்ளவர்கள் மணலை விற்பனைக்காக ஏற்றி பொலிஸாரால் பிடிக்கப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்துகின்ற போது, சில சந்தர்ப்பங்களில் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர் .

அவ்வாறு பிணையில் விடும்போது சாட்சியாளர்கள் கிராம அலுவலரின் சான்றிதழ் பெறவேண்டும் அவ்வாறு வருபவர்களுக்கு சான்றிதழ் வழங்கக்கூடாது என மக்கள் கேட்டுக் கொண்டனர் . அதனை தாம் நடைமுறைப்படுத்துவதாகவும் கிராம அலுவலர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (6)



## ஆலயங்களுக்கு நிதி வழங்கல்

வவுனியா, ஓக.9

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவினால் குறித்தொதுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதனநன்கொடை நிதியிலிருந்து,புதுக்குளம் பட்டிக்குடியிருப்பு விநாயகர் ஆலயம்,குளவிசுட்டான் ஈட்டிமுறிஞ்சான் விநாயகர் ஆலயம், ஆனந்தர்புளியங்குளம் சிறிநாக கண்ணகையம்மன் ஆலயம், விஞ்ஞானங்குளம்,இயேசுகிறிஸ்து பூரண சுவிஷேசசபை போன்ற ஆலயங்களுக்கான மீள் அமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கான காசோலையை ஆலயநிர்வாகசபைத் தலைவர் செயலர், பொருளாளர்,அங்கத்தவர்களிடம் வவுனியா வடக்குபிரதேசச்செயலக அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதேசச் செயலகத் திட்டமிடல் பகுதி அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

## லேகியம் வைத்திருந்த நபர் கைது

கிளிநொச்சி. ஓக. 9

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாச்சிக்குடா பகுதியில் 5 லேகியத்தினை உடமையில் வைத்திருந்த நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த லேகியத்தைப் புத்தளம் பகுதியில் இருந்து வாங்கி வந்ததாகவும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

சான்றுப்பொருளையும் சந்தேக நபரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

## நோயால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு கிணறு அமைத்து கையளிப்பு

கிளிநொச்சி,ஓக.9

கொடிய நோயால் பாதிக்கப்பட்டு படுக்கையில் உள்ள தாயின் பொறுப்பை, கல்வியை நிறுத்தி சுமந்த சிறுவனின் குடும்பத்துக்கு புலம்பெயர் உறவுகளால் உதவி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் வாழ்ந்துவரும் குறித்த குடும்பம் பல்வேறு பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றது.

குடும்பத்தின் நிலைமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பிரதேச சபை உறுப்பினர்களான ஐயம்பிள்ளை அசோக்குமார், குமாரசாமி தர்ம ராசா ஆகியோரின் முயற்சியினால் , குறித்த குடும்பத்திற்கு ஒரு இலட்சத்து 4 ஆயிரம் பெறுமதியான குழாய்க்கிணறு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

குடும்பத்தின் நிலைமைதொடர்பில் புலம்பெயர் உறவுகளின் உதவிக்கரம் கோரப்பட்டதும் , அதற்கமைய குறித்த குடும்பத்தின் நிலையை அறிந்த பிரான்ஸ் நாட்டில் தொழில் அதிபராக உள்ள கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் விந்துசனால் நிதி அனுப்பப்பட்டு குழாய் கிணறும், அதற்கான நீர்ப் பம்பியும் பொருத்தி குறித்த குடும்பத்தாரின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. (6)



see more news in
NEWUTHAYAN.COM



## மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு

# உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய இதய கண்காணிப்பு நிலையம்



மன்னார்,ஓக.9

ஐக்கிய இராட்சியத்தில் உள்ள மன்னார் நலன்புரி ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராட்சியம் ஆர்.ஆர். அமைப்பு ஆகியவற்றின் நிதி உதவியுடன், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட 'உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய இதய கண்காணிப்பு நிலையம்' நேற்றுக் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் இயக்குநர் மருத்துவ கலாநிதி கில்றோய் பீரிஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த நிலையத்தை திறந்து வைத்தார்.

சுமார் 2.8 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய இதய கண்காணிப்பு உபகரண தொகுதிகள் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த உடற்பயிற்சி நிலையத்தின் ஊடாக இதயம் சார்ந்த நோய்களைக் கண்டறிந்து கொள்ள முடியும். இந்த நிகழ்வில் ஐக்கிய இராட்சியத்தில் உள்ள மன்னார் நலன்புரி ஒன்றியத்தின் பிரதி நிதி மைக்கல் சுப்பிரமணியம்,சர்வமத தலைவர்கள், மருத்துவர்கள், சிறப்பு மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (56,213)



# சிற்றுண்டிச்சாலை திறப்பு

வவுனியா, ஓக.9

வவுனியா, நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் சிற்றுண்டிச்சாலை திறப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலையின் அதிபர் செ.பவேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும், சிறப்பு விருந்தினராக .ஜே. இராஜ்குமாரும், ப.நிஷாந்தன் சுகாதார மருத்துவப் பரிசோதகர் நெடுங்கேணி,மற்றும் சமந்த குமாரசேன (பொலிஸ் ஆய்வாளர் , நெடுங்கேணி) பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழையமாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)



# மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டது

மன்னார்,ஓக.9

வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் நிதியின் மூலம் மன்னார் மாவட்ட மருத்துவமனையின் பயன்பாட்டுக்கென நோயாளர் காவு வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.. அமைச்சர் ஜீ.குணசீலனால் நேற்று மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரிடம் காவு வண்டி கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (213)

# மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்ட பாலம்

மன்னார்,ஓக.9

கடந்த 2016 ஆம் ஆண்டு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை சிறப்புத் திட்டங்கள் முகாமைத்துவப் பிரிவும் இணைந்து, யப்பான் பன்னாட்டு கூட்டுத்தாபன முகவர் உதவியுடன்,தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பிலுள்ள, பெரிய பாலங்கள் நிர்மாணிப்பதற்கான கருத்துத் திட்டம் ஒப்பந்தப்பிரிவு இரண்டின் கீழ் , முசலிப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மறிச்சுக்கட்டி பிரதான பெரிய பாலம் அமைப்புப்பணிகள் பூர்த்தியாகி மக்கள் பாவனைக்கு நேற்றைய தினம் சாதாரணமாகத் திறந்துவிடப்பட்டுள்ளது .

இந்தப் பாலத்தின் கட்டுமானப்பணிகள் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2018 ஜூலை இறுதியில் நிறைவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது . (213)



# முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கிளிநொச்சி ,ஓக. 9

2018 ஆம் ஆண்டுக்கான சிறு தொழில் முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு இந்த மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவில் நடைபெறவுள்ளது. இதில் சிறு தொழில் முயற்சியில் ஈடுபடும் ஆர்வம் உள்ளவர்கள் பங்குபற்ற முடியும் எனவும், மேலதிக தகவலுக்கு கரைச்சிப் பிரதேச சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பணியாளரைத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (222)

# வட்டக்கச்சி சிறிரங்கநாத பெருமாள் திருவிழா

கிளிநொச்சி ,ஓக.9

வட்டக்கச்சி, சிறிரங்கநாதப் பெருமாள் கோவிலின் 2018ஆம் ஆண்டின் பிரமோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அபிசேகம் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி வழிபாடு பூசைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு கொடியேற்றம் நிகழவிருக்கிறது.

அன்றில் இருந்து 12 நாள்கள் பிரமோற்சவம் சிறப்பாக காலையும், மாலையும் இடம்பெற இருக்கிறது.

செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், அதன் மறுநாள் பூங்காவனமும் திருக்கல்யாணமும் இறுதிநாள் ஆஞ்சநேயத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

# வயோதிபத் தாயின் பாராட்டை மெய்ச்சி கண்கலங்கிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்



வவுனியா, ஓக. 9

வயோதிபப் பெண்ணின் கருத்தைக் கேட்டு கண் கலங்கிய வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அந்தப் பெண்ணின் காலில் வீழ்ந்து, வணங்கிய சம்பவம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

பிரதிப் பொலிஸ்மா அதிபரை, மகன் என்று விழித்து அந்தப் பெண்ணும் அழுதது அந்நிகழ்வு சிறிது நேரம் சோகமயமானது.

வன்னிப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சேவையைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த வயோதிபத் தாயொருவர் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு நன்றி தெரிவித்தார்.

இதன்போது:- மக்களுக்கு நல்ல வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரால் எனது பிள்ளைகளின் நலனுக்காக வீடு ஒன்று அமைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது. அவரை எனது மகனுக்குச் சமனாகவே என்னால் நினைத்துப் பார்க்க முடிந்துள்ளது. இவ்வாறானஒரு வேலைத்திட்டத்தை எனக்குச் செய்து தந்துள்ளார் என்று தெரிவித்து கண்ணீர் மல்கினார்.

நிகழ்வில் குறித்த விடயத்தை அவதானித்துக் கொண்டிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் எழுந்து சென்று அந்தத்தாயை அரவணைத்து, கண்கலங்கினார். தாயின் காலில் வீழ்ந்து வணங்கினார்.. இந்தச் சம்பவம் கலாசார மண்டபத்தில் கூடியிருந்தவர்களை மனதுருகச் செய்தது.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த வயோதிப தாயே அவர். அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவரது பிள்ளைகளுடன் வசதியற்ற நிலையில் வசித்து வந்துள்ளார். இதையடுத்து வன்னிப்பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் பொலிஸாரின் பங்களிப்புடன் அவருக்கான நிரந்தரவீடு அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## தமிழ் கூறும் நல்லுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது

### கருணாநிதியின் இறப்புக்கு விக்னேஸ்வரன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 9

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் மு.கருணாநிதியின் மறைவுச் செய்திகேட்டுத் தமிழ் கூறும் நல்லுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

அவர் அனுப்பிய அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

கருணாநிதி 94ஆவது வயதில் முதுமையின் நியதிக்கு ஏற்பவே காலமாகியுள்ளார். எனினும் அவர் தமிழ் மக்களின் கருத்தியலிலும், தமிழக அரசியலிலும், தமிழ்க் கலை இலக்கியத்திலும் ஆற்றிய மகத்தானபணிகளும்நிகழ்த்தியசாதனைகளும்அவரை மறக்கமுடியாதவை.

கருணாநிதி சுமார் 60ஆண்டுகாலம் தொடர்ந்து மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். 5 தடவைகள் முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார். இது சாதாரணமான ஒருநிகழ்வல்ல. நவீன இந்திய அரசியல் வரலாற்றில் இவருக்குத் தனித்துவமான ஒருவரலாறு அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

தகவல் தொழில்நுட்பத்துறை ஒருபுரட்சியை உண்டாக்கும் எனபதை முன்கூட்டியே கணித்து இந்திய நாட்டிலேயேமுதல்முறையாகத்தமிழகத்தில்தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கினார்.

தமிழ் மொழிமீது தீராப் பற்றுமிக்க கருணாநிதி, தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர்களுக்குப் பணிநியமனங்களில்20சதவீதம்இடஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்தார். தமிழுக்குச்செம்மொழிஅங்கீகாரத்தைப் பெற்றுத் தந்ததோடு, செம்மொழித் தமிழ் ஆய்வுக்காகச் சென்னையில் மையநிறுவனம் ஒன்றையும் உருவாக்க வழிவகுத்தார். இணைய உலகில் தமிழ் முன்னேறிற்க விதைபோடும் நிகழ்ச்சியாக உலகத்தமிழ் இணைய மாநாட்டைக் கூட்டினார்.

அவர் இலங்கைத் தமிழர்களுக்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தார். எனினும், முள்ளிவாய்க்காலில் தமிழ் இன அழிப்புப் போர் உக்கிரம் பெற்றிருந்தபோது மைய அரசுக்குக் கூடுதல் அழுத்தங் கொடுத்து அழிவைத் தடுத்திருக்கமுடியும் என்ற ஆதங்கம் எம் மக்களிடம் இன்றும் உண்டு.

அவரின்மறைவால் துயருற்றிருக்கும் அவரதுகுடும்பத்தவர்களுக்கும் அவரது தொண்டர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (4)

# அரசியல் ரீதியாகக் கருணாநிதி பல வழிகளிலும் உதவிவந்தவர்

### இரா.சம்பந்தன் அஞ்சலியில் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஒக. 9*

*தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, அரசியல்ரீதியாக எமக்குப்பல்வேறு வகையில் உதவியாக இருந்தார். இறக்கும்வரை அவருடனான உரையாடல் தொடர்ந்தது. அவரின் பிரிவு என் மனதில் ஆழ்ந்த கவலையைத் தருவதாக உணர்கின்றேன்.*



இவ்வாறு, இலங்கை நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் விடுத்த இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முதுபெரும் தமிழறிஞர், உலகத்தமிழர்களின் உன்னத தலைவர், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி காலமானார் என்றசெய்தியை அறிந்துபெரும் இழப்பு ஒன்று ஏற்பட்ட துயரத்தை என் மனதில் உணர்ந்தேன்.

கருணாநிதிக்கும் எனக்கும் மிகநீண்ட காலமாகநெருங்கியதொடர்புகளும்,உறவுகளும் இருந்து வந்தன. நான் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்திலும், அதன் பின்பும் அவர் எனக்குப் பல்வேறு வழிகளில்ஒத்துழைப்பும்,ஆலோசனைகளும் வழங்கியிருந்தார். அவர்இறக்கும்வரை அன்பான தொடர்புகளும், உரையாடல்களும் தொடர்ந்தன. தமிழ்த் தலைவர் தந்தை செல்வநாயகம், தலைவர் அமிர்தலிங்கம் உட்பட இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் பலர் தமிழ்நாட்டில் சீவித்த காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் அவரின் அன்பும் எமக்கான ஒத்துழைப்பும் அதிகமாக இருந்தது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளிலும் அவர்மிகுந்தஈடுபாடுகாட்டினார். கலவர காலங்களில் தமிழ்மக்கள் அடைந்த துயரங்கள் வேதனைகளில் தனது கரிசனையைக் காண்பித்து, இந்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயற்பட்டார். அவரின் பிரிவால் இலங்கைத் தமிழ் மக்களும் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளனர். அந்த மக்கள் சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும், எனது சார்பிலும் எனது ஆழ்ந்த கவலைகளையும், அனுதாபங்களையும் மறைந்த தலைவரின் குடும்ப உறவினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத் தமிழர்களின் உதய சூரியனாக இருந்துஒளியூட்டியஅவரின்மறைவுஈடு செய்ய முடியாதஒரு பேரிழப்பு - என்றுள்ளது. (4)

## பாடசாலைக்கல்வி ஊடாக மட்டுமே படிப்பு வருவதல்ல என நிரூபித்தவர்

யாழ்ப்பாணம், ஒக. 9

படிப்பறிவுஎன்பது வெறும பாடசாலைக்கல்வியின் ஊடாகமட்டுமேவந்துவிடுவதில்லைஎன்பதைநிரூபித்துக் காட்டியவர் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி. இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. கலைஞர் கருணாநிதியின் இறப்புத் தொடர்பில் முன்னணியின் தலைவர்க. பிறேமச்சந்திரன் விடுத்துள்ள இரங்கல உரையில்தெரிவிக்கப்பட்டதாவது:

பள்ளிப்படிப் பைக்கூட நிறைவு செய்யாத கலைஞரின் படைப்புக்கள் கலாநிதிப் பட்டத்துக்காக ஆய்வு செய்யப்படுகின்றன. நாம் அவரிடம் இருந்து கற்பதற்குநிறையவேஇருக்கின்றன. ஈ.பி.ஆர்.எல். எவ், ஈரோஸ் மற்றும் ரெலோ ஆகிய இயக்கங்கள்1984 இல் ஒன்றிணைந்துஈழ தேசிய விடுதலைமுன்னணியை உருவாக்கிய வேளையில் சென்னை மைலாப்பூர் மாங்கொல்லையில்மிகப்பிரமாண்டமான பொதுக்கூட்டத்தைக் கூட்டி அந்த ஐக்கிய முன்னணியை அறிவித்தவர். - என்றுள்ளது. (4)

## தமிழுக்கு முன்னுரிமை கொடுத்தவர்

### மாகாணசபை உறுப்பினர் இரங்கல்

தமிழ் மீதுகொண்ட பற்றுக்காரணமாகஅவருந்திரைப்படங்களிலும்கவிதைகளிலும்பாடல்களிலும் அரசியல் பேச்சுகளிலும் தமிழை முன்னிலைப்படுத்தி கருத்துக்களை வெளியிடும் சிறந்ததலைவர்கருணாநிதி.

இவ்வாறு வடக்கு மாகாண சபைஉறுப்பினர்சி. அகிலதாஸ் குறிப்பிட்டுள்ளார். கலைஞர் கருணாநிதியின் இறப்புப் பற்றிய இரங்கல் உரையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது.

தமிழகத்தின்தலைசிறந்தஅரசியல் தலைமையையும் தமிழ் அறிஞனும்சினிமாத்துறையில் தனக்கென்று ஒரு தனித்துவத்தைநிலைநாட்டியவர்.

ஈழத்தமிழ் மக்களுக்காகப்பல்லாண்டு காலம் ஓங்கிக் குரல் கொடுத்தவர். ஈழத்தமிழருக்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவியுள்ளார். அவரின்காலத்தில்வடக்கு-கிழக்குஇணைந்த மாகாணசபை தமிழ்மக்களுக்குக் கிடைக்கப்பெற்றது - என்றுள்ளது. (4)

## கன்னித் தமிழ் உள்ளவரை கலைஞரின் புகழ் இருக்கும்

### அமைச்சர் திகாம்பரம் இரங்கல்

கன்னித் தமிழ் உள்ளவரை கலைஞர் கருணாநிதியின் புகழ் காலமெல்லாம் நிலைத்திருக்கும் என்று மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்புவசதிகள்மற்றும்சமூகஅபிவிருத்தி அமைச்சர்பி. திகாம்பரம்தெரிவித்துள்ளார். அவர்விடுத்தஇரங்கல் குறிப்பில்இவ்வாறு தெரிவித்துள்ளார். (4)

## கருணாநிதியின் திறமைகள் எம்மைப் பிரமிக்க வைக்கின்றன

### இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 9

கலைஞர் கருணாநிதியின் பன்முகத்திறமைகள் எம்மைப் பிரமிக்கவைக்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிய இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது,

அவருடையஅனுபவம்யாருக்கும் இல்லைஎன்றேகூற வேண்டும். தமிழ்சினிமாவில்அவருடையசாதனைகள்வானுயர்ந்து நிற்கின்றன. உலகத் தமிழர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்த மாபெரும் தலைவனின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பு. சிறந்த கலைஞனாக, தமிழ்ப் பற்றாளனாகத் தமிழ் சினிமாவின் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய ஒருதலைவனாக அவர் திகழ்ந்துள்ளார். தமிழக அரசியல் வரலாற்றில்என்றுமேமறக்கமுடியாத மாபெரும்தலைவன். எத்தனைபோராட்டங்கள், எத்தனைசவால்கள், எத்தனைஎதிர்ப்புகள் அத்தனையையும்உடைத்தெறிந்துதன்னுடையஇலக்கை நோக்கிப்பயணித்த தலைவன் - என்றுள்ளது. (4)

## துருவ நட்சத்திரம் மறைந்து விட்டது

### உறுப்பினர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 9

அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்தியா முழுவதும்அரசியல்வானில்கொடிகட்டிப்பறந்த துருவ நட்சத்திரம்மறைந்து விட்டது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டஅபிவிருத்திச்சபையின் முன்னாள் தலைவரும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினருமான ஆ.ந.இராசேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மறையாம் திருக்குறளையும்அதனைஉலகுக்கு ஆக்கி அளித்த திருவள்ளுவரையும் தலைமேல் தாங்கிக் கொண்டாடிய தங்கத் தமிழன். ஆயிரத்து முன்நூற்று முப்பது குறளையும் கல்லில் பதித்து வள்ளுவர் கோட்டம் கண்ட வளவன். நூற்றுமுப்பத்திமூன்று அத்தியாயத்தைக் குறிக்கு முகமாகநூற்றுமுப்பத்திமூன்று அடிஉயரமானதிருவள்ளுவர் சிலையை காலத்தால் அழியாத விதத்தில் கன்னியாகுமரியில் அமைத்த தமிழ் காவலன். குறளோவியம்என்னும்தலைப்பில் திருக்குறளுக்குபுதியவிளக்கமளித்து எமக்கு அறிவூட்டிய ஆசான்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறையுள்ள தலைவராக இருந்து இலங்கைத்தமிழர் பிரச்சினையால்இருதடவைகள்முதலமைச்சர் பதவியையும் இழந்தவர். அத்தகைய கருணாநிதியின் மறைவு உலகத்தமிழர்களுக்குப் பேரிழப்பாகும்- என்றுள்ளது. (4)

## இலங்கை அரசியல்வாதிகளும் கருணாநிதிக்கு நேரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக. 9

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியின் உடலுக்கு, இலங்கையிலிருந்து பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் நேற்றுச்சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவர் கருணாநிதியின் உடலுக்கு இலங்கை அரசின் சார்பாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின்தலைவர்மனோகணேசன், பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர். அவர்கள் இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய இரங்கல் செய்தியைக் கருணாநிதியின் மகளான கனிமொழியிடம் வழங்கி அனுதாபங்களைத்தெரிவித்தனர்.

அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். திலகராஜ், வடிவேல் சுரேஷ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்அடைக்கலநாதன் ஆகியோரும்நேற்று அங்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

தவிர, இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ் கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர், நாடாளுமன்றஉறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான், மத்திய, ஊவா மாகாண அமைச்சர்களான எம்.ரமேஷ்வரன், செந்தில்தொண்டமான், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராஜதுரை ஆகியோர் சென்றிருந்தனர்.

கருணாநிதி நேற்றுமுன்தினம் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார். அவரது உடல் சென்னை ராஜாஜி அரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், அரசியல் கட்சியினர், திரைத்துறையினர் எனப் பலரும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (4)

### கீரிமலைப் புனித பிரதேசத்தில்

# புகைபொருள்கள் விற்பதற்கு சனிக்கிழமையிலிருந்து தடை!

### கடைக்காரர்களும் சம்மதம்

*யாழ்ப்பாணம், ஓக. 9*

புனிதபிரதேசமாகக்குறிப்பிடப்படும்கீரிமலைப்பகுதியில்புகையிலைமற்றும் புகைப்பொருள்கள்விற்பதற்குத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. நாளைமறுதினம் சனிக்கிழமை ஆடி அமாவாசை தினத்திலிருந்து இது நடைமுறைக்கு வரவுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கீரிமலைப் பிரதேசம் இந்து மதம்சார் புனிதபிரதேசமாகஅடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்தியேட்டிக் கிரியைகள், பிதிர்க்கடமைகளைநிறைவேற்ற கீரிமலைக்கு அன்றாடம் பலர் அங்கு செல்கின்றனர்.

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் இங்கு அமைந்துள்ளமையால்வழிபாடுகளை மேற்கொள்ளவும்பலபக்தர்கள்வருகின்றனர். அங்கு சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுக்கவேண்டும்என்றகோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பிரதேசசபை, தெல்லிப்பழைப்பிரதேசசெயலகம்மற்றும்சுகாதாரப்பரிசோதகர்களின் ஒத்துழைப்புடன், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அதன்படி கீரிமலைச் சுற்றாடல் மற்றும் அங்குள்ள உணவகங்கள் பல்பொருள் விற்பனை நிலையங்கள் சிறிய கடைகள் உட்பட அனைத்துக் கடைகளிலும் இந்தத்தடை நடைமுறைக்கு வருகிறது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அந்த அறிவித்தலின்படி குறித்த தினத்திலிருந்து புகைபொருள்களை விற்கப் போவதில்லைஎன்று அங்குள்ளகடைக்காரர்கள் தெரிவித்தனர்.

(4,114)

---

### வடக்கில் இந்த வருடம்

## பொலிஸாருக்கு எதிராக 40 முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கில் பொலிஸாருக்கு எதிரான 40 முறைப்பாடுகளில் 36 முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணமாவட்டச்செயலகத்தில் வடக்கு மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைந்துள்ளது. பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாடுகள் குறித்து அங்குஇந்தமுறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

கிடைக்கப்பெற்றமுறைப்பாடுகளில் 36 முறைப்பாடுகளுக்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழு தெரிவித்தது.

இதேவேளை பொலிஸாரின் அத்தமீறிய செயற்பாடுகள்பற்றிபயமின்றித்தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறையிடலாம் என்று அந்த ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் மீது பொலிஸார்செயற்படாமை, பொலிஸார்பொதுமக்களைத்தாக்குதல், துன்புறுத்தல், அதிகார முறைகேடு, பக்கச்சார்பாகநடந்து கொள்ளல், சட்டவிரோத கைது, தடுத்து வைத்தல், பொதுமக்கள்மீது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல், முறைகேடுகள், காவலில் இருக்கும்போது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள், இழப்புகள் போன்றனதொடர்பில்நடவடிக்கை எடுக்க ஆணைக்குழுவில் முறையிட முடியும் என்றுஆணைக்குழுவினர் மேலும் தெரிவித்தனர். (4)

---

### சிறை அத்தியட்சகரின் கண்காணிப்பில்

## விளக்கமறியலில் உள்ள மூவரும் உயர்தரப் பரீட்சை எழுத அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 9

வாள்வெட்டுக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்றும்வன்முறைச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்றும் குற்றஞ்சாட்டி விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த மூன்று பேர் ஜி.சி.ஈ.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்ற மல்லாகம் நீதிமன்று அனுமதியளித்துள்ளது.

சிறைச்சாலை அத்தியட்சகரின்கண்காணிப்பில்அவர்கள்மூவரும்பரீட்சைஎழுதுவதற்குச் சென்றுவர நீதிமன்று அனுமதி வழங்கியது.

கடந்தசனிக்கிழமைமானிப்பாய் பொலிஸார் நடத்திய தேடுதலில் சாவகச்சேரி, சரசாலை மற்றும் மறவன்புலவுபகுதிகளைச்சேர்ந்த10 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து, 4வாள்கள், செயின்கள் உட்படக் கூரிய ஆயுதங்கள் சிலவும் மீட்கப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும்18 வயதுக்கும் 20 வயதுக்கும்இடைப்பட்டவர்கள். அவர்களில் 3 பேர் இந்த வருடம் நடைபெற்று வருகின்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள்.

10 பேரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில்3 பேர்பரீட்சைக்குத் தோற்றவேண்டியவர்கள். அது பற்றி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன்படி அனுமதிவழங்கப்பட்டது.

(4,114)

---

## மன்னார் எலும்புக்கூடு அகழ்வை புகைப்படம் எடுப்பதற்குத் தடை

### நீதிமன்று நேற்று அறிவிப்பு

மன்னார், ஓக. 9

மன்னாரில் இடம்பெற்றுவரும்மனிதஎலும்புக்கூடுகள் அகழ்வுப் பணிகளைப் புகைப்படம் எடுப்பதற்கு, தொலைக்காட்சி, அச்சு மற்றும் சமூக வலையமைப்புகள்அடங்கலாகஉள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு மன்னார் நீதிவான் மன்று நேற்றுத் தொடக்கம் தடை விதித்துள்ளது.

குறித்த அகழ்வு சம்மந்தமாக மேற்கொள்ளப்படும் புலனாய்வு நடவடிக்கை முழுமையாகவில்லைஎன்பதாலும், புலனாய்வில் உள்ளமுக்கியத்துவம்கருதி இடையூறுகள் இல்லாமல் தொடர்ந்துபுலனாய்வுநடவடிக்கைகளைமேற்கொள்வதற்காகவும் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில்சதொசவளாகத்தில் என்பு அகழ்வில் ஈடுபடும்போது மனித எச்சங்கள் வெளிவந்தன. நீதிமன்ற மேற்பார்வையில் சட்ட மருத்துவ நிபுணரின் தலைமையில்அகழ்வுஇடம்பெறுகிறது.

அகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதியில் சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், தொலைக்காட்சி, அச்சு மற்றும்சமூகவலையமைப்புக்கள் அகழ்வுப் பணிகளுக்கு பொறுப்பான அதிகாரியின் உரிய அனுமதி இன்றி அந்தப்பிரதேசத்துக்குள்பிரவேசித்தல், புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் மற்றும் அகழ்வு சம்மந்தமான கலந்துரையாடலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(4,56)

---

## செல்வச்சந்நிதியானுக்கு நாளைமறுதினம் கொடி

வடமராட்சி, ஒக. 9

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப்பெருந்திருவிழாநாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குக் கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிறது.

16 நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில், எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமைதேர்த்திருவிழாவும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் சிறப்புஅபிசேகம், திருமண நிகழ்வுகள், சண்முக அர்ச்சனை அன்னதானம் என்பனபோன்றஆலயநேர்த்தி நிகழ்வுகளுக்குஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய முதன்மைக் குரு ஆறுமுகசாமிஐயர் சிவசண்முகம்ஐயர் தெரிவித்தார்.

இதேவேளை,திருவிழாவை முன்னிட்டுப் பக்தர்கள் வசதிகருதிச் சிறப்புப் போக்குவரத்து, குடிதண்ணீர், பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுள்ள என்று பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேசசெயலாளர்ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார்.

அத்துடன் சந்நிதிச்சூழலில் அமைந்துள்ள சுமார் 20 அன்னதானம் மடங்களில் அன்னதானம்வழங்கமடாதிபதிகள் ஒழுங்கு செய்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,173)

---

### ஐ.நா. கூட்டத்தொடரில்

## இலங்கையைக் காப்பாற்ற கூட்டமைப்பு மீண்டும் சதி!

### கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மூடிமறைத்து, ஐ.நாவில் இலங்கை அரசைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கான சதி வேலைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பாலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முன்னணியின் பணியகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நாவின் கால அவகாசம் முடியும் நிலையில், இலங்கை விடயத்தை பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்கான சரியான சந்தர்ப்பம் எழுந்துள்ளது. அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 2 வருட கால அவகாசம் முடிவுக்கு வரவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பினர் என்ற வகையில் எம்சார்ந்த நிலைப்பாடு ஒன்றை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் வரைக்கும் நாங்கள் பொறுத்திருக்க முடியாது. அவ்வாறு இருப்போமானால் வல்லரசு நாடுகள் இங்கு நடந்த இன அழிப்பு, போர் குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் பயன்படுத்தி தங்களுடைய நலன்களை மட்டும் அடைவதற்காக ஐ.நாவைப் பயன்படுத்தும் நிலை உருவாகும்.

2012 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை தமிழ் மக்களின் விடயத்தில் எந்த முன்னேற்றமும் காணப்படாது. நடு வீதியில் நிற்க விடப்பட்டுள்ளோம்.

பாதிக்கப்பட்டவர்களுடைய குரல் தெளிவாக வெளிப்படாமல் இருந்தால் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களின் பெயரைப் பயன்படுத்தி வல்லரசுகளும் அதன் எடுபிடிகளும் அழிவுகளைத் தமது தேவைக்காகப் பயன்படுத்துவார்கள் என்பதில், தமிழ்மக்கள் தெளிவாக இருக்கவேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாத கூட்டத்தொடரில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றது என்பதை அந்தக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் உத்தியோக பூர்வமான கருத்துகள் ஊடாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறிப்பாகப் பன்னாட்டு விசாரணை என்பது ஐ.நாவால் 2015 ஆண்டு வெளியிடப்பட்ட 200 பக்க அறிக்கையுடன் முடிவடைந்துவிட்டது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் உத்தியோக பூர்வமாகக் கூறுகின்றார்.

இதன் ஊடாக இனிப் பன்னாட்டு விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை, உள்ளக விசாரணையே நடத்த வேண்டும் என்று கூறுகின்றார்.

இதுமட்டுமல்லாமல் ஐ.நா மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அரசை மீறி, அந்த அரசு விரும்பாத ஒன்றை நடமுறைப்படுத்த முடியாது என்று தெரிவித்து, ஐ.நா மனித உரிமைப் பேரவை ஒரு பலவீனமான அரங்கு என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பேச்சாளர் ஊடாக முதற்றடவையாக ஒப்புக்கொண்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஆணையாளரின் அறிக்கைக்குப் பிற்பாடு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் கூட்டமைப்பின் கருத்தின்படி வெறுமனே பன்னாடுகளின் மேற்பார்வையை மட்டும் வைத்திருக்கத்தான் உதவும் என்று கூறப்படுகின்றது.

ஆனாலும் தமிழ் மக்களுடைய வாக்குகளை இழந்து தேர்தலில் தோற்றுக் கொண்டிருக்கையில்தான் தமிழ் மக்கள் மீது இன அழிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பு ஒப்புக் கொள்ளுகின்றது.

கூறவேண்டிய இடங்களில் இன அழிப்பைக் கூடாமல், தேர்தலுக்காகவே கூட்டமைப்பு இனப்படுகொலை விடயத்தைக் கையிலெடுத்துள்ளது.

இனப்படுகொலையை ஏற்றுக் கொண்ட கூட்டமைப்பு அது தொடர்பில் நாங்கள் பேசக்கூடாது என்றும் சொல்கின்றது.

பன்னாட்டு விசாரணை முடிந்துவிட்டது என்பதை ஐ.நா ஆணையாளரின் அறிக்கையை மேற்கோள் காட்டியே கூட்டமைப்பினர் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அந்த அறிக்கை 2015 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே தயாரிக்கப்பட்ட அறிக்கை.

தமிழ் மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்கின்றோம் என்று சொல்லும் கூட்டமைப்பு இன்று தாங்கள் தமிழ் மக்களுக்கு இழைத்த அத்தனை துரோகங்களையும் தங்களுடைய வாயால் ஒப்புக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் - என்றார். (4,8)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனிடமே இருக்கவேண்டும்

## அதைப் பறிக்க நினைப்பது பெரும் ஜனநாயக மீறல்

கொழும்பு, ஒக.9

நாடாளுமன்ற சம்பிரதாய மற்றும் ஜனநாயக அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனிடமே இருக்க வேண்டும். அதைப் பறிக்க நினைப்பது பெரும் ஜனநாயக மீறல். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கு சம்பந்தனுக்கு இருக்கின்ற அரசியல் உரிமை தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் என்று சுகாதார,போசாக்கு மற்றும் சுதேச மருத்துவம் பிரதி அமைச்சர் பைசல் காசீம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிப் பதவி தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லாட்சியைக் கவிழ்ப்பதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்து வருகின்றது இந்த மகிந்த அணி. அவர்களின் சதிகளில் ஒன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறிக்க முயற்சிப்பது. இந்த முயற்சி ஜனநாயக மீறலாகும். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுள் ஆட்சியில் பங்கெடுக்காத அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள கட்சிக்குத்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படும்.

அந்த வகையில் ஆறு கட்சிகள் மாத்திரமே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றுள் ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்றும் அரசுக்குள் இருக்கின்றன. ஏனைய மூன்று கட்சிகளான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு,ஜேவிபி மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் எதிர்க்கட்சிகளாக உள்ளன.

அந்தக் கட்சிகளுள் தமிழ் தேசிய கூட்டமைப்பு 16 ஆசனங்களையும்,ஜேவிபி 6 ஆசனங்களையும் மற்றும் ஈபிடிபி ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ளன. நாடாளுமன்ற சம்பிரதாயத்தின்படி அதிக ஆசனங்களைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் எதிர்கட்சித் தலைவர் பதவி செல்லும். அதன்படி, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. மகிந்த அணியினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். அந்தக் கட்சியுடன் சண்டை பிடித்துக்கொண்டு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர். அது அவர்களின் பிரச்சினை. அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று அமரட்டும். அதற்காக அவர்கள் எதிர்கட்சித் தலைவர்பதவியைக் கோரமுடியாது. இது அவர்களும் நன்கு அறிவர். இருந்தும், வெறுமனே சிங்கள மக்களைக் குழப்பித் தமிழர்களுக்கு எதிராக இனவாதத்தை விதைத்து அரசியல் இலாபம் அடைவதே மகிந்த அணியினரின் திட்டம்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கு சம்பந்தனுக்கு இருக்கின்ற அரசியல் உரிமை, நாடாளுமன்ற சம்பிரதாயம் மற்றும் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். மகிந்த அணியினரின் அரசியல் இலாபத்துக்காக இவற்றை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம். என்று தெரிவிக்கப்பட்டது

# ஆசிரியரைப் படுகொலை செய்த இருவருக்குத் தூக்குத் தண்டனை

## திருகோணமலை மேல்நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஒக. 8

ஆசிரியை ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்காக திருகோணமலை மேல்நீதிமன்று இருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தது.

2011 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரம், சந்தோசபுரம் ஆகிய பகுதிகளுக்கு இடையில் குறித்த ஆசிரியை கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த பகுதியிலுள்ள வயல் வெளிக்கு அருகில் காலை 7.30 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில் ஆசிரியை சடலமாக மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, ஆசிரியையின் உடலில் 13 இடங்களில் காயங்கள் காணப்பட்டன என்பது தெரியவந்தது.

கொலை தொடர்பில் விசாரணை நடத்திய சம்பூர் பொலிஸார் 4 பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

அவர்களுக்கு எதிராக நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு சட்டமா அதிபரால் மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது பற்றிய விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களில் முதலாம், இரண்டாம் சந்தேக நபர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஆசிரியரைப் படுகொலை செய்தனர் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டது.

அதனையடுத்து அவர்களுக்கு நேற்றுத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது. பாலசிங்கம் நகுலேஸ்வரன் (வயது - 38) விஜய குலசிங்கம் சந்திரபாலன் (வயது - 27) ஆகியோருக்கே தூக்குத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. கிறிஸ்ணபாலன் ரஜீவ்காந்தன் (வயது - 32), சிவகுமார் சிவரூபன் (வயது - 27) ஆகிய இருவரும் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். (4)

# முதன்மை வீதி விபத்தில் ஒருவர் காயம்

கொழும்பு, ஒக. 9

திருகோணமலை, மட்டக்களப்பு முதன்மை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் ஈச்சிலம்பற்று பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த நாகமணி வாலமனோகரன் (55- வயது) என்பவரே படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த வானும், இலங்கைத் துறை முக முதன்மையிடம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் மோதியே விபத்து இடம்பெற்றது. (4)



இலங்கைத் துறைமுக துறையின் அபிவிருத்தியில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப்பெற்றுக்கொள்ளும்நோக்குடன் அண்மையில் டென்மார்க்குக்குப்பயணம் மேற்கொண்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மார்க்ஸ்வலையமைப்பின் முதன்மைநிறைவேற்று அதிகாரி சோரேன்ஸ்கொவ் உள்ளடங்கலாகப் பிரதிநிதிகள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# நகைக் கடையில் திருடிய இளம் ஜோடியினர் சிக்கினர்

கொழும்பு, ஒக. 8

நகைக் கடையில் தங்கச் சங்கிலி ஒன்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இளம் ஜோடி கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மைய பேருந்து நிலையத்துக்கு அருகில் அமைந்திருக்கும் கடையில் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

26 வயதான ஆண் ஒருவரும் 24 வயதான பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகைக் கடைக்குச் சென்ற சந்தேகநபர்கள் இருவரும் தங்களைக் காதலர்களாக அறிமுகப்படுத்தியுள்ளனர்.

காதலியின் பிறந்த நாளுக்காகத் தங்கச் சங்கிலி ஒன்றைக் கொள்வனவு செய்ய வந்துள்ளோம் என்று காதலர் கூறியுள்ளார்.

தங்கச் சங்கிலிகள் பலவற்றைப் பார்த்துவிட்டு எந்த ஒரு நகையும் கொள்வனவு செய்யாமல் இருவரும் கடையை விட்டு வெளியேறியுள்ளனர்.

இருவருக்கும் காட்டிய நகைகளை மீள எடுத்து வைக்கும்போது 64 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி காணாமற் போயுள்ளதனைக் கண்டறிந்தனர். மறைகாணியைப் (சி.சி.ரி.வி.) பரிசீத்தபோது குறித்த இருவரும் நகையை லாவகமாகத் திருடிச் சென்றுள்ளமை உறுதியாகியுள்ளது.

கடை உரிமையாளர் மறைகாணியுடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடுசெய்துள்ளார். மறைகாணியின் உதவியுடன் குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் மதியம் ருவன்வெல்ல நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட தங்கச் சங்கிலியும் வேறு பல தங்க நகைகளையும் அடகு வைத்த சிட்டைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் திருமணத்துக்காக நகைகளைக் கொள்வனவு செய்ய வந்துள்ளதாகவும் கூறியுள்ளனர். தவிர, கம்பஹா, கட்டுநாயக்க மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நகைக் கடைகளில் பல நகைகளைத் திருடி அடகுக் கடைகளில் அடகு வைத்துள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## சிறை, பொலிஸ் திணைக்கள

# முன்னாள் அதிகாரிகள் இருவருக்கு விளக்கமறியலை நீடித்தது நீதிமன்று

கொழும்பு, ஒக. 8

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் முன்னாள் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆகியோருக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடிக்குமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு வெலிக்கடைச்சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 27 கைதிகள் உயிரிழந்தனர்.

அந்தச் சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, நுவரெலியா நகரசபை முன்னாள் தலைவர் கமகே மகிந்த குமார நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார். கொழும்பு முதன்மை நீதிவான் நீதிமன்று நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அவர் 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணை மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

2013 ஆம் ஆண்டில் நகரசபைத் தலைவராகச் செயற்பட்டபோது, வசந்த உதாவ வேலைத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியைப் பொது வைப்பில் இடாமல் தமது சொந்த வைப்பில் இட்டதாக அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (4)

## மாணவியை வன்புணர்ந்த மாணவன்

கொழும்பு,ஓக 9

குடாஓயாவில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும்14 வயது நிரம்பிய மாணவன் தான் காதலிக்கும் காதலியான 13 வயது மாணவியை வன்புணர்ந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

இவர்கள் ஒரே பாடசாலையில் கல்விகற்றுவரும் நிலையில் இருவரும் காதலித்துள்ளனர்.

அதன் பின்னர் அந்த மாணவி தன் பெற்றோர்களின் அறிவுரையால் இந்தக் காதல் விவகாரத்தில் இருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளார். இதனையடுத்து குறிப்பிட்ட அந்த மாணவன் மாணவியுடன் தொடர்புகளை ஏற்படுத்த பல முறை முயன்றும் மாணவி அதனைத்தவிர்த்துக்கொண்டுள்ளார் அதன் பின்னர் அந்த மாணவி வீட்டில் தனித்திருந்த வேளை மாணவனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மாணவியின் தாயார் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

## அரசுக்கு கோடிக் கணக்கான வருமானவரி இழப்பு

கொழும்பு.ஓக 9

நிதிஅமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான நிர்வாக முகாமைத்துவ தரவு பொறிமுறையினூடாக வருமான வரி சேகரிப்பினை ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் செயல்படுத்தபடாமையினால் அரசுக்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான வருமானம்கிடைக்காமற்போயுள்ளதாக உள்ளூர் வருமான திணைக்களதொழிற்சங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் 2015/2016 நடப்பு வருடங்களில் சுமார் 50 பில்லியன் ரூபாய் அரசுக்கு இழப்புஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்தகாலங்களில் வருமானவரி சேகரிப்புக்கு ஒரு குறிப்பிட்ட அதிகாரி பொறுப்பாக இருந்து செயற்பட்டார்.

அதனால் வரிவிதிப்பு சரியான முறையில் இடம்பெற்றது. இந்தப் புதிய பொறிமுறையின் எல்லா தரவுகளும் ஒரே இடத்திற்கே செல்வதால் அவற்றை கையாள்வது சிரமமாக உள்ளதாக கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக நிதி அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எதிரிகளாக இருந்தாலும்

# புலம்பெயர்ந்தோரின் நம்பிக்கையை வென்று அவர்களை அபிவிருத்தியில் ஈடுபடுத்தவேண்டும்

இராணுவத் தளபதி வலியுறுத்துகிறார்

**கொழும்பு, ஓக. 9**

**இலங்கையில் பெருமளவில் முதலீடுகளைச் செய்யக்கூடிய ஒரு பிரிவினராக புலம்பெயர் சமூகத்தினரை நோக்க வேண்டும். அவர்களில் எமக்கு ஆதரவானவர்களும் இருக்கின்றார்கள். எதிரானவர்களும் இருக்கின்றார்கள். நாம் தொடர்ச்சியான பரப்புரை மூலமாக அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவேண்டும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்புச் செய்வதற்கு வழிவகுக்கவேண்டும்.**

இவ்வாறு இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க வலியுறுத்தினார்.

இவ்வருடத்திற்கான கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கிற்கான ஒழுங்ககள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது, 'பன்னாடலாவிய தடங்கல்களைக் கொண்டதொரு சகாப்தத்தில் பாதுகாப்பு "என்ற தொனிப்பொருளில் இம்மாதம் 30,31 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் ' நெருக்கடிக்கு மத்தியில் இருக்கும் புலம்பெயர் சமூகம் " என்ற தலைப்பின் கீழும் ஒரு அமர்வு நடைபெறவுள்ளது.

அத்தகைய விவகாரம் ஒன்றை இந்த பாதுகாப்பு கருத்தரங்கில் உள்ளடக்கியதன்நோக்கம் என்ன என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு விளக்கமளிக்கும் போதே அ வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

உள்நாட்டுப் போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் வடக்கு கிழக்கில் பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த இராணுவம்தொடர்ந்தும்செயற்பட்டுவருகின்றது.

கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு போன்ற நிகழ்வுகள் மூலமாக வெளிநாடுகளின் பாதுகாப்புத் துறைபிரதிநிதிகள் இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகள் குறித்த தகவல்களைபுலம்பெயர் சமூகத்துக்கும் தெரியப்படுத்த முடியும். அவ்வாறுதெரியப்படுத்தும் போது இலங்கை குறித்து தவறான புரிதலுடன் இன்னமும் இருக்கும் புலம்பெயர் சமூகத்தின் பிரிவினரின் நம்பிக்கையை வென்றெடுக்கமுடியும்.

அவ்வாறான நம்பிக்கை ஏற்படும் போது அந்தச்சமூகத்தில் தலைவர்களாக இருக்கும் கணிசமான பிரிவினர் இலங்கையில் முதலீடுகளைச்செய்வதில் நாட்டம்காட்டுவர். அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே பாதுகாப்பு கருத்தரங்கில் புலம்பெயர் சமூகத்துடன் தொடர்புடைய விவகாரத்தை ஆராய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (31)



துருணு திரிய கடன் திட்டத்துக்கு

## வடமேல் மாகாணத்தில் 116 பேரும் மத்திய மகாணத்தில் 189 பேரும் தகுதி

கொழும்பு.ஓக 9

இளம் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் நோக்குடன் தலைமை அமைச்சர் அலுவலக கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் வழிகாட்டலுடன் செயற்படுத்தப்படும் துருணு திரிய இலங்கை வங்கிக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடைய இளம் தொழில் முயற்சி யாளர்கள் வடமேல் மாகாணத்தில் 116 பேரும், மத்திய மகாணத்தில் 189 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடன் திட்டம் தொடர்பாக கடந்த ஜீலை 13 ஆம் திகதி குருநாகல் மாவட்டச் செயலகத்திலும், கடந்த 3 ஆம் திகதி கண்டி மாவட்டச் செயலகத்திலும் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டன.

ஏற்கனவே வடமேல் மாகாணத்தில் சிறியளவிலான வர்த்தகர்கள் 3 பேருக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், 21 பேர் வியாபாரத் திட்டங்களைத் தயாரித்து இலங்கை வங்கியிடம் கையளித்துள்ளதாகவும் கடன் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலின் போது வெளிப்படுத்தப்பட்டது.

மத்திய மாகாணத்தில் சிறியளவிலான வர்த்தகர்கள் 3 பேருக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், 51 பேர் வியாபாரத்திட்டங்களைத்தயாரித்து இலங்கை வங்கியிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

துருணு திரிய இலங்கை வங்கிக் கடன் திட்டம் ஊடாக பட்டதாரிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சான்றிதழ்கொண்ட சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு இலகுவான பிணை முறைமையொன்றின் கீழ் இந்தக் கடன் வழங்கப்படுகின்றன.

## விலை அதிகரித்தால் மானிய முற்றையில் எரிபொருள்

பன்னாட்டுச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டாலும் மக்களுக்கு அதன் முழு சுமையையும் வழங்காது மானிய முறையில் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பெற்றோலியவளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற ஊடகசந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது இருக்கும் முறைப்படி மசகு எண்ணெயின் விலைமாற்றத்திற்கு அமைய எரிபொருளின் விலையும் மாறும் அதற்கேற்பவே விலைச் சூத்திரம் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இனவாத செயற்பாடுகளுக்கு ஐ.தே.கட்சிக்குள் இடமில்லை

நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

கொழும்பு,ஓக 9

ஐக்கியதேசியகட்சிக்குள் இனவாதசெயற்பாடுகளுக்கு இடமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அண்மையில் ஐக்கிய தேசிய கட்சி தவிசாளர் ஒருவர் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவித்ததாவது.

இந்த சம்பவம் தொடர்பாக அமைச்சர் கபீர் ஹாசிமினால் தலைமை அமைச்சரிடம் முறையிடப்பட்டது. பின்னர் அங்கிருந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினோம். அதனடிப்படையில் அந்த தவிசாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஐக்கியதேசியகட்சிக்குள் இனவாத செயற்பாடுகளுக்கு இடமில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். ஐ. தே. க என்பது நாட்டில் உள்ள ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தமான கட்சியல்ல.

இவ்வாறான பல சம்பவங்கள் கடந்த ஆட்சியில் நடைபெற்றுள்ளன அவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக எப்பொழுதாவது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா? பொதுஜன பெரமுன ஆட்சி செய்யும் சில சபைகளில் மாட்டு இறைச்சி தடை செய்யப்பட்டுள்ளது. அந்த கட்சி தெளிவான இனவாத செயற்பாடுகளை முன்னெடுக்கிறது என்பதுக்கு இதுவே உதாரணம். ஆனால் ஊடகங்களுக்கு இது இனவாத செயலாக தென்படுவதில்லை. அதைஅவர்கள் மக்களுக்கு தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுப்பதில்லை. உள்ளூராட்சி சபைகளில் ஆட்சிக்கு வந்ததற்கே மாட்டிறைச்சியை தடை செய்த அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்ன நடைபெறும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் - என்றார்.

## உடைந்த மனங்களை இணைத்ததன் பின்னர் எதிர்க்கட்சித்தலைவர் பதவியைக் கோருங்கள்

கொழும்பு,ஓக 9

முதலில் உடைந்துள்ள மனதை இணையுங்கள் அதற்குபிறகு எதிர்க்கட்சித்தலைவர் பதவியை கோருங்கள் என இடதுசாரிக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கூட்டு எதிர்க்கட்சிக்குள் முக்கிய மூவரின் மனது உடைந்துள்ளது. ஒருவர் கூறுகின்றார் மகிந்தவே எனது மனதில் இருக்கின்றார் என்று. மற்றுமொருவர் கோத்தபாய ராஜபக்சாவே வரவேண்டும் என கூறுகின்றார்.

வாசுதேவ கூறுகின்றார் தினேசுக்கே தனது ஆதரவு என்று. இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சிக்குள் பல பிரிவுகள் காணப்படுகின்றன.

முதலில் உடைந்துள்ள மூன்று மனங்களையும் ஒன்றுசேருங்கள். அதன்பின்பு எதிர்க்கட்சித் தலைவர் பகுதியை கோருங்கள். என்றார்

எமதுதரப்பில் 70 பேர் இருக்கின்றார்கள் என அண்மையில் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே சமீர பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கருணாநிதி எனும் அரைச் சகாப்தம்

முதுபெரும்தமிழ்த்தலைவரும்தமிழகத்தின்முன்னாள்முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி மறைந்துவிட்டார். 95ஆவது வயதில் நிகழ்ந்த அவரது மறைவு, திடீரென நடந்தல்ல என்கிறபோதும், அவரது மறைவு தமிழ் அரசியலுக்கும்,தமிழ் மக்களுக்கும் பேரிழப்புத்தான்.

கருணாநிதி ஒரு சிறிய கிராமத்தில் இருந்து வந்து, தமிழகத்தின் முதலமைச்சராக5தடவைகள்பதவிவகித்தவர். அந்தஉயரத்தைத் தொடுவதற்குஅவர்50வருடங்களைமிகக்கடுமையானஅரசியல் பணயத்தில் கடந்துள்ளார்.

ஓய்வுக்கே ஓய்வு கொடுத்தவர் என்று திமுகவினரால் அழைக்கப்பட்டவர்கருணாநிதி. தனதுகடுமையானஉழைப்பால்திருவாரூர் குக்கிராமத்தில்பின்புலம் இல்லாத குடும்பத்தில்பிறந்து, பள்ளிப் படிப்புமட்டுமேமுடித்தகருணாநிதி, தமிழகத்தை ஆளும்முதல்வராக உயர்ந்ததன் பின்னால் அவரது கடுமையான உழைப்பை எவரும் மறுக்க முடியாது.

1924 ஆடி 3ஆம் நாள் திருக்குவளை என்கிற சிறிய ஊரில் பிறந்தவர் கருணாநிதி. தந்தையின் வழியில் நாயனம் பயில்வதற்காக அனுப்பப்பட்டபோது, நாயனக்கலைஞர்கள்மேற்சட்டை அணியக்கூடாது என்கிற அன்றைசமூகக்கட்டுப்பாட்டை ஏற்கமறுத்து நாயனப்பயிற்சியைப்புறக்கணித்துப்போராடத்தொடங்கியவர். கடைசிக்காலம்வரையில்சமூகநீதிக்கானஅந்தப்போராட்டத்தை அவர் நிறுத்தியதேயில்லை.

திரைத் துறையில் நுழைவதற்கு முன்பே தன்னை அரசியலில் இணைத்துக்கொண்டவர் கருணாநிதி. தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியாவிலேயேமிகமுக்கியமானதான இந்தி மொழிஎதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர். பெரியாரின் நீதிக் கட்சியிலும்பின்னர்திராவிடர்கழகத்திலும்,பின்னர்திராவிடர்முன்னேற்றக் கழகத்திலும் என்று அவரது அரசியல் பணி தொடர்ந்திருக்கிறது.

அரைநூற்றாண்டுஅரசியல்பயணம்என்பதுசாதாரணமானதல்ல. அதில் கடந்த 3 ஆண்டுகள் மட்டும்தான் அவர் நேரடியான அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லை. அதுவரையில்தமிழகத்தின் அரசியலைத்தனதுகட்டுப்பாட்டில்வைத்திருந்ததுடன்புதுடில்லியிலும் செல்வாக்கு மிக்க தலைவராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். அவரது இறுதி ஊர்வலத்தில் கட்சி அரசியல் பேதங்கள், அரசியல் கொள்கைப் பேதங்கள் எவையும் இன்றி அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டமையே கருணாநிதியின் அரசியல் கனதியை உணர்த்தி நிற்கும்.

ஓர் இலக்கியவாதியாகவும் முதல்வராகவும் அவர் அமர்ந்ததற்கு பின் அவரது கடின உழைப்பு, ஓய்வறியா அறிவு தேடலிருந்ததை எவரும்மறுக்கமுடியாது. கருணாநிதியின்சுறுசுறுப்பையும், வேகத்தையும் திமுக தலைவர்களையும் தாண்டி, அரசு அதிகாரிகளும் பார்த்து வியந்து போயிருக்கின்றனர் என்று சொல்லப்படுவதுண்டு.

பெரியாரின் திராவிடர் கழகத்தில் இருந்து விலகி, திராவிட முன்னேற்றக்கழகத்தை அண்ணாஉருவாக்கியபோது, அவருடன்ஒரு தம்பியாகக் கூட இருந்ததுடன் மட்டுமல்ல, திமுக தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தான் சார்ந்திருந்த திரைத்துறையை மிகச் சுக்சிதமாகவும் மிகச் செறிவோடும் பயன்படுத்திக் கொண்டவர் கருணாநிதி. அவருடைய வசனத்தில் வெளியான 'பராசக்தி', 'மனோகரா' போன்ற படங்கள் ஒரு தலைமுறையின் சிந்தனையையே புரட்டிப்போட்டவை.

1957இல்முதன்முதலில்தமிழ்நாடுசட்டப்பேரவைக்குத்தெரிவாகியது முதல் ஒருதடவைகூடத் தோற்காமல் 13தடவைகள்மீண்டும் மீண்டும்சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவாவதற்குரிய மக்கள் ஆதரவுஇருந்தபோதும்கட்சிக்குள்தன்னைஒருசர்வாதிகாரியாகஅவர் நிலைநிறுத்திக்கொண்டவரில்லை. தொண்டர்களும்கட்சியினரும் தன்னைஅணுகுவதற்குரியஎளியதலைவராகவேவைத்திருந்தார்.

ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்கும் ஆதரவு தெரிவித்து வந்த தலைவர்அவர். பலதமிழ் ஆயுத இயக்கங்களோடு நெருக்கமான பழக்கத்தையும்கூட வைத்திருந்தவர். ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத்தனிநாடுதான்ஒரேதீர்வு என்று கடைசி வரையில்நிலையான கொள்கையோடு இருந்தவர். அதனை அடைவதற்காகத் தான் செய்யக்கூடியவைகளை அவர் செய்யவில்லை என்கிற கோபம் அவர் மீது ஒரு பகுதித் தமிழர்களுக்கு இருந்தாலும்கூட, அவரது ஆட்சியில் அவர் தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களுக்குச்செய்தஉதவிகளும்அகதிப்பிள்ளைகளின்கல்விக்குசெய்த ஏற்பாடுகளையும் மறந்துவிட முடியாது.

இறுதிப் போரின்போது அவர்தன்னுடைய இயலுமைக்கு ஏற்பச் செயற்படவில்லைஎன்கிறஉரிமைக்கோபம்ஈழத்தமிழர்களுக்கு இருக்கவேசெய்கிறது. அதற்காகஅவர்ஈழத்தமிழர்களுக்காகச்செய்த உதவிகளும் அர்ப்பணிப்புகளும் மறக்கப்படக்கூடியவையல்ல.

அத்தகைய தலைவரின் மறைவு தமிழ் இனத்திற்கு ஈடுசெய்ய முடியாததுதான். அவரது ஆத்மா சாந்தியடைட்டும்!

# தமிழ் எங்கள் தாலாட்டு சாவு எங்கள் விளையாட்டு




## தமிழ் தலைவன் மு.கருணாநிதி – 01

தேவநாயகம் தேவானந்த்

கருணாநிதி காலமானார். காலமாகியும் காலத்துள் வாழும் தலைவர்கள் மிகச்சிலர். அவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதியும் ஒருவர் என்பது மிகையல்ல.

தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களில் தமிழ்த் தலைவன்' என்று அடையாளப் படுத்தக்கூடிய ஒரே தலைவனாக மு.கருணாநிதியையே இனங் காண முடியும். கொஞ்சும் தமிழைத் தனது அரசியலின் அத்திபாரமாகவும், தமிழன் வரலாற்றுப் பொக்கிசங்களான இலங்கியங்களை தூண்களாகவும் நிறுத்தி, அரைநூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தமிழ்த் தலைவனாக உலகத் தமிழர்களின் மனதில் நீங்கா இடத்தில் இருக்கின்ற கருணாதிநி உலகத் தமிழர் வரலாற்றின் ஒருபகுதி எனலாம்.

நவீன தமிழ் வரலாறு கருணாநிதி இன்றி எழுதப்பட முடியாது. அதேபோல் நவீன இந்திய வரலாற்றையும் கருணாநிதியை விட்டுவிட்டு எழுதிவிட முடியாது. இந்தியாவின் நடுவண் அரசியலைத் தீர்மானிப்பதில் கடந்த ஐந்து தசாப்தங்களாக கருணாநிதியின் பங்குமுக்கியமானது. இந்திராகாந்தி, வி.பி. சிங், தேவகௌடா, வாஜ்பாய், மன்மோகன்சிங் என்று இந்தியத் தலைமை அமைச்சர்களாக இருந்தவர்கள் கருணாநிதியின் அரசியல் சாணக்கியத்தைக் கண்டு வியந்திருக்கிறார்கள், மதிப்பளித்திருக்கிறார்கள்.

### வரலாற்று நாயகன்

'வரலாற்றுநாயகன்'என்பதுஉண்மையில் எல்லோருக்கும் பொருந்துவதில்லை கருணாநிதிக்கு அது அச்சொட்டாகப் பொருந்துகிறது. அண்மைய உலகத் தமிழர் வரலாறு தமிழ்த் தலைவர்களை இழந்த வரலாறாகப் பதிவாகிறது. தமிழ் மீதும் தமிழ் மண் மீதும் பற்றுக் கொண்டு தமிழர் விடுதலைக்காகக் குரல் கொடுத்த தலைவர்கள் தமது வாழ்நாளை குறைந்தகாலத்தோடு முடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாத்துரை சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். இவர் திராவிட இயக்கத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து அதுவரை தமிழ்நாட்டில் ஆட்சிசெய்துவந்த தேசியக்கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டிலிருந்து காங்கிரஸ் ஆட்சியை விரட்டினார். அதன் பின்னர் காங்கிரஸ் கட்சியால் தமிழ்நாட்டின் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. இந்திய அளவில் திராவிட சிந்தாந்தம் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அண்ணா உருவாக்கிய தமிழ்நாடு அரசு ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தது. அவர் ஆட்சியைப்பிடித்து இரண்டாண்டுகளில் இறந்துபோனார். 1969ஆம் ஆண்டில் முத்தான தலைவனை தமிழ் உலகம் குறைந்த வயதிலேயே இழந்தது.

ஈழப்போராட்டம் 2009இல் முடிவுக்கு வந்தபோது, உலகத் தமிழ் இனம் தானைத் தலைவனாகப் போற்றிய தேசியத் தலைவரை இழந்து தவித்தது. அதன் பின்னர் ஈழத் தமிழர்களுக்கு தமிழீழம் பெற்றுத் தருவேன் என்று முழங்கிய ஜெயலலிதாவின் இறப்பு கோடான கோடித் தமிழர்களுக்கு பேரதிர்ச்சியாக விழுந்தது. இன்று தமிழர்களின் போர்வாள் என்று வர்ணிக்கப்பட்ட கருணாநிதியவர்களின் சாவு பேரதிர்ச்சியாகக் கிடைத்திருக்கிறது.

### அண்ணாவின் பின்

அண்ணாவின் இறப்பின் பின்னர் மூன்றாவது நிலைத் தலைவராக இருந்த கருணாநிதி, கட்சிக்குள் தனக்கிருந்த செல்வரக்குக் காரணமாக இரண்டாம் நிலைத் தலைவர்களைப் புறந்தள்ளி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவரே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலாவது தலைவருமாவார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பதவியை வெற்றிடமாகவே வைத்திருந்தார். அந்தப் பதவி பெரியாருக்கு உரியதென்றார்.

கருணாநிதி 95 வயது வரை வாழ்ந்து நீண்ட வரலாற்றைப் பதிவுசெய்து சென்றிருக்கிறார். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் கட்சியையும் தொண்டர்களையும் வழிநடத்தியிருக்கிறார். இந்திய அளவில் வடமாநிலங்கள் பலவற்றோடு ஒப்பிடுகின்ற போது, தமிழ்நாட்டை துரிதகதியில் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்ற தலைவராகப் போற்றப்படுகின்றார். தமிழ்நாட்டில் சமூகநீதி இயக்கத்தை ஆரம்பித்தவர் ஈ.வே.ரா.பெரியார். அவரே திராவிட சிந்தனையை விதைத்தவர். அவர் விதைத்த விதைகளில் ஒன்று பெருவிருட்சமாகி இன்று வீழ்ந்து கிடக்கிறது.

1924 ஜூன் மூன்றாம் திகதி நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை கிராமத்தில் கருணாநிதி பிறந்தார். முதுமையால் உண்டான உடல் நலக் குறைவால் சுமார் இரண்டு ஆண்டு காலமாகப் பொதுவாழ்வில் இருந்து கருணாநிதி விலகி இருந்தார். 1969ஆம் ஆண்டில் சி.என்.அண்ணாதுரைமறைவிற்குப்பிறகுதமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட அவர் ஐந்து முறை தமிழக முதலமைச்சராக இருந்துள்ளார்.

### சிம்மக்குரல்

'தமிழர்களே தமிழர்களே என்னைக் கடலில் தூக்கிப் போட்டாலும் நான் கட்டுமரமாகத் தான் மிதப்பேன் நீங்கள் அதில் ஏறிப் பயணிக்கலாம்' என்ற குரலை தொலைக்காட்சியில் அடிக்கடி கேட்டிருக்கிறோம். முழங்கும் சிம்மக்குரல் ஓய்ந்திருக்கிறது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு மேடைப் பேச்சுக்கள் முக்கியமானவை. அடுக்குமொழியில் துள்ளல் சுவையில் சொற்களை சுழற்றுவதில் வல்லவர்களாக திராவிடத் தலைவர்கள் காணப்பட்டார்கள். மணிக்கணக்கில் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். காசுகொடுத்து பேச்சுக்களைக் கேட்டகாலமும் உண்டு. திராவிட இயக்கப் பேச்சாளர்களில் கருணாநிதியும் முக்கியமானவர். இறக்கும் வரைபேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருந்த ஒரு தலைவனின் குரல் ஓய்ந்திருக்கிறது. நீண்ட துயிலில் ஆழந்து கிடக்கிறான்.

மீளாத் துயிலில் கிடக்கின்ற அந்தத் தலைவனை நிரந்தரமாக எங்கே தூங்கவைப்பது என்பதில் சர்ச்சை நீடிக்கிறது. பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டுக்காகப் பாடுபட்டு இடஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்த தலைவன், தூங்குவதற்கு எங்கே இடம்

ஒதுக்குவது என்பதில் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் அரசியலுக்குச் சொந்தக்காரன். திராவிட இயக்கத்தின் போர் வாள் என்று வர்ணிக்கப்பட்டவர். தனது பேச்சாற்றலாலும், அனல்பறக்கும் எழுத்துக்களாலும் தமிழ் உலகைக் கவர்ந்தவர். கோடான கோடித் தொண்டர்களின் இதயத்தில் வாழ்பவன். தன் ஆசான் அண்ணாவின் சமாதியருகில் உறங்கவேண்டும் என்று நினைப்பதில் என்ன தவறிருக்கிறது? இதுவே இன்று பல தலைவர்களினதும் தொண்டர்களினதும் கேள்வியாக இருக்கிறது.

### இறந்த பின்னரும் போராட்டம்

தமிழ்நாட்டின் அரசியலில் மருத்துவ மனைகளும் ஏதோ ஒருவகையில் வரலாற்றில் பதிவாகின்றன. எம்.ஜி.ஆர் மறைவின்போது அப்பலோ மருத்துவமனை பேசப்பட்டது. அவரது சிகிச்சை விபரங்களை இரகசியமாகப் பேணியது என்பது அந்த மருத்துவ மனையின் சாதனையாகக் குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர், அதேமருத்துவமனை ஜெயலலிதாவின் மறைவின் போது மேலும் சர்ச்சைகளையும் சிக்கல்களையும் சந்தித்து இன்றுவரை விசாரணைகளையும் எதிர்கொண்டுவருகின்றது.

இப்போது கருணாநிதியின் மறைவு காவேரி மருத்துவமனையில் நிகழ்ந்திருக்கின்றது. காவேரி மருத்துவ மனையில் கடந்த பத்துநாள்களாகத் தொண்டர்கள் கூடி 'தலைவா எழுந்து வா' என்று கோசமிட்ட வண்ணம் இருந்தனர். இப்போது அவர்களின் கோசமெல்லாம், "வேண்டும் வேண்டும் மெரினா வேண்டும்" என்பதாக இருக்கிறது. கருணாநிதியை மெரினாவில் புதைப்பதற்கு அனுமதிகேட்டு நீதிமன்றம் சென்று வெற்றிபெற்றிருக்கிறார்கள் தி.மு. கவினர்.

மெரீனா கடற்கரையை இடுகாடாக மாற்றக் கூடாது என்று கோரி வழக்குகள் பல நிலுவையில் உள்ளன. இத்தனையையும் தாண்டி ஜெயலலிதாவின் உடல் எம்.ஜி.ஆர். சமாதியருகில் அடக்கம் செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. மெரீனாவின் நினைவிடங்கள் வரலாற்றிடங்ளாகப் பதிவாகி, சுற்றுலாத்தலமாகவும் காணப்படுகின்றது. அண்மையில் ஜெயலலிதாவின் சமாதி அரசியலில் முக்கியமானதாக அமைந்தது. ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் முதலமைச்சர் பதவியைப் பொறுப்பேற்ற ஓ.பன்னீர் செல்வம் ஜெயலலிதா சமாதி முன்பாக தியானமிருந்து சசிகலாவிற்கெதிரான போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

உலகத் தமிழர்களை ஒன்றுபடவைத்து ஒரு தமிழ் எழுச்சிக்கான வாய்ப்பை வழங்கிய ஜல்லிக்கட்டுப் போராட்டம் மாணவர்களால் இதே மெரீனா கடற்கரையில் முன்னெடுக்கப்பட்டு வெற்றிபெற்றதும் அண்மைய தமிழர் வரலாறு. இந்த வரலாற்றில் கருணாநிதியின் உடல் அடக்கத்திற்கான போராட்டமும் பதிவாகின்றது போலும்.

### திராவிட இயக்கத்தின் போர் வாள்

திராவிட இக்கத்தின் போர்வாளென்று வர்ணிக்கப்பட்ட கருணாநிதி திராவிட இயக்கத்தை வளர்த்தெடுத்ததில் அண்ணாவோடு துணை நின்றவர். திராவிட சித்தாந்தத்தோடு வாழ்ந்த வரை அவரது சிந்தாந்தத்திற்கு எதிரான ராஜாஜீ.

> கருணாநிதி 95 வயது வரை வாழ்ந்து நீண்ட வரலாற்றைப் பதிவுசெய்து சென்றிருக்கிறார். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் கட்சியையும் தொண்டர்களையும் வழிநடத்தியிருக்கிறார். இந்திய அளவில் வடமாநிலங்கள் பலவற்றோடு ஒப்பிடுகின்ற போது, தமிழ்நாட்டை துரிதகதியில் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்ற தலைவராகப் போற்றப்படுகின்றார். தமிழ்நாட்டில் சமூகநீதி இயக்கத்தை ஆரம்பித்தவர் ஈ.வே.ரா. பெரியார். அவரே திராவிட சிந்தனையை விதைத்தவர். அவர் விதைத்த விதைகளில் ஒன்று பெருவிருட்சமாகி இன்று வீழ்ந்து கிடக்கிறது.

காமராஜர் போன்றோரை அடக்கம் செய்த பகுதியில் அடக்கம் செய்யுமாறு தற்போது தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கூறுகின்றது. கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது 21 நாள்களே முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியின் உடலை மெரீனாவில் அடக்கம் செய்ய கருணாநிதி அனுமதிக்கவில்லை என்பது அவர்கள் பக்கம் உள்ள நியாயம். தமிழ் தலைவர் பெரியார் மெரீனாவில் அடக்கம் செய்யப்படவில்லை என்பதையும் தமது வாதமாக முன்வைத்தார்கள். இதற்கிடையில் மெரீனாவில் உடல்கள் அடக்கம் செய்யப்படக்கூடாது என்று ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு இந்த வழக்கில் வென்றிருக்கிறது தி.மு.க.

'என்வாழ்வும் ஆன்மாவும் அண்ணாத்துரை தான்' என்று வாழ்நாள் முழுவதும் சொல்லி வந்த கருணாநிதி, அண்ணாவின் அருகில் நிரந்தரமாகத் தூங்குவதே பொருத்தமானது. 'தமிழ் எங்கள் தாலாட்டு, சாவு எங்கள் விளையாட்டு' என்று ஹிந்தி எதிர்ப்பில் முழங்கிய தலைவனின் அடக்கமே ஒரு போராட்டம்.

(தொடரும்)



## ஆசிரியருக்கான கடிதம்

# ஒரு கணம் எம்மைப் பற்றி எண்ணிப் பார்ப்போமா?

அண்மைக் காலமாக யாழ் குடாநாட்டில் அரங்கேறும் சம்பவங்கள் குடாநாட்டு மக்களுக்கு மட்டுமென்றல்லாமல், ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்துக்கே பெரும் அவமானத்தையும் தலைக்குனிவையும் ஏற்படுத்துபவையாக அமைந்து வருவது கவலைக்கு உரியது. போரால் பல வகைகளிலும் பாதிக்கப்பட்ட நாட்டின் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள், போர் முடிவுக்கு வந்து ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கடக்கும் நிலையிலும், இன்னமும் போர்ப் பாதிப்புக்களினின்றும் விடுபடாத நிலையில், தமது இழப்புக்கள் காரணமான கவலைகளிலிருந்து விடுபடாத நிலையில் வாழ்ந்துவருவது கண்கூடு. இந்த நிலையில் தவறான வழி நடத்தலுக்கு உட்பட்டோ அல்லது தாமாக வழிதவறி தீய சக்திகளது தொடர்புகளால் எமது இளம் சமுதாயத்தவர்களில் ஒரு சாரார் வாள்வெட்டுக் கலாசாரத்துள் உள்ளீர்க்கப்பட்டு வன்முறைகளில் ஈடுபட்டு எம்மவர்கள் மத்தியிலே ஒரு அச்ச உணர்வையும் கவலை, கஷ்டங்களையும் ஏற்படுத்தி வருவது குறித்து ஒட்டுமொத்த ஈழத்தமிழ் இனமும் மனம் வருந்துவது ஒரு புறம் அரங்கேறுகிறது.

அதேசமயம், அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருள் போன்று, இன்றெல்லாம் தமிழர் பிரதேசங்களில் பெரும்பாலும் தினமும் இரவிலும் பகலிலுமாக இடம்பெறும் கொள்ளைகள், திருட்டுக்களால் எம்மவர்கள் தினமும் சரியான தூக்கமின்றி, இரவில் கண்விழித்திருந்து தமது உடமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சிரம நிலையை எதிர்கொள்ள நேர்ந்திருப்பதும், இதுதான் எமது தலைவிதியோ என்றெண்ண வைக்கிறது. அந்த வகையில் போர் இடம்பெற்ற வேளையில் எம்மவர்கள் எதிர்நோக்கிய அச்ச உணர்வைவிட, இன்று திருடர் கொள்ளைக்காரர்களிடமிருந்து தமது குடும்பத்துக்கான பணம், நகைகள் உட்பட்ட தேட்டங்களைப் பாதுகாத்துக் கொள்வது குறித்த எம்மவர்களது அச்சமும் கவலையும் ஒரு புறத்தில் நிலவி வருகிறது.

இவற்றுக்கு மத்தியில், தமிழ் நாட்டிலிருந்து அழைத்து வரப்படும் பாடகர்கள், நடிகர்களை இணைத்து நடத்தப்படும் இன்னிசைக் கச்சேரிகளும், கதம்ப நிகழ்ச்சிகளும் மற்றொரு புறத்தில் கொடிகட்டிப் பறப்பதுதான் மனதுக்கு நெருடலைத் தருகிறது. இத்தனை காலமும் தலைநகர் கொழும்புடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த இத்தகைய இறக்குமதிக் கலைஞர்கள் பங்கேற்கும் இன்னிசைக் கச்சேரிகள் இப்போதெல்லாம் யாழ் குடா நாட்டிலும் அரங்கேற ஆரம்பித்திருப்பதை ஒரு வகையில் யாழ்ப்பாணத்தவர்களது பணத்தைக் கறந்தெடுக்கும் ஒரு உத்தியாகவும் கருத முடிகிறது.

என்னவோ போங்கள், இன்று எம்மவர்கள் இலக்கு எதுவுமின்றி தறிகெட்டு, எங்கேயோ பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் உண்மை. இது குறித்து ஒரு கணம் மனதில் இருத்திப் பார்க்க முயல்வோமா?

ப.பரதகுமார், கைதடி.



## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

சென்னை, ஓக. 9
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்திய நாடாளுமன்றம் நேற்று நாள் முழுதும் ஒத்திவைக்கப்பட்டது.
மக்களவையில் அவைத்தலைவர் சுமித்ரா மகாஜனும், மாநிலங்களவையில் அவைத்தலைவர் வெங்கையா நாயுடுவும் இரங்கல் குறிப்பை வாசித்தனர். பின்னர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன. (ம)

## கதறினார் ஸ்டாலின்

கருணாநிதி சென்னை - மெரீனா கடற்கரையில் அடங்கம் செய்யப்பட்லாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின் நன்றி தெரிவித்து கண்ணீர் விட்டுக் கதறியழுதார். கனிமொழி, துரை முருகன், ஆர்.ராசா உள்ளிட்டோரும் ஸ்டாலினை அணைத்தபடி கதறியழுதனர். (ம)

## ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்

சென்னை, ஓக. 9
கருணாநிதியின் சவப்பெட்டியில் எழுதப்பட்ட வாகம்தான் "ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்" என்பது.
கருணாநிதி இன்றைக்கு சுமார் 33ஆண்டுகளுக்கு முன்னரேயே தனது இறுதி நாள் குறித்த சிலபல கருத்துக்களைப் பகிர்ந்திருந்தார். அதில் தனது சவப்பெட்டியில் "ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்" என்று எழுத வேண்டும் என்பதும் ஒன்று. இதன்படி அந்த வசனம் கருணாநிதியின் சவப்பெட்டியில் பொறிக்கப்பட்டே அவர் அடக்கம் செய்யப்பட்டார். (ம)




## கருணாநிதிக்கு வெண்கலச்சிலை

சென்னை, ஓக. 9
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கு புதுச்சேரியில் வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் நாராயணசாமி அறிவித்தார்.
எனினும், புதுச்சேரியில் எந்த இடத்தில் கருணாநிதிக்கு வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்ற தகவல் வெளிவரவில்லை. காரைக்காலில் அமைய வுள்ள புறவழிச்சாலைக்கு கருணாநிதியின் பெயர் சூட்டப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)



## ஜெயா நினைவிடம் தொடர்பான அனைத்து வழக்குகளும் தள்ளுபடி

சென்னை, ஓக. 9
கருணாநிதி மெரீனா கடற்கரையில் அண்ணா சமாதிக்கு அருகில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று தி.மு. கழகத்தினர் கோரிக்கை வைத்ததால் ஜெயலலிதாவின் சமாதி தொடர்பில் நிலுவையில் இருந்த ஐந்து வழக்குகளையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம்.
திமுக தலைவர் கருணாநிதியின் உடலை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தின் அருகே அடக்கம் செய்ய இடம் ஒதுக்கும்படி முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியிடம் முக ஸ்டாலின் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், மெரினாவில் நினைவிடம் ஒதுக்குவதில் பல சட்ட சிக்கல்கள் உள்ளதால், சென்னை காந்தி மண்டபம் அருகே 2 ஏக்கர் நிலம் ஒதுக்க அரசு தயாராக இருப்பதாக தலைமை செயலாளர் அறிவித்தார்.
மெரினாவில் இடம் மறுக்கப்பட்டதால் திமுக தொண்டர்கள் கொதிப்படைத்தனர். தமிழகத்தில் பல இடங்களிலும் சாலை மறியல் செய்தனர். கருணாநிதி உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ராஜாஜி அரங்கத்தில் குவிந்துள்ள பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் கருணாநிதியின் உடலை மெரினாவில் அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.
இதற்கிடையே, மெரினாவில் ஜெயலலிதா நினைவிடத்துக்கு எதிராக டிராபிக் ராமசாமி உள்ளிட்ட 5 பேர் தொடர்ந்துள்ள வழக்குகளையும் திரும்பப் பெறத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். அண்ணா சமாதி உள்ள பகுதி கடலோர பாதுகாப்பு மண்டலத்துக்குள் வரவில்லை என ஜெயலலிதா நினைவிடத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்த துரைசாமி கூறினார். இதையடுத்து ஜெயலலிதா நினைவிடத்துக்கு எதிரான ஐந்து வழக்குகளையும் தள்ளுபடி செய்தது உச்சநீதிமன்றம். (ம)



# கண்ணீரி

## கருணாநிதி உடலுக்கு

சென்னை, ஓக. 9
தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், தி.மு. கழகத்தின் தலைவரும், முப்பெரும் தமிழ் அறிஞருமான கருணாநிதியின் உடலுக்கு அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், திரையுலகத்தினர், பொதுமக்கள் என்று லட்சக் கணக்கானவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள். "கருணாநிதி மறைவால் தமிழகமே கண்ணீர் சொரிந்தது" என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
கடந்த வருடம் முதல் கருணாநிதி காவேரி மருத்துவ மனையின் மருத்துவக் கண்காணிப்பிலேயே இருந்தார். சுமார் 13 மாதங்களாக செயற்கை சுவாசக் குழாயின் மூலம் சுவாசித்து வந்தார். கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை கருணாநிதிக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கைக் குழாய் மாற்றப்பட்டது. இதையடுத்து அன்றைய தினம் பின்னிரவு அவரின் உடல்நிலை மோசமடைந்தது. 'நோய்த் தொற்று, காய்ச்சல், குருதி அழுத்தக் குறைவு' உள்ளிட்ட நோய்களால் கருணாநிதி பாதிக்கப்பட்டுளார் என்று தெரிவிக்கப்பட்டது. அன்று முதல் அவரின் உடல்நிலை தொடர்ந்து ஏற்ற இறக்கமாகவே இருந்தது. இதனால் கோபாலபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து சென்னை காவேரி மருத்துவ மனைக்கு அவர் உடனடியாகவே மாற்றப்பட்டார்.
கடந்த பத்து நாள்களாக காவேரி மருத்துவ மனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த அவரின் உடல்நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மாலை 6.10 மணியளவில் இவ்வுலக வாழ்வை முடித்துச் சென்றார் கருணாநிதி.
சென்னை ராஜாஜி ஹோலில் நேற்று அதிகாலை 4 மணிமுதல் கருணாநிதியின் உடல் அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், திரையுலகத்தினர், பொதுமக்கள் ஆகியோரின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் பிரதிநிதிகளும், லட்சக் கணக்கான பொதுமக்களும் திரண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.
இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, குடியரசுத் தலைவர், தமிழக முதல்வர் எடப்பாடி, துணைமுதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான அரசியல் தலைவர்கள், கவிஞர் வைரமுத்து, முன்னணி நடிகர்கள் ரஜினி, கமல், ஏனைய நடிகர்கள், பொதுமக்கள் என்று லட்சக் கண்ககானவர்களின் கண்ணீருக்கு மத்தியில் அடக்கமானார் கருணாநிதி. (ம)




## அண்ணா! நீ இ

முதுபெரும் தமிழத் தலைவர் மு.கருணாநிதி எங்கு அடக்கமாவார் என்பதே பெரும் போராட்டமாகத்தான் போய் முடிந்திருக்கிறது.
கருணாநிதியின் உடலை சென்னை - மெரீனா கடற்கரைக்கு அருகில் உள்ள அண்ணா சமாதியில்தான் அடக்கம் செய்ய வேண்டும் என்று ஏன் தி.மு. கழகம் விடாப் பிடியாக நின்றது. ஆம், கருணாநிதி அண்ணாவின் மீது வைத்திருந்த அன்பும் பற்றும் அத்துணை பெரியவை. அண்ணாவின் மறைவின் போது கலைஞர் கருணாநிதி எழுதிய கவிதை அனைத்தையும் அப்படியே புடம்போட்டுக் காட்டும் அந்தக் கவிதை கீழே பிரசுரமாகிறது.

*பத்துச் சிலை வைத்ததினால் அண்ணன் தமிழின்பால் வைத்துள்ள*
*பற்றுதலை உலகறிய அண்ணனுக்கோர் சிலை சென்னையிலே வைத்தபோது..*
*ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்.*
*ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்*
*அய்யகோ இன்னும்*
*ஓராண்டே வாழப்பே*
*ஓர் விரல் காட்டியது*
*எம் அண்ணா... இதய*
*படைக் கஞ்சாத் தம்பி*
*பகர்ந்தாயே;*
*எமை விடுத்துப் பெ*
*தொடர்ந்தாய்?*
*உன் கண்ணொளியில்*
*தோமே;*
*எம் கண்ணெல்லாம்*
*டாய்?*
*நிழல் நீதான் என்றிரு*
*நிலத்துக்குள் நிழல்*
*நியாயந்தானா?*
*நான்தானடா நன்முத்*
*கடற்கரையில் உறங்கு*
*நாத இசை கொட்டுகி*
*நாவை ஏன் சுருட்டிக்*
*விரல் அசைத்து எழுத்*
*விந்தைகளைச் செய்த*
*விரலை ஏன் மடக்கிக்*

# ரில் தமிழகம்

## கு லட்சக்கணக்கானோர் அஞ்சலி








## அப்பா என்று அழைக்கவா? ஸ்டாலின் உருக்கக் கடிதம்

சென்னை, ஓக. 9

"தலைவரே தலைவரே என்று அழைத்துப் பழகிய நான் ஒரே யொரு தடவையாவது அப்பா என்று அழைக்கவா" என்று உணர்ச்சி பொங்க கருத்துப் பகிர்ந்திருக்கிறார் தி.மு. கழகத்தின் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின்.

தி.மு. கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி நேற்றுமுன்தினம் மாலை 6.10 மணியளவில் சென்னை காவேரி மருத்துவமனை யில் உயிரிழந்தார். அவரின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் என்று பலரும் அஞ்சலி செலுத்திவரும் நிலையில் ஸ்டாலின் கடிதம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "எங்கு சென்றாலும் சொல்லிவிட்டுச் செல்லும் எனது ஆருயிர்த் தலைவரே, இம் முறை ஏன் சொல்லாமல் சென்றீர்கள்? என் உணர்வில், உட லில், குருதியில் சிந்தனையில், இதயத்தில் இரண்டறக் கலந்து விட்ட தலைவா! எங்களையெல்லாம் இங்கேயே ஏங்கவிட்டு எங்கே சென்றீர்கள்?

"ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கி றான்" என்று நினைவிடத்தில் எழுத வேண்டும் என்று 33 ஆண் டுகளுக்கு முன்பே எழுதினீர்கள். இந்த தமிழ் சமூகத்துக்காக இடையறாது உழைத்தது போதும் என்ற மனநிறைவுடன் புறப் பட்டு விட்டீர்களா?

95 வயதில், 80 ஆண்டு பொதுவாழ்வுடன் சளைக்காமல் ஓடி, 'நாம் தாண்டிய உயரத்தை யார் தாண்டுவார்கள் பார்ப்போம்' என்று போட்டி வைத்துவிட்டு மறைந்து காத்திருக்கிறீர்களா?

திருவாரூர் மண்ணில் உங்கள் 95ஆவது பிறந்தநாளாம் ஜூன் 3ஆம் நாள் நான் பேசும்போது, "உங்கள் சக்தியில் பாதியைத் தாருங்கள்" என்றேன். அந்த சக்தியையும், பேரறிஞர் அண்ணா விடம் நீங்கள் இரவலாகப் பெற்ற இதயத்தையும் யாசிக்கிறேன்; தருவீர்களா தலைவரே!. அந்தக் கொடையோடு, இன்னும் நிறை வேறாத உங்கள் கனவுகளையும் லட்சியங்களையும் வென்று காட்டுவோம்!

கோடானு கோடி உடன்பிறப்புகளின் இதயத்திலிருந்து ஒரு வேண்டுகோள்... ஒரே ஒருமுறை... "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" என்று சொல்லுங்கள் தலைவரே! அது ஒரு நூறாண்டு எங்களை இனமொழி உணர்வோடு இயங்க வைத்திடுமே!

"அப்பா அப்பா" என்பதைவிட, "தலைவரே தலைவரே" என நான் உச்சரித்துதான் என் வாழ்நாளில் அதிகம். அதனால் ஒரே ஒரு முறை இப்போது "அப்பா" என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே? கண்ணீருடன் மு.க.ஸ்டாலின்" என்று அந்தக் கடி தத்தில் குறிப்பிட்டுள்ளார் மு.க.ஸ்டாலின். (ம)

# இருக்கும் இடம்தேடி நான் வருகையில்...

வாழப்போகின்றேன் என்று அவர்
ட்டியது இன்றன்றோ புரிகிறது!
... இதயமன்னா...
த் தம்பியுண்டென்று

துப் பெரும் பயணத்தை ஏன்
ப்?
ணாளியின் கதகதப்பிலே வளர்ந்

ல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்

என்றிருந்தோம்; நீ கடல்
நிழல் தேடப் போய்விட்டாய்:
ா?
நன்முத்து எனச் சொல்லி
ல் உறங்குதியோ?...
காட்டுகின்ற
ருட்டிக் கொண்டாய்?
து எழுத்துலகில்
ச் செய்தாயே; அந்த
மடக்கிக் கொண்டாய்?

கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்.. இன்று
மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்:
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா
எழுந்து வா எம் அண்ணா
வரமாட்டாய்; வரமாட்டாய்,
இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா நீ
இருக்குமிடந்தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான்வரும் போது கையோடு கொணர்ந்து
அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?"

என்றவாறாக அமைகிறது அந்தக் கவிதை. (ப)



# கலைஞரின் 8 மேற்கோள்கள்!

- முடியுமா எம்மால் என்பது தோல்விக்கு முன்புவரும் தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கான தொடக்கம்.
- தோழமையின் உயிர்த் துடிப்பே துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதில்தான் இருக்கிறது.
- சிரிக்கத் தெரிந்த மனிதன்தான் உலகத்தின் மனிதத் தன்மைகளை உணர்ந்தவன்.
- துணிவிருந்தால் துக்கமில்லை. துணிவில்லாதவனுக்கு தூக்கமில்லை.
- குச்சியை குச்சியால் சந்திக்க வேண்டும், கூர்வாளை கூர்வாளால்தான் சந்திக்க வேண்டும்.
- வாழும்போது மனிதர்களை பிரித்து வைக்கும் சாதிவெறி, அவர்கள் இறந்தபிறகாவது தணிந்து விடுகிறதா?
- அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஒரு அடிமை இருக்க வேண்டுமென்று கருதினால், உரிமைகளைப் பற்றிப் பேச அவனுக்கு உரிமையே கிடையாது.
- புத்தகத்தில் உலகத்தைப் படித்தால் அறிவு செழிக்கும்; உலகத்தையே புத்தகமாக படித்தால் அனுபவம் தழைக்கும்.





# கலைஞர் கருணாநிதிக்கு திரையுலகினர் அஞ்சலி

காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த திமுக தலைவர் கருணாநிதி நேற்றுமுன்தினம் மாலை காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். ராஜாஜி அரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் உடலுக்கு நடிகர் ரஜினிகாந்த், கமல்ஹாசன், சிவகுமார், அஜித், சூர்யா, விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன், கவுண்டமணி, விவேக், வடிவேலு உள்ளிட்ட பல்வேறு நடிகர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

'சர்கார்' படப்பிடிப்புக்காக நடிகர் விஜய் அமெரிக்கா சென்றுள்ளதால் அவர் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. மேலும் கருணாநிதி மறைவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, 'சர்கார்' படத்தின் படப்பிடிப்பும் பாதியில் நிறுத்தப்பட்டதாக படக்குழு அறிவித்துள்ளது. அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வரும் விஜயகாந்தும் கண்ணீர் மல்க கருணாநிதிக்காக இரங்கல் தெரிவித்து காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## twitter

கலை (ஞர்) சரிந்தது...
கழகம் இழந்தது...
கதிர் மறைந்தது...
காவியம் முடிந்தது...
கனல் மூண்டது...
கலைகள் மறைந்தது...
கற்பனை உறைந்தது...
கடலலை ஓய்ந்தது...
கட்டுமரம் கவிழ்ந்தது...
கற்பூரம் கரைந்தது...
கறையான் அரித்தது...

## இன்டர்நெட் இல்லாத வாழ்க்கை இப்படித்தான் இருந்தது




சந்தோசமாகவும் ஆரோக்கியமாகவும்

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | | 8 |
| | | | | | 7 | 6 | | |
| 4 | 5 | | | | 3 | | | |
| 8 | | | | | | | | |
| | | 4 | | | 6 | | 2 | |
| | | | 8 | 3 | | | | |
| | | | | 4 | | | 8 | |
| 6 | | 7 | 1 | | | | | |
| | | 3 | | | 2 | 9 | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 8 | 7 | 5 |
| 9 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 | 4 | 1 |
| 8 | 1 | 5 | 7 | 4 | 6 | 3 | 9 | 2 |
| 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 6 | 4 |
| 4 | 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 3 | 8 |
| 5 | 6 | 1 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 9 | 6 | 2 | 1 | 8 | 4 | 5 | 3 |
| 3 | 2 | 8 | 5 | 6 | 4 | 9 | 1 | 7 |
| 1 | 5 | 4 | 3 | 9 | 7 | 2 | 8 | 6 |

நேற்றைய விடை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதியவர்களிடம் நிதானித்து பழகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க புதிய உபாயம் பின்பற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். வருமானம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** சிறிய செயலையும் மிகுந்த நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி நிலை உருவாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நல்ல செயலுக்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும்.

**கன்னி:** மற்றவர் மதிக்கும் விதத்தில் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதிய திட்டம் உருவாக்குவீர்கள்.

**துலாம்:** மனதில் சஞ்சலம் உருவாகி மறையும். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனை சீராகும். பண வரவு சுமாராகக் கிடைக்கும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** குடும்பத்தினரிடம் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவது அவசியம்.

**தனுசு:** உறவினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை புதிய உத்தியில் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை பெறுவீர்கள். திட்டமிட்ட உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். கூடுதல் பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** கடந்த கால நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்திகளை பயன்படுத்துவீர்கள். இலாபம் கூடும்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்வது நல்லது.

சாவு, மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு

கார்ல் மார்க்ஸ் ஒரு நூலகம், லெனின் அதன் செயலகம்

## நாளை


**10.08.2018**

வெள்ளிக்கிழமை

ஆடி 25

திதி: சதுர்த்தசி மு.இ. 06.54 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ. 3.49 வரை
சுபநேரம்: 06.04 – 07.34 வரை
ராகுகாலம்: 10.34 – 12.04 வரை

நின்று போன மூச்சும் வென்று காட்டியது



# பச்சை பச்சையாக...



ஒரு நாட்டில் பணக்காரப் பிரபு ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு தடவை கண்ணில் வலி ஏற்பட்டது. அந்த வலியை அவரால் தாங்க முடியவில்லை. பல மருத்துவர்களிடம் கண்ணைக் காண்பித்தார். ஆயினும் வலி தீரவில்லை. கடைசியில் ஒரு துறவி அவரிடம் வந்தார். அவரிடம் தன் கண்ணின் நிலைமையைச் சொல்லி அழுதார் அந்தப் பிரபு. துறவியோ "ஒன்றும் பயமில்லை. இது சுலபமாகக் குணமாகிவிடும். நீங்கள் சிலகாலம் பச்சை நிறமாக இருக்கும் பொருள்களை மட்டுமே பார்க்க வேண்டும். அவ்வளவுதான். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

துறவியின் இந்தச் சிகிச்சையோ விநோதமாக இருந்தது. ஆனால் எளிதாகப் பின்பற்றக் கூடியதுதானே! பிரபுவோ உடனடியாக வீடுகளுக்கு சாயம் (சீந்தை) அடிக்கும் தொழிலாளிகளை வரவழைத்தார். பிரபு தான் பார்க்கும் இடங்களில் எல்லாம் (மாளிகையின் சுவர்கள் உட்பட) பச்சை நிறச் சாயத்தை அடிக்கச் சொன்னார். உண்ணும் உணவைத் தவிர மற்றெல்லாம் பச்சையாக்கப்பட்டன. எங்கு நோக்கினும் பச்சை! ஒரே பச்சை! பீப்பா பீப்பாவாக பச்சைச் சாயம் (தீந்தை)எப்பொழுதும் அவரது மாளிகையில் தயாராக இருக்க ஆரம்பித்தது. எப்பொழுதும் எதைப் பார்த்தாலும் அது பச்சையாக இருக்க வேண்டுமே!

சில நாள்கள் கழிந்தன. மீண்டும் பிரபுவைக் காண அந்தத் துறவி அங்கு வந்தார். அவரை முன்னதாகவே வாசலில் பார்த்த காவலர்கள் ஓடோடிச் சென்று பச்சை நிறச் சாயத்தை எடுத்து வந்து அவர் மீது தெளித்தனர். ஏனெனில் அவர் காவி ஆடை அணிந்திருந்தார். ஆதலால் அவரைப் பச்சையாக்கி விட்டனர். அவர்களின் இந்தச் செயலைப் பார்த்த துறவி சிரித்தார். உடனே "அடடா உங்கள் பிரபு எல்லாவற்றையும் பச்சையாகப் பார்க்க வேண்டும் என்பதற்காகவா இந்தப் பாடு? இப்படி நீங்கள் உலகத்தையே பச்சையாக்குவதற்குப் பதில் ஒரு பச்சை நிறத்துக் கண்ணாடியை வாங்கி அவர் அணிவதற்கு கொடுத்திருக்கலாமே?முழு உலகையும் பச்சை ஆக்குவது சாத்தியமா என்ன?என்று கேட்டுவிட்டு முட்டாள் பிரவுக்கு ஏற்ற முட்டாள் சீடர்கள் என்று மனதுக்குள் சிரித்தபடி சென்றார்.

## ஒரு வரியில் ஒரு நொடி

1. கையில் தவழும், பையில் உறங்கும்
2. உயர்ந்த கொம்பில், மலர்ந்த பூ.
3. அள்ளலாம், கிள்ள முடியாது.
4. எள்ளிலும் சின்ன இலை.
5. செம்பு நிறை சிவப்பு மாணிக்கம்.
6. நான்கு கால் உண்டு, நடுவில் உடல் இல்லை.
7. பறக்கும், ஆனால் பறந்து போகாது.
8. தண்ணீரில் நீந்தும், தரையில் தத்தும்
9. உச்சிக் கிளையில் ஒரு முழக்குச்சி.
10. குட்டி போடும் குவலயத்தில் பறக்கும்.
11. சின்னப் பையனுக்குப் பெரிய தொப்பி.
12. முத்துப் பையனுக்குப் பெரிய தொப்பி.
13. வெயிலில் உண்டாகி, காற்றில் உலரும்.
14. முதுகு கூனல், வயிறெல்லாம் பற்கள்.
15. மணியடித்தால், மலைப்பாம்பு நகரும்.


### விடைகள்

1. காசு
2. குடை
3. தண்ணீர்
4. விடத்தல் இலை
5. மாதுளம் பழம்
6. கட்டில்
7. பட்டம்
8. தவளை
9. முருங்கைக்காய்
10. வெளவால்
11. தீக்குச்சி
12. சோளன்பொத்தி
13. வியர்வை
14. அரிவாள்
15. புகையிரதம்

## கீழுள்ள எழுவாய், பயனிலைச் சொற்களைப் பயன்படுத்தி 10 வாக்கியங்களை அமைக்குக

குயில், அவன், மாலா, குரைத்தது, சென்றார், பறந்தன, விளையாடினாள், கூவியது, கற்பித்தார், பறவைகள், நாய், அடித்தாய், படித்தான், ஓடினோம், நீங்கள், அப்பா, ஆசிரியர், நாம், நீ, வருவீர்களா?

1. ------------------------------
2. ------------------------------
3. ------------------------------
4. ------------------------------
5. ------------------------------
6. ------------------------------
7. ------------------------------
8. ------------------------------
9. ------------------------------
10. ------------------------------




## காந்தம்

அழுத்தமான ஒரு பொருளை, இன்னொரு பொருள் எதுவித கொழுக்கியுமின்றிக் கவர்ந்து இழுத்துத் தன்னுடன் ஒட்ட வைத்துக்கொண்டால் அதனைக் காந்தம் என்பர். இயற்கையிலே சில பொருள்களுக்கு காந்தத் தன்மை உண்டு. பூமியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மக்னட்டைட் என்ற கனிப்பொருள் காந்தத் தன்மை கொண்டது. மக்னட்டைட்கொண்ட பாறை இரும்பைக் கவர்ந்திழுத்துக் கொள்ளும். இது இயற்கைக் காந்தமாகும். இரும்பு, உருக்கு, நிக்கல் முதலிய பொருள்களைக் காந்தத் தன்மைகொண்டதாக மாற்ற முடியும். அவற்றைச் செயற்கைக் காந்தம் என்பர். மின்சாரம் மூலம் இயங்கும் "எலக்றோ மக்னட்" எனப்படும் மின்காந்தங் கள் கழிவு இரும்புகளைத் தூக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. எல்லாப் பொருள்களையும் காந்தமாக மாற்ற முடியாது. அதேபோல எல்லாப் பொருள்களையும் காந்தத்தால் கவர்த்திழுக்கவும் முடியாது. நிலக்கரி யையோ, செம்பையோ காந்தம் கவர்ந்திழுக்காது. காந்தத்தின் ஒரு முனை வடமுனை எனப்படும். மறுமுனை தென்முனை எனப்படும். ஒவ்வொரு காந்தத்தின் வடமுனையும் வட திசைநோக்கி திரும்பியே அமையும். பூமியைப் பெரியதொரு காந்தத்துக்கு ஒப்பிடலாம். பூமியில் காந்தக் கவர்ச்சி உள்ளது.

## சில நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| 1.திபெத் | - உலகின் கூரை |
| 2.நோர்வே | - நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு |
| 3. ஜப்பான் | - சூரியன் உதிக்கும் நாடு, காகித வீடு, ரோபோக்களின் நாடு |
| 4. நியூசிலாந்து | - தெற்கேயுள்ள பிரிட்டன் வெள்ளை மேகங்களின் நாடு |
| 5. எகிப்து | - நைல் நதியின் கொடை, நூறு கதவுகளின் நகரம் |
| 6. பின்லாந்து | - ஆயிரம் வாவிகள் கொண்ட நாடு |
| 7.சுவிற்சலாந்து | - ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் ஐரோப்பாவின் தொட்டில் |
| 8. கியூபா | - உலகின் சர்க்கரைக் கிண்ணம் |
| 9. பெல்ஜியம் | - ஐரோப்பாவின் காப்பகம் |
| 10. துருக்கி | - ஐரோப்பாவின் நோயாளி |
| 11. ஆஸ்திரேலியா | - பற்றை வீடு, தங்கப் போர்வை நாடு, கங்காருக்களின் நாடு, தங்கச் சிறகணிந்த பூமி |
| 12. அயர்லாந்து | - மரகதத் தீவு |
| 13. மியன்மார் | - பொற்கோபுர நாடு |
| 14. பிரிட்டன் | - சூரியன் மறையும் நாடு, ரோஜாக்களின் தாயகம் |
| 15. கனடா | - அல்லிப்பூக்களின் நாடு |
| 16. கொரியா | - அதிகாலை அமைதியான நாடு |
| 17. பலஸ்தீனம் | - புனித நாடு |



## வழிகாட்டுவோம்



### நல்ல செயற்பாடுகள் பதினெட்டு

1.பழகு - நாகரிகமாக
2. நட - அதிர்வின்றி
3. பேசு - பணிவாக
4. உண் - அளவாக
5. உடுத்து - அழகாக
7. செயற்படு - அச்சமின்றி
8. உழை - உண்மையாக
9. தூங்கு - அமைதியாக
10. சிந்தி - சுயமாக
11. நம்பு - சரியாக
12. திட்டமிடு- முன்னதாக
13. ஈட்டு - நேர்மையாக
14. சேமி - சிறிதாவது
15. செலவிடு - யோசித்து
16. நேசி - பேதம் கடந்து
17. படி - முடிவின்றி
18. அன்பாயிரு - தாராளமாக

சி.நற்குணலிங்கம்



# 'மத்தியஸ்த சபைகள்'

## பிணக்குகள் தவறுகளில் இருந்து விடுதலை தரும் நிலையங்கள்

**வரையறை**
மத்தியஸ்த சபை என்பது ஒரு நீதிமன்றக் கேட்பல்ல. அதேபோன்று, 'ஆட்களுக்கு தீர்ப்பளிக்கும் செயல்முறை, சான்றளிப்பதற்கு சாட்சிக்காரர்கள் கட்டாயம் அழைக்கப்படும் செயல்முறை, எதுவும் எண்பிக்கப்பட வேண்டிய செயல்முறை, நீதிமன்ற நடவடிக்கை முறையைப் போன்று விதிமுறைப்பட்ட செயல்முறை' போன்ற வகைமாதிரியாகவும் அமையாது. உண்மையில் 'சுய விருப்புடன் ஏற்றுக் கொள்ளக்கூடியதும், பக்கச் சார்பற்றதும், நடுநிலை வகிப்பதும், தீர்மானமெடுக்கும் அதிகாரம் மற்றும் சக்தியில்லாததுமான மூன்றாம் தரப்பினரின் உதவி கொண்டு சம்பந்தப்பட்ட சகல கட்சிக்காரர்களினதும் சமமான பங்களிப்போடு பிணக்கின் மூலகாரணியை அகற்றும் நோக்கம் சாத்தியமாகும் போது தொடர்புகளை மீளமைப்பதற்கும், சுமூகமான தீர்வைத் தேடும் உதவியளிக்கப்பட்ட கலந்துரையாடல் செயல் வழி' ஆக மத்தியஸ்தம் என்பது அமையும்.

**இயல்பு**
'செலவற்ற இணக்கப்பாடு, விரைந்த இணக்கப்பாடு, அந்நியோன்யமாக திருப்தி தரும் முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருத்தல், தமக்கேயான தீர்வுகளுக்கு தாமே வருதல், திறந்தவர்கள் மிகவும் திருப்தியடைதல், அலைச்சல் இன்மை, அன்பான வார்த்தைகள், குறைவற்ற மரியாதை, இணக்கப்பாடு அனுகூலமாய் இருத்தல்' போன்றவை மத்தியஸ்தத்தின் தன்மைகளாக குறிப்பி டப்படுகின்றன. .

**மத்தியஸ்த சபையின் அமைவும் கட்டமைப்பும்**
மத்தியஸ்த சபைகளுக்கு நீதிமன்றங்களில் இருந்தும், பொலிஸ்நிலையங்களிலிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் பிணக்குகள், தவறுகள் ஆற்றுப்படுத்தப்படும். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒவ்வொரு மத்தியஸ்த சபை இருக்கும். அவை பெரும்பாலும் பாடசாலைகளிலேயே இயங்கும். வாரத்தில் ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மத்தியஸ்த சபை அமர்வுகள் நடைபெறும். பிணக்காளர் எந்த பிரதேச செயலர் பிரிவில் வசிக்கிறாரோ அல்லது பிணக்கு ஆதனம், சொத்து எந்தப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டதோ அங்குள்ள மத்தியஸ்த சபையில் பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.



ஆற்றுப்படுத்தும் போது உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் இருபகுதியினரதும் முழுப்பெயர், விலாசம், கிராம சேவையாளர் பிரிவு உள்ளடங்கலாக பிணக்கு அல்லது தவறின் தன்மையும் விளக்கமாக குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் மத்தியஸ்த சபையால் வழங்கப்படும் படிவத்தில் ஐந்து ரூபா முத்திரையிட்டு பிணக்காளர் ஒப்பமிட்டு தவிசாளரிடம் வழங்க வேண்டும்.
பிணக்குகள் தவிசாளருக்கு கிடைக்கப்பெற்றவுடன் மத்தியஸ்த சபை மூவர்கொண்ட ஒரு மத்தியஸ்த குழாமை உருவாக்கும்.
இக்குழாம் பிணக்காளர்களது விருப்பத் தெரிவின் பெயரிலும் அமைக்கப்படலாம். மத்தியஸ்த மாநாட்டில் ஒரு வழக்குரைஞரோ அல்லது வேறெந்த நபரோ பிணக்காளர் சார்பில் பங்குபற்ற முடியாது. ஆனால் ஒரு வாழ்க்கைத்துணை சார்பில் மற்ற வாழ்க்கைத்துணை, சிறுவர் அல்லது வலது குறைந்த ஒருவருக்காக பெற்றார் அல்லது பாதுகாவலர் பங்குபற்றலாம். இணக்கம் காணப்பட்டால் "தீர்க்கப்பட்ட சான்றிதழ்", இணக்கம் காணப்படாதவிடத்து "தீர்க்கப்படாத சான்றிதழ்" உரியவர்கள் தவறாது சமூமளித்ததன் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். காலம் தாழ்த்திப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளல் நன்று.
மத்தியஸ்த சபையின் உறுப்பினர்கள் தொடர்பாக, அரச தலைவரால் நியமனம் செய்யப்படும் மத்தியஸ்த சபை ஆணைக் குழு மத்தியஸ்தர்களாக நியமனம் பெறுவதற்கான ஆள்களை நியமனம் செய்யும். மத்தியஸ்தர்கள் அரசியல் சார்புடையவர்களாக இருக்க முடியாது. நியமனத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு எழுத்துப் பரீட்சையும் நடத்தப்படும். இதன்வழியே மத்தியஸ்த குழுக்கள் நியமிக்கப்படும். இவர்களுடைய பதவிக்காலம் மூன்று வருடங்களாக அமையும். பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்றவர் தவிசாளராக நியமிக்கப்படுவார். ஒருவர் இரு தடவைக்கு மேல் தவிசாளராகப் பதவி வகிக்க முடியாது. இவ்வாறு உருவாக்கப்பட்ட மத்தியஸ்த சபைகள் தொடர்பில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் மத்தியஸ்தர்கள் அதிக எண்ணிக்கையான பிணக்காளர்களுக்கு திருப்தியளிக்கக்கூடிய வகையில் தீர்வை முன்வைத்துள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

> மத்தியஸ்த சபையின் உறுப்பினர்கள் தொடர்பாக, அரச தலைவரால் நியமனம் செய்யப்படும் மத்தியஸ்த சபை ஆணைக் குழு மத்தியஸ்தர்களாக நியமனம் பெறுவதற்கான ஆள்களை நியமனம் செய்யும். மத்தியஸ்தர்கள் அரசியல் சார்புடையவர்களாக இருக்க முடியாது. நியமனத் துக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு எழுத்துப் பரீட்சையும் நடத்தப்படும். இதன்வழியே மத்தியஸ்த குழுக்கள் நியமிக்கப்படும். இவர்களுடைய பதவிக்காலம் மூன்று வருடங்களாக அமையும். பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்றவர் தவிசாளராக நியமிக்கப்படுவார். ஒருவர் இரு தடவைக்கு மேல் தவிசாளராகப் பதவி வகிக்க முடியாது.

**வெற்றிகரமான மத்தியஸ்தம்**
இங்கு வெற்றிகரமான மத்தியஸ்தம் என்பது, 'இரு தரப்பினரும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றுக்கு வருதல், மற்றைய தரப்பினரின் நிர்ப்பந்தத்தினூடாக பிணக்குக்கு ஏதுவாயிருந்த காரணங்கள் மீண்டும் தலைதூக்குதல் தவிர்க்கப்படுதல், இரு தரப்பினருக்குமிடையில் பொருத்தமான விதத்தில் தொடர்புகள் மீள நிலைநாட்டப்படுதல், நீண்ட காலப் பிணக்கு அல்லது தவறு தீர்க்கப்பட்டிருப்பின் தீர்த்து வைத்தல் தொடர்பாக அனைத்துக் கட்சிக்காரர்களும் திருப்தியடைதல்' போன்ற செயல்வழிகளின் ஊடு நியாயமானதும், விவேகமானதும், வினைத்திறன் மிக்கதுமான தீர்வை கண்டடைதலை சுட்டிநிற்கிறது.

**ஆற்றுப்படுத்தப்பட முடியாத பிணக்குகள்**
'திருமணப் பிணக்குகள், சித்த சுவாதீனமற்ற ஆள்கள், பராயமடையாதோர் தொடர்பான விடயங்கள், ஆள்கள், மரணச் சொத்துக்கள் தொடர்பான விடயங்கள், பாதுகாவலர்கள் காப்பாளர்கள் பெறுநர்கள் தொடர்பான விடயங்கள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பான விடயங்கள், பிள்ளைகள் மதவேற்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மதவேற்புத் தொடர்பான விடயங்கள், பிறப்பு இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், பிரிவிடுதல், மரணசாதனம், கடனிறு வகைபறுக் கட்டளைச்சட்டம் தொடர்பான விடயங்கள், கடலாண்மை தேர்தல் மனுக்கள் தொடர்பான ஈட்டுச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், அரசியலமைப்பின் 126ஆம் உறுப்புரிமையின் கீழ் செய்யப்பட்ட நாடாளுமன்ற சிறப்புரிமை மீறுகை தொடர்பான விடயங்கள்' என அத்தனையும் மத்தியஸ்த சபைகளில் ஆற்றுப்படுத்தப்பட முடியாத பிணக்குகளாக குறிப்பிடப்பட்டுள் ளன. இதனை 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்ட மூன்றாம் அட்டவணை (பிரிவு 7 (1) (ஆ)) குறித்துரைக்கிறது.

**ஆற்றுப்படுத்தக்கூடிய பிணக்குகள்**
இரண்டாம் அட்டவணை 'பிரிவு 7 (1) (இ)' இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், 'பொது இடத்தில் இடம்பெறும் சண்டை, வேண்டுமென்று காயம் விளைவித்தல், வேண்டுமென்று கடுங்காயம் விளை வித்தல், ஆத்திரமூட்டப்படுதலின் மீது கடுங்காயம் விளைவித்தல், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயலொன்றால் காயம் விளைவித்தல், உயிருக்கு அல்லது காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயல் ஒன்றினால் கடுங்காயம் விளைவித்தல், நபர் ஒருவரை முறை கேடாகத் தடுத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல், தாக்குதல் அல்லது குற்றமுறையாக வலிந்து அதிகாரத்தை பிரயோகித்தல், இழப்பானது தனியாள் ஒருவருக்கானதாக இருக்குமிடத்து ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடுதல், விளைவிக்கப்பட்ட இழப்பு அல்லது சேதம் தனியாள் ஒருவருக்காக மட்டும் இருக்கும் வண்ணம் சொத்தழிவை ஏற்படுத்தல், இழப்பானது தனியாளொருவருக்காக இருக்கும் வண்ணம் பத்துரூபா பெறுமதியான ஏதேனும் விலங்கைக் கொலை செய்தல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலம் சொத்தழிவை ஏற்படுத்துதல், இழப்பானது தனியாளொருவருக்காக இருக்கும் வண்ணம் கால்நடை முதலியவற்றைக் கொலை செய்தல் அல்லது உறுப்புக்குறைத்தல் மூலம் சொத்தழிவை ஏற்படுத்தல், குற்றமுறையான அத்துமீறல், வீடத்துமீறல், அவதூறு, சமாதானக் குலைவை ஏற்படுத்தும் உளக்கருத்துடன் நிந்தை செய்தல், குற்றமுறையான அச்சுறுத்தல் மற்றும் நிதி, பணம், காணி தொடர்பான பிணக்குகள்' தொடர்பில் மத்தியஸ்த சபைகளில் ஆற்றுப்படுத்த முடியும்.

**திருப்திகரமான தீர்வை பெறுவோம்**
மத்தியஸ்த சபை நிறுவப்பட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்லும் போது, பிணக்கு தொடர்பான விடயங்கள் எனில் 60 நாள்களிலும், தவறிழைத்தல் தொடர்பான இடர்களுக்கு 30 நாள்களிலும் தீர்வைக் கண்டுகொள்ள வேண்டும்.
அந்தவகையிலே பிணக்காளர், எதிர்பிணக்காளர் ஆகிய இரு பகுதியினரும் வழங்கும் ஒத்துழைப்பின் அடிப்படையில் மகிழ்வான தீர்வொன்றை மத்தியஸ்த சபை ஊடு பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரியத்தக்க பணிப் பெண் ஒருவர் தேவை.

- 075 039 9441, 077 743 7162

**SpiritMAX Engineering (Pvt) Ltd**
Turning your vision into values


அனைத்து விதமான கட்டட நிர்மான வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்
(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)

- Architectural Design
- Geo Technical Investigations
- Structural Design
- MEP Design
- Drafting
- Interior Design
- Cost Estimation
- Supervision
- Construction & Renovation

No. 03, 2nd Lane, Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk

## மரண அறிவித்தல்

### ஸ்ரனிஸ்லஸ் யேசுதாசன் தியோப்பிள்ளை



அன்னை மடியில் 02.09.1942 இறைவன் அடியில் 02.08.2018

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ். சில்லாலை, நோர்வே, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரனிஸ்லஸ் யேசுதாசன் தியோப்பிள்ளை அவர்கள் 02.08.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோப் பிள்ளை - றெபேக்கா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரி லோறா (லண்டன்)வின் பாசமிகு கணவரும் யொகித்தா பமிலா (லண்டன்), சார்வியா கசிலா (லண்டன்), காலஞ்சென்ற அன்ரன் வினோஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பீற்றர் இம்மனுவேல், அன்ரன் அருள் நாயகம் (இலங்கை), சறோசா (இலங்கை), றோசறி (இலங்கை), பற்றிமா (இலங்கை), மதுரநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் டென்ஸ்ரன் றுபேஸ் மரியநாயகம்(லண்டன்) இன் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 08.08.2018 புதன்கிழமை 10.08.2018 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் பி.ப 06:30 மணிமுதல் பி.ப 08:30 மணிவரை H I. Hawes & Son Ltd, 106 Tanners Lane, Ilford IG6 1QE, UK எனும் முகவரியில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின் 11.08.2018 சனிக்கிழமை அன்று மு.ப 08:00 மணிமுதல் மு.ப 09:30 மணிவரை 132, Quebec Road, Ilford, IG2 6AP, UK எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் மு.ப 10:00 மணியளவில் St. Teresa's RC Church, Brook Road, Ilford IG2 7JA, UK ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து மு.ப 11:30 City of London Cemetery & Crematorium, Aldersbrook Road, Manor Park, London E12 5DQ, UK எனும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111
உதயன்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி உருத்திரநாயகி நடராசா



அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருத்திரநாயகி நடராசா நேற்று முன்தினம் (07.08.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இராம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், அனித்தா (லண்டன்), றஜீக்குமார் (ஆஸ்திரேலியா), சுமித்தா ஆகியோரின் பாசமிகு தாயும், சத்தியசேகரன், சஞ்சீவன் ஆகியோரின் மாமியும், கண்ணதாசன், தருமநாயகி, மகேந்திரராசா, விமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், டிதுஷன், ஜிதூஷினி, சஞ்ஜிஜா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.

077 747 4889 (c.12914)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ!



### காசிநாதர் பாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற உதவி திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கேசாவில் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் பாலகிருஷ்ணன் நேற்று (08.08.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, மணிரங்கம்,
கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 487 7836

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18875/15/17)

## INVITATION FOR SELECTION OF INDIVIDUAL EXPERT

### MINISTRY OF MEGAPOLIS & WESTERN DEVELOPMENT
### WORLD BANK FUNDED STRATEGIC CITIES DEVELOPMENT PROJECT
(Credit. No. 5800-LK)

**INDIVIDUAL ASSIGNMENT FOR DEVELOPMENT OF PUBLIC TRANSPORT PROPOSALS AND PREPARATION JAFFNA INTERGRATED MULTIMODAL TRANSPORT PLAN REPORT**

**CONTRACT NO: SCDP/WB/JF/CS/22**

1.0 The Government of Sri Lanka has received financing from World Bank towards the cost of Strategic Cities Development Project (SCDP). As per the need for the selected development interventions for Jaffna City, Ministry of Megapolis & Western Developmentintends to procureExpert for Individual assignment for development of Public Transport proposals and Preparation Jaffna Intergraded Multimodal Transport Plan Report.

2.0 Strategic Cities Development Project has prepared a comprehensive Traffic and Transport database for Jaffna city Transport system under a previous assignments.

3.0 The Strategic Cities Development, Project is now invites individual expertsfor the preparation of reports and concept design for Public Transport infrastructure and Services improvement to the Public Transport System of Jaffna under Jaffna Integrated Multi-Modal Transport Study (JIMMTS)

4.0 The TOR describing scope of the Consultancy Services and the deliverable required can be collected from PMU office at 4th floor, Sethsiripaya, Battaramulla.

5.0 Selection of Individual expert will be done on following criteria.

I. Qualification of the Expert
II. Experience of the Expert (Client's certificate for successful completion of related work of assignments need to be submitted for evaluation purpose).
III. Methodology statement for completion of task given in Terms of Reference (TOR)

6.0 A Consultant will be selected by following Individual Consultant Selection (IC) method in accordance with the procedures set out in the World Bank's Guidelines: Selection and Employment of Consultants by World Bank Borrowers 2011 Edition.

7.0 You are requested to submit your application as per detail requested in para 05 above and cost for assignment (In a separate envelop).

8.0 Sealed proposal must be delivered in duplicate to the address given below no later than 15 00 hrs. (Local time) on August30, 2018.

Project Director,
Strategic Cities Development Project,
Ministry of Megapolis & Western Development,
4th Floor, Sethsiripaya Stage 1,
Battaramulla.

## வீடு / காணி வாங்கவும் விற்பனைக்கும்

யாழ். நகர மையப் பகுதியில் 4 பரப்பு வெற்றுக்காணி 3 பரப்பு தனியாகவும் ஒரு பரப்பு தனியாகவும் நட்சத்திர விடுதி, உள்நாட்டு / வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலை, மாடி வீட்டுத் தொகுதி போன்ற ஏனைய தேவைகளுக்கும்பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு, வடகிழக்கு தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் காணி / வீடு / வாங்கவும்/விற்கவும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**சிந்துஜன் - 077 522 1132 / 077 147 9416**

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 10 . 1963



இறப்பு 07 . 08 . 2018

### திருமதி பிறேமா இந்திரன்

(ஆசிரியர் - யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயம்)

வாராஹி அம்மன் கோயிலடி கொக்குவில் மேற்கு , கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமா இந்திரன் நேற்று முன்தினம் (07.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரவாகு மற்றும் மாணிக்கம், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், இந்திரனின் பாசமிகு மனைவியும், பிறேம்குமார் (லண்டன்), காலஞ்சென்ற சிவகுமார் (செல்வன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பேருஷாளீ (சுவிஸ்), தனுவர்ணன் (மாணவன் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் யாழ்ப்பாணம்), பபிகேசன் ஆகியோரின் அன்புத் தாயும், தீபராஜின் (சுவிஸ்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாராஹி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

077 631 7086 (c.12914)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 12 . 1937



உதிர்வு 21 . 07 . 2017

### அமரர் வல்லிபுரம் பாலசிங்கம்

**திதி: 09.08.2018**

அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நற்குணங்களின் சிகரமாய்
எங்கள் குடும்ப தலைவனாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே நீங்கள்
எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் நீங்காது

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சிறுவிளான், இளவாலை.

**குடும்பத்தினர்.** (CS.11711311-13-17)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு வாகனத்தில் சென்று பொருள் விநியோகிப்பதற்கு முன் அனுபவம் உள்ள வேலையாள்கள் (Delivery Boys)தேவை.

**077 797 8868**

## பணியாளர் தேவை

யாழ்நகரில் பரமேஸ்வரா சந்திக்கு அருகில் இயங்கும் **மின்சார உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு** பணியாள் உடன் தேவை.

021 222 2037 / 077 061 0280

## Vacancies

**for Quantity Surveyor and Technical Assistant**

**1. Quantity Surveyor**

- NVQ Level 4 or Equivalent with two years experience in Building
- Tendering and Estimating
- Bill Preparations

**2. Technical Assistant**

Contact No.: 075 918 3944
E-Mail: shaganaconstruction@hotmail.com


## வேலையாள் தேவை (ஆண்)

திருநெல்வேலியில் இயங்கும் SAMSUNG SINGHAGIRI காட்சியறைக்கு வேலையாள் (ஆண்) தேவை. தகுதியுடையோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 077 916 7260**

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 12 . 1954



இறப்பு 05 . 08 . 2018

### சிவகுரு அரசலிங்கம்

**(குறாஸ் புடைவை கடை உரிமையாளர்)**

பருத்திக்கலட்டி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு அரசலிங்கம் 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுரு - சின்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் இலட்சுமி தம்பதியரின் மருமகனும், சறோஜினியின் அன்புக் கணவரும், அரவிந், அபிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமுதன், துஷனா ஆகியோரின் மாமனும், சண்முகலிங்கம், சிவசோதிலிங்கம், லிங்கேஸ்வரி, லிங்கசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாரா, குட்டி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**குறாஸ் -077 5101092** (c.12914)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2018

(01) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(02) தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

(03) தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

(04) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

(05) தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி III இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

(06) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

(07) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 09.08.2018ம் திகதியிலிருந்து 23.08.2018 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 15.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வற் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

(08) கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 24.08.2018 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

(09) கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்து ஒன்பது – 12.10.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

(10) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.


| தொ. இல | ஒப்பந்த என் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02/PSDG/03/2018 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் Water Proff (50 watt Single Eye COB- LED Street Light) | 0.446 Mn | 01 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 4,500.00 | 09.11.2018 |

(11) கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 16.08.2018 அன்று பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**09.08.2018.**

(ut.33705) 913.17)

## மரண அறிவித்தல்கள்



### இராஜேந்திரன் தயாளன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரன் தயாளன் கடந்த (07.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரன் மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கோணேஸ்வரியின் அன்புக்கணவரும் திவ்யனின் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத்தந்தையும் சசிகலா (கனடா), அமிர்தகலா (கண்டி), ஜெயாளன் (கனடா), சுகந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் குகதாசன் (கனடா), அல்பிரட் (கண்டி), அருள்மதி (கனடா). சிவலீலா (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனரும் தர்சி (கனடா), அம்ரூத் (கொங்கொங்) ஆகியோரின் அன்பு மாமனும் சிந்துஜா சுவதோ (கனடா), கவீனா, பவினா கிருஸ்ணா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் விக்னேஸ்வரி. கணேசலிங்கம் (பிலிப்பைன்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சந்திரகுமாரின் (சுங்க பரிசோதகர் யாழ்ப்பாணம்) சகலனும் கிரியராஜின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணியர்பதிவிதி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில். 077 711 6345**

**தகவல் :**
**குடும்பத்தினர்**



### திருமதி வரதலட்சுமி கந்தசாமி

சுன்னாகம் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலட்சுமி கந்தசாமி 05.08.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, றஞ்சன், சுகுமார், கிருஷ்ணபிள்ளை, தனலட்சுமி மற்றும் அருளானந்தம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணவேணி, ராஜீவன் (டென்மார்க்), ரஜனி, சஞ்ஜீவன், சுமைதி, மாலதி, ஜெயஜீவன் (லண்டன்), ஜீவன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்றவர்களான வேலையா, சந்திரகுமார் மற்றும் ஜெயாழினி (டென்மார்க்), ஈஸ்வரி, ரவிச்சந்திரன், தங்கமயில், தனுஜா. சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரேசன் றோட்,**
**சுன்னாகம்**
**ஜெயஜீவன்** - 075 220 1106
**ஜீவன்** - 071068 4959
**சந்துரு** - 077 711 4007

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs14355)(13,17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 05 . 1936

மறைவு 04 . 08 . 2018

### தம்பிப்பிள்ளை இராமசாமி

(முன்னைநாள் தீவுப்பகுதி பிரதேசசபை தலைவர்,
யாழ். போக்குவரத்துச்சபை நடத்துனரும்,
நவக்கிரி பல நோக்கு கூட்டுறவுச் சபை முகாமையாளரும்,
யாழ். வேலணை சரஸ்வதி மகா வித்தியாசாலை தமிழ் சிறப்பாசிரியர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராமசாமி கடந்த 04.08 2018 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவபாக்கியத்தின் தவப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியத்தின் மருமகனும். மகேஸ்வரியின் அன்புக் கணவரும். கணேசமூர்த்தி. தமிழ்ச்செல்வி, சாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதியின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான கணேஸ். தனலட்சுமி மற்றும் பராசக்தி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவலோகநாதன். சந்திரசேகரம், பரமலிங்கம் ஆகியோரின் சகலனும், சர்வேஸ்வரன், பத்மராணி, சிவசுப்பிரமணியம், சிவசங்கர், மாலிகா, கல்பனா, ஜெயந்தன், சர்மிலன், அருள்ராஜ். சந்திரன், வேணி, மதி. சுகி, பிரகாஷ், காந்தன், மயூரி ஆகியோரின் மாமனும், வெண்ணிலா. பார்த்தீபன். பிரதீபன். தாரகை. பிரகாஸ், பிரசாத், காலஞ்சென்ற பிரதீபா மற்றும் பிரவீணா, பிறேமினி, விஜிதா, பகீரதன், சாலினி. துளசி. சந்திரன், துசி, அஸ்வினி, தயா. மயூரன் ஆகியோரின் பெரிய தந்தையும், சுவேதா, சுமிகா, விதுஷன், பாதுஷா, சச்சின், சுவியா, சுவிகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
021 490 6037
















## மரண அறிவித்தல்கள்

### மகிபாலன் சதீஸ்வரன்

*(நீறோஜன்)*



சங்கரியார் வளவு ஒழுங்கை, மயிலிட்டித்துறையைப் பிறப்பிட மாகவும் சாரையடி, புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகிபாலன் நாகேஸ்வரி தம்பதி களின் செல்வப் புதல்வன் சதீஸ்வரன் (நீறோஜன்) நேற்று (08.08.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் இன்று (09.08.2018) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாரையடி, புலோலி.**
**077 122 4028, 077 617 6933,**
**077 293 8820, 071 059 2233**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 18878/2/8/17)

### திருமதி புஸ்பராணி யோகராசா



அரியாலையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி யோகராசா நேற்று (08.08.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை இரத்தினம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான கதிரவேலு சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற யோகராசாவின் (ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்) அன்புமனைவி யும் சசிகலா (பிரதி அதிபர், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), சசிதரன் (தபால் அதிபர், யாழ்ப்பாணம்), புஸ்பகலா (கனடா), யசந்தன் (கல்வி நிர்வாக சேவை அதிகாரி, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற ரனேஸ் (அதிபர்) மற்றும் வரதலக்ஷ்மி (NAITA, யாழ்ப்பாணம்), பத்மதாசன் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் ஆதித்தன் (சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்), அபிராமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி), திவ்வியன் (கனடா), அட்சயா (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சந்திரசேகரம், இந்திராணி, பிரபாவதி, மனோகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராமச்சந்திரன், இராசலிங்கம், தயாராணி, கமலேஸ்வரி காலஞ்சென்ற திலகராசா மற்றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 138, திருமகள் வீதி,**
**அரியாலை**

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 3435 866**

## அரசமைப்பு...

முன்வைப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கும். வழிநடத்தல் குழுவின் அமர்வு நேற்று இடம்பெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற அமர்வில், மகிந்த அணியான பொது எதிரணியினரும் பங்கேற்றனர். 10 பேர் கொண்ட நிபுணர் குழு அரசமைப்பு வரைவுக்கான நகலை நேற்றுச் சமர்ப்பித்தது. இரண்டு நிபுணர்கள், நகல் வரையப்பட்ட விதத்தில் சில இடங்களில் தம்மால் ஒத்துப்போகாமல் இருக்கக் கூடும். அவ்வாறா இடங்களில் வழிநடத்தல் குழுவின் கடந்த அமர்வில் சமர்பிக்கப்பட்ட தனியான ஆவணத்தை கவனத்தில் எடுக்கவேண்டும் என்று கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். மற்றொரு நிபுணர், அரசமைப்புக்கான வரைவு நகலில், இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சரத்துடன் உடன்படவில்லை என்றும் அது நீக்கப்படவேண்டும் என்று கடிதம் மூலம் வழிநடத்தல் குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளார். நகலைப் பெற்றுக் கொண்ட வழிநடத்தல் குழு அது தொடர்பில் ஆராயவுள்ளது. ஒவ்வொரு கட்சிகளும் தனித் தனியாக அதனை ஆராய்ந்த பின்னர், வழிநடத்தல் குழு மீண்டும் கூடும். அதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. அரசமைப்பு வரைவுக்கான நகலை எப்போது அரசமைப்பு நிர்ணயசபையாக மாற்றப்பட்டுள்ள நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்று வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

வழிநடத்தல் குழுவின் கடந்த கூட்டத்தில் நிபுணர் குழுவால் இரண்டு ஆவணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. வழிநடத்தல் குழு அதனை நிராகரித்திருந்தது. நிபுணர் குழுவின் இரண்டு ஆவணங்களால் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)


**தேவை**

அரைக்கும் ஆலைக்கு வேலை தெரிந்தவர், பழக விரும்புபவர், பொதியிடல், பில்கிளாக், உதவியாளர், சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை. - 077 174 6101


## பகிரங்கக் கேள்வி அறிவித்தல்

வவுனியா தெற்கு, வலயக்கல்வி அலுவலகத்தினால் கீழ்வரும் அலுவலக பழைய கட்டடங்களை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடங்களை 10.08.2018 ஆம் திகதியில் இருந்து 17.08.2018 வரை நேரில் பார்வையிட்டு கேள்விக்கான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000 இனை அலுவலக நாள்களில் பிற்பகல் 03.00 மணிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் செலுத்தி கேள்விப்பத்திரத்தை வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் 17.08.2018 ஆம் திகதி 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை செலுத்திப் பற்றுச்சீட்டினை கேள்வியுடன் இணைத்து 24.08.2018 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விதாரர் சமுகமளிக் கலாம்.

தெரிவு செய்யப்படும் தகைமையுடைய கேள்விதாரர் உரிய அனுமதி வழங்கப்பட்டதும் குறித்த தொகையினை 28.08.2018 இற்கு முன் அலுவலகத்தில் செலுத்தி 05.09.2018 இற்கு முன் குறித்த வேலையை அலுவலக செயற்பாட்டிற்கும், பணியாளர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருள்களை முற்றாக அகற்றுதல் வேண்டும்.

| கட்டடம் | அளவு | மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகை |
|---|---|---|
| அரச விடுதி | 30' X 20' | 100,000.00 |
| சிற்றுண்டிச்சாலை களஞ்சிய அறை | 50' X 20' 40' X 20' | 100,000.00 |

**மு.இராதாகிருஸ்ணன்,**
**தலைவர்,**
**கேள்விச் சபை, வலயக் கல்வி அலுவலகம்,**
**வவுனியா தெற்கு.**

(m 32208) 913.17)

## வரவேற்பறை முகாமைத்துவ (Front office & Reception Management) பயிற்சி நெறிக்கு பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு

**(பயிற்சிக் கட்டணம் முற்றிலும் இலவசம்)**

இலங்கையில் சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ துறைகளில் காணப்படுகின்ற பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக வடமாகாண முதலமைச்சரின் அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனம் ஆகியன இணைந்து, வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ துறைகளில் இலவசமாக பயிற்சிகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கீழ்வரும் பயிற்சிநெறிக்கான பயிலுநர்கள் நேர்முகத்தேர்வின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

| பயிற்சிபாடநெறி | பயிற்சிக் காலம் (மாதம்) | செயல்முறை பயிற்சிக் காலம் (மாதம்) | பயிற்சி நெறிக்காக செலவாகும் மொத்தகாலம் (மாதம்) |
|---|---|---|---|
| வரவேற்பறை முகாமைத்துவம் (Front office & Reception Management) | 1 1/2 | 03 | 4 1/2 |

**இப் பயிற்சி நெறியில் இணையவுள்ள பயிலுநர்கள் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள்:-**

- இலங்கை பிரஜையாக இருப்பதுடன் வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல்.
- ஆகக் குறைந்தது க.பொ.த சாதாரண (O/L) தரக் கல்வி வரைக்கும் கற்றிருத்தல்.
- 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

இப் பயிற்சி நெறிக்கு ஆகக் கூடியது 40 பயிலுநர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுவார்கள். இப்பாட நெறிக்கான வகுப்புகள் யாவும் யாழ். பல்கலைக்கழகத்தின் கட்டட தொகுதியில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இப்பாட நெறியினை முழுமையாக கற்று முடித்தவர்களுக்கு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 21.08.2018 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 09.30மணிக்கு, A9வீதி, கைதடியில் அமைந்துள்ள வடமாகாண முதலமைச்சரின் அமைச்சில் நடைபெறவுள்ளது. மேற்படி நேர்முகத் தேர்வுக்கான அழைப்புகள் அனுப்பப்பட மாட்டாது என்பதுடன் பத்திரிகை விளம்பரம் மூலமான அறிவித்தலையே அழைப்பாக ஏற்று கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் நேர்முகத்தேர்வுக்கு வருகைதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- தேசிய அடையாள அட்டை (பிரதி உட்பட)
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (பிரதி உட்பட)
- கல்விசார் சான்றிதழ்கள் - (O/L)(பிரதி உட்பட)
- வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மேலதிக தகவல்களுக்கு 0775188773 / 0212057119 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பேராசிரியர்.க.தேவராஜா,
தலைவர்,
சுற்றுலாப் பணியகம்,
வடமாகாணம்.

(C 32209/16)

## அறிஞர்...

விடத்துக்கு வலது பக்கத்தில் அடக்கமானார். தமது பாசத் தலைவனுக்கு ஒட்டுமொத்தத் தமிழகமும் திரண்டு பிரியாவிடை வழங்கியது என்றால் அது மிகையில்லை.

காவேரி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மாலை 6.10 மணிக்கு உயிரிழந்தார் மு.கருணாநிதி. அவரின் உடலை எங்கு அடக்கம் செய்வது என்பது தொடர்பில் பெரும் சர்ச்சை நீடித்தது. மெரீனா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் நினைவிடம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதால் கருணாநிதியின் உடலை மெரீனாவில் அடக்கம் செய்ய முடியாது என்று தமிழக அரசு தெரிவித்தது. இதையடுத்து ஜெயலலிதா நினைவிடம் தொடர்பில் தொடரப்பட்ட ஐந்து வழக்குகளையும் திரும்பப் பெற்றுவிட்டு நீதிமன்றத்தின் உதவியை நாடியது தி.மு.க. நீதிமன்றத்தின் தீர்ப்பு தி.மு. கழகத்துக்கு சார்பாக வந்தது. இதையடுத்து பேரறிஞர் அண்ணாவின் வலது பக்கத்தில் கலைஞருக்கு சமாதி அமைக்கப்பட்டது.

கருணாநிதியின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட ராஜாஜி அரங்கில் இருந்து மாலை 4 மணியளவில் அண்ணா சமாதியை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது. சுமார் ஒன்றரை மணிநேரம் வழியெங்கும் மலர்கள் தூவ, முழு இராணுவ மரியாதையுடன், லட்சக்கணக்கான தொண்டர்களின் அழுகுரல்களுக்கு மத்தியில் அண்ணா சமாதியை வந்தடைந்தார் கலைஞர். மாலை 6.30 மணியளவில் இறுதிச்சடங்குகள்நடைபெற்றுகுடும்பத்தினர், அரசியல் பிரதிநிகள், திரையுலகத்தினர், தொண்டர்கள் என்று லட்சக் கண்ககானவர்களின் கண்ணீருக்குள் அடக்கமானார் கருணாநிதி. (ம)

தொடர்புடைய செய்திகள் பக்கம் 14,15

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா மாணிக்கராசா

**(ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர்)**



கல்லுவத்தையைப் பிறப்பிடமாகவும், (கரவெட்டி) கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மாணிக்கராசா ( ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர்) நேற்று (08.08.2018) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் 'ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**கரணவாய் கிழக்கு, கரவெட்டி.** **குடும்பத்தினர்.**



### திருமதி இரத்தினம்மா அருளம்பலம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா அருளம்பலம் நேற்று (08.08.2018) புதன்கிழமைகனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் முருகேசு - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும் சாந்தனலட்சுமி (சறோ - கனடா), சிவசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற செல்வரத்தினம், சிவராசா (கனடா), தவராசா (கனடா), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் ரஞ்சினி, நிர்மலா தேவி, ராதா, கமலாராணி, சுபாசினி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற இராசையா, செல்லம்மா, கந்தையா, பொன்னுத்துரை, இராசரட்ணம் மற்றும் கண்மணி, சபாரட்ணம் (சீனன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொட்டைக்காட்டு லேன்,**
**கோண்டாவில் கிழக்கு.**

**தகவல்:**
**ஜீவராஜ் (பேரன் - ராஜ்)**

(C7409/8/17)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பிரசாந்தி சுதாகரன்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரசாந்தி சுதாகரன் கடந்த (06.08.2018) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஆனந்தராசா - சுமதி தம்பதியரின் அன்பு மகளும், அரியநாயகம் காலஞ்சென்ற இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுதாகரனின் (கண்ணன் - லண்டன்) அன்பு மனைவியும், சுபீசன் (லண்டன்), சஹானா (லண்டன்) ஆகியோரின் தாயும், சியாமளா (கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்), பிரியதர்சினி (உதவி ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேஸ்வரன் (ஜேர்மன்), பவானி, சாந்தினி (ஜேர்மன்), காலஞ்சென்ற தயானி மற்றும் சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறை, நெல்லண்டை வீதி, தும்பளை எனும் முகவரியில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நெல்லண்டை வீதி, தும்பளை,**
**பருத்தித்துறை.**
**077 8211295**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs14355)(13/15,17)

### திருமதி கதிரமலை நவமணி



மண்ணில் 21.07.1934 விண்ணில் 07.08.2018

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலை நவமணி கடந்த (07.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சுந்தரம் (ஆச்சி) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அப்பச்சி முத்துப்பிள்ளை (கந்தரோடை) தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற அப்பச்சி கதிரமலையின் (ஓய்வு பெற்ற படவரைஞர், கந்தரோடை) அன்புமனைவியும் ஜெயலட்சுமி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), சோதிமதி (வவுனியா), சிறிபரம் (London), தயாளினி (கொழும்பு) கேதீஸ்வரி (Holland) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி (உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), நகுலேஸ்வரம்பிள்ளை (ஓய்வு பெற்ற உதவி தொழில் ஆணையாளர், வவுனியா) மற்றும் அலிசன், கனேந்திரன் (கணக்காளர், சென். தோமஸ் கல்லூரி கொழும்பு), தயாபரன் (Holland) ஆகியோரின் அன்பு மாமியும் கஜதாரணி (ஆசிரியை, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), ரகுலவரணி (ஆசிரியை, முழங்காவில் மகாவித்தியாலயம்), யுதீஸ், நிகர்ஜன் (மாணவன், 2019 கலைப்பிரிவு ஸ்கந்தவரோதயாக்கல்லூரி), Dr. திருமகள் - Dr. திருவருட்செல்வன், Dr. யசீவன் - Dr. விஜய தர்சினி, அரவிந் (Eng) - சோபனா (Australia), மயூரி, லினேஸ், நாராயணி, விதுஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் திருக்கார்த்திகன், ராகவர்ஷனி, சப்தகன், சேயோன், ஹர்சன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), வேலாயுதம்பிள்ளை (ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் கொழும்பு) மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற முகாமையாளர், மரக்கூட்டுத் தாபனம்), துரைசிங்கம் (ஓய்வு பெற்ற விளையாட்டு அதிகாரி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு இல.24, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**





# ஆடி வேல் திருவிழா





ஆடிவேல் திருவிழாவை முன்னிட்டு அலங்காரக் கந்தன் தலைநகர் கொழும்பின் பிரதான வீதிகளில் ரத பவனி வந்தார். இதன் போது செலான் வங்கியின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள வீதி வழியாக திருவீதியுலா வந்த ரத பவனியை செலான் வங்கியின் பணிப்பாளரும் முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன,வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினர் மற்றும் ஊழியர்கள் வரவேற்றனர். அலங்காரக் கந்தனை பக்திபூர்வமாக வழிபாடு இயற்றினர்.

கதிர்காம கந்தன் ஆலய திருவிழாக்காலத்தில் ஆடிவேல் திருவிழா ஏற்பாடு செய்யப்படுவதுடன் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆடிவேல் திருவிழா 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் உள்ள செட்டியார் சமூகத்தினரால் அறிமுகம் செய்யப்பட்டது. இவர்கள் இந்தியாவின் செட்டிநாடு பகுதியைச் சேர்ந்த வியாபாரிகளாக விளங்குகின்றனர். ஒவ்வோர் வருடமும்அலங்காரக் கந்தன் கொழும்பின் பிரதான வீதிகளில் நான்கு நாள்களுக்கு ரத பவனி வருவதோடு ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கு ஆசி வழங்குகிறார். கதிர்காமத்தில் 14 நாள்கள் இடம்பெறுகின்ற ஆடிவேல் திருவிழாவுக்கு நிகரான் ஒரு வைபவமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

---

## வடக்கு...

என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு அமைச்சரவை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால கட்டளை பிறப்பித்த பின்னர் நடைபெற்ற மூன்று மாகாண சபை அமர்வுகளிலும் இந்த விடயம் எதிரொலித்திருந்தது. இன்றைய அமர்விலும் அது தொடரும் என்று கூறப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் யார் என்று தெரியாத நிலையில், மாகாணசபையில் அமைச்சர்களுக்கான ஆசனம் எப்படி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாணசபைக்கு அமைச்சர்கள் பொறுப்பும், வகையும் கூறவேண்டிய நிலையில் தொடர்ந்தும் மாகாணசபையை அர்த்தமற்ற வகையில் நடத்திச் செல்ல முடியாது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள அவசர கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை தொடர்பில் எழுந்துள்ள நெருக்கடியைத் தணிக்கும் வகையில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் யோசனை முன்வைத்திருந்தார். கடந்த அமர்வில், வடக்கு அமைச்சரவைப் பிரச்சினை தீரும் வரையில் மாகாணசபையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. இதன்போது அவைத் தலைவர், தனது யோசனை தொடர்பில் முதலமைச்சரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெற்று பிரச்சினை தீர்க்கப்படலாம் என்று கூறியிருந்தார். ஆனால், அவைத் தலைவரின் யோசனையை முதலமைச்சர் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## கட்டுக்கதை...

என்று கூறியவர்களை கைது செய்யவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன். அராலியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில். இளைஞர்களும். பொலிஸாரும் இணைந்து மேற்கொள்ளும் சுற்றுக்காவல் நடவடிக்கைக்கு வான் ஒழுங்கு செய்து தரலாம் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட் கிழமை சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

'அராலி. மூளாய் பகுதிகளில் குள்ள மனிதர்கள் அட்டகாசம் என்பது கட்டுக்கதை. அங்கு என்ன நடக்கின்றது என்பதைப் பொலிஸார் விசாரிக்கவேண்டும். அங்குள்ள மக்கள் எவரும் குள்ளமனிதர்களைக் காணவில்லை. ஆனால் ஊடகங்கள்தான் அவ்வாறு சொல்கின்றன" என்று குறிப்பிட்டிருந்தார்.

அராலியில் குள்ளமனிதர்கள் என்று சொல்லப்படும் சம்பவம் தொடர்பில் மக்களுடனான கலந்துரையாடல் பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

கடந்த சில வாரங்களாக அங்கு நடைபெற்ற பாதிப்புக்கள் தொடர்பில் மக்கள் தெரிவித்தனர். குள்ளமனிதர்களைக் கண்டதாக, மாகாண சபை உறுப்பினர் சயந்தன் முன்பாகவும் பொதுமக்கள் குறிப்பிட்டனர். கூட்டத்தின் முடிவில், இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸாரும், இளைஞர்களும் இணைந்து சுற்றுக்காவல் நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழுவினர் சுற்றுக் காவல் முன்னெடுப்பதற்கு வாகனங்கள் போதாமல் இருந்தால், வான் ஒழுங்கு செய்து தருவதாக சயந்தன் தெரிவித்தார். (5.26)

## கோட்டையில்...

கொழும்பு, ஓக. 9

தொடருந்து சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் நேற்று மாலை 3 மணிக்கு திடீரென தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்தனர். தொடருந்துகள் திடீரென இயங்காததால் பயணிகள் அந்தரித்தனர். கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் பெருமளவான மக்கள் திரண்டனர். தொழிற்சங்கப் போராட்டத்துக்கு எதிராக அவர்கள் கோசங்களை எழுப்பினர். தொடருந்து நிலையப் பொருள்களையும் அடித்து உடைத்தனர். கோட்டை தொடருந்து நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. சிறப்பு அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

இந்தத் திடீர் போராட்டத்தைச் சமாளிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கையில் இறங்கியது. பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தொடருந்து சேவையிலிருந்து ஓய்வுபெற்ற இயந்திரச் சாரதிகள் மற்றும் காப்பாளர்களை பணிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. தனியார் போக்குவரத்துச் சபையினரை. போக்குவரத்து உரிமம் இல்லாது சேவை நடத்தவும் அதிரடி அனுமதியை அரசு வழங்கியது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. தொடருந்து ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு சம்பந்தமான தீர்மானம் நிதி அமைச்சரினால் அமைச்சரவைக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது. தொடருந்துச் சாரதிகள் திடீரென நேற்று மாலை 3 மணிக்கு வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். கொழும்பு புறக்கோட்டையிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் அரசு மற்றும் தனியார் பேருந்துகளையும் ஊழியர்கள் தடுத்து வைத்திருந்தனர்.

கொழும்பு புறக்கோட்டையில் பயணிகள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அத்தோடு ஒல்கொட் மாவத்தை மற்றும் முதாலம் குறுக்குத்தெரு பகுதியில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.


கொழும்பு புறக்கோட்டையில் திரண்ட மக்கள், தொடருந்து தொழிற்சங்கப் போராட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். தொடருந்து சேவையை உடனடியாக தனியார் மயப்படுத்தவேண்டும் என்று மக்கள் கோசங்கள் எழுப்பினார்கள். தொடர்ந்து உணர்ச்சி மேலீட்டால், தொடருந்து நிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தினர். நிலமை மோசமாகியதையடுத்து சிறப்பு அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

தொடருந்து ஊழியர்களின் போராட்டத்தால் எழுந்துள்ள நிலமையைச் சமாளிக்க ஓய்வுபெற்ற தொடருந்து இயந்திரச் சாரதிகளை இன்று காலை 6.00 மணிக்கு சேவைக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் போராட்டம் நிறைவடையும் வரையில். போக்குவரத்து உரிமம் இல்லாது எந்தத் தடத்திலும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடலாம் என்று அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு புறக்கோட்டையில் ஏற்பட்ட பதற்றமான சூழல் நேற்று முன்னிரவு தணிந்தது. (5)

## ஆடை ஏற்றுமதித் துறை வளர்ச்சி கண்டுள்ளது

*12.1 வீத வளர்ச்சி பதிவானது*



பன்னாடுகளுக்கான இலங்கையின் ஆடை ஏற்றுமதி நடப்பாண்டில் அதிகரித்த வளர்ச்சியை பதிவிட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 12.1 சதவீத வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக, கடந்த ஜூன் மாத காலப்பகுதியில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி ஊடாக 427 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆடை ஏற்றுமதி ஊடான வருமானமாக பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பானது ஐந்து மடங்காக காணப்படுகிறது ஐரோப்பிய சங்க நாடுகள் உள்ளிட்ட பன்னாட்டுச் சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதி அதிகரித்தமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது. (ஓ)

---

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

8/8/2018
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 3.06 | 6,120.69 | 6,117.63 |
| S&P SL20 | 24.70 | 3,311.08 | 3,286.38 |
| வியாபாரப்புரள்வு | | 967,780,100 | 2,101,738,880 |
| உள்நாடு:- கொள்வனவு | | 299,142,720 | 1,184,445,180 |
| விற்பனை | | 875,119,360 | 201,057,024 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 668,637,380 | 917,293,760 |
| விற்பனை | | 92,660,760 | 1,900,681,860 |



| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிலிங்கோ இன்சூரன்ஸ் | CINS.N | 1800.2 | 267,529 | 533,822,220 |
| சம்பத் வங்கி | SAMP.N | 282 | 512,612 | 144,290,875 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 141.00 | 489,083 | 67,921,369 |
| லயன் பிரெவெரி சிலோன் | LION.N | 612.00 | 60,933 | 38,082,527 |
| அமானா வங்கி | ABL.N | 3.10 | 5,995,002 | 18,707,417 |
| ஸ்விஸ் ஸ்டேக் | PARQ.N | 44.00 | 473,222 | 17,727,622 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 176.00 | 98,106 | 17,286,252 |
| றில் ப்ரொபேர்ட்டி | RIL.N | 7.3 | 2,150,556 | 15,699,059 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 123.7 | 111,514 | 13,771,994 |
| சிற்றிசன் டெவலப்மென்ட் பைனான்ஸ் | CDB.N | 80 | 132,704 | 10,616,270 |

Fundamental Analysis - Jaffna
12 August 2018
9.00am-11.30 am at CSE Jaffna Branch
Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 207 |
| பரிமாற்றத்தில் | 221 |
| விலை உழைப்பு | 9.6 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.2 |

# எரிபொருள் விலை அதிகரிக்கும் அபாயம்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9
ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடையை அமெரிக்கா மீண்டும் விரிவுபடுத்தியுள்ளது. எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. 1000 சிசி இயலளவுக்கு குறைந்த வாகனங்கள் மீது விதிக்கப்பட்ட வரி தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
அதிகளவிலான மகிழூர்ந்து இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே மகிழூர்ந்துக்கான வரி அதிகரிப்புச் செய்யப்பட்டது.
எரிபொருளின் விலைகளில் அதிகளவில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது. ஈரான் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா மேலும் விரிவுபடுத்தியுள்ளது. எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலைகளும் அதிகரிக்கக் கூடிய அபாயம் உள்ளது. ஈரானில் இருந்தே அதிகளவில் எரிபொருள்களை கொண்டு வருகின்றோம். இது தொடர்பில் அவதானம் செலுத்தி துரித ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பிலும் அரசு என்ற வகையில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.
அதேபோன்று சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலைமையின் தாக்கத்தினாலும் இலங்கைக்கு அதிகளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றன. இவை அனைத்தையும் அனுசரித்து நாம் செல்ல வேண்டியுள்ளது- என்றார். (5,61)

# மர்மப் பொருள் வெடித்ததில் கை துண்டிப்பு

கிளிநொச்சி, ஓக. 9
முகமாலை தெற்கு கோவானம் பகுதியில் இனந்தெரியாத பொருள் வெடித்ததில் மாணவனது கை மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டுள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.
வேலி அடைப்பதற்கு கட்டை தறிக்கச் சென்ற போதே இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11மணிக்கு இடம்பெற்றுள்ளது. மணிக்கட்டுடன் கையை இழந்த நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாணவன் மாற்றப்பட்டுள்ளான்.
எழுதுமட்டுவாளைச் சேர்ந்த ஜெ.நிதர்சன் (வயது-18) என்ற மாணவனே பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (5,6)

## ஞானசாரருக்கு...

யிட்டது.
குற்றவாளியான ஞானசார தேரர் சுகவீனம் காரணமாக சிறி ஜயவர்தனபுர மருத்துவமனையில் 5 ஆம் இலக்க அறையில் சிகிச்சை பெறுவதாக அவரது சட்டத்தரணி மன்றுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து. உடனடியாக அங்கு சென்று அவரைப் பொறுப்பேற்குமாறு வெலிக்கடைச் சிறை அத்தியட்சருக்கு உத்தரவிடப்பட்டது.
2016ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் இடைநடுவே. கலகம் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டு நீதிமன்றை அவமதித்ததாக அப்போது ஹோமாகம நீதிவானும் தற்போதைய கொழும்பு பிரதான நீதிவானுமாகிய ரங்க திஸாநாயக்க ஊடாக ஞானசார தேரருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் முறையிடப்பட்டிருந்தது.
நீண்ட விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், முறைப்பாட்டாளர் தரப்பு, பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைகளும் தொகுப்புரைகளும் நிறைவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.
ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற தனக்கு சம்பந்தமே இல்லாத வழக்கொன்றில் முன்னிலையாகி நீதிமன்றின் மதிப்பு, சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுத்தமை ஊடாக மன்றை அவமதித்தமை, எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதனை வழிநடத்திய அரசசட்டவாதி திலீப பீரிஸை அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி திட்டி அவமானப்படுத்தியமை, நீதிமன்றின் கட்டளைக்கு செவிசாய்க்காமை, நீதிமன்ற சுயாதீன தன்மைக்கு சவால் விடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அரசமைப்பின் 105 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக சட்டமா அதிபரால் ஞானசார தேரருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நான்கு குற்றச்சாட்டுக்களுமே சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தது.
முதலாவது, இரண்டாவது குற்றங்கள் தொடர்பில் ஞானசார தேரருக்கு தலா 4 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையையும், 3 ஆம் குற்றத்துக்கு 6 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையையும், 4 ஆம் குற்றத்துக்கு 5 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையுமாக மொத்தம் 19 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்ப ளித்தது. அதனை 6 ஆண்டுகளில் அனுபவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
நீதிமன்றில் குற்றவாளியான ஞானசார தேரர் முன்னிலையாகாத நிலையில், அவர் மருத்துவமனையில் உள்ளதை காரணம் காட்டியும், அவர் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யவுள்ளதை காரணம் காட்டியும், தண்டனை நடைமுறைப்படுத்தப்படுவதை தள்ளி வைக்குமாறு ஞானசார தேரரின் சட்டத்தரணி கோரினார். அந்தக் கோரிக்கையை மேன் முறையீட்டு நீதிமன்றம் முழுமையாக நிராகரித்தது.
நீதிமன்ற அவமதிப்பு சம்பவத்துடன் இணைந்ததாக நடந்த, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்யா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் வைத்து திட்டி அச்சுறுத்தியமை தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஓராண்டு கடூழிய சிறைத் தண்டனை விதித்து ஹோமாகம பிரதான நீதிவான் உதேஷ் ரணதுங்க, கடந்த ஜூன் 14 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தார். இந்த வழக்குத் தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ள ஞானசாரர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,71)

## ஆளுநர்...

அவசர கலந்துரையாடலை வடக்கு மாகாண ஆளுநர் குரே ஏற்பாடு செய்துள்ளார்.
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வாள்வெட்டு, கொள்ளை, திருட்டு, போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட விடயங்களை ஆராயும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட் கிழமை மாவட்டச் செயலர் தலைமையில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,105)

## விக்கியை...

டளையைச் செயற்படுத்தாமல் நீதிமன்றை அவமதித்ததாகத் தொடரப்பட்ட வழக்கிலேயே, மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல் (நோட்டீஸ்), அழைப்பாணை (சம்மன்), கட்டளை (ரூலிங்) ஆகிய மூன்றையும் நேற்றுப் பிறப்பித்தது.
வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதற்கு எதிராக பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி இடைக்காலக் கட்டளையைப் பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று கூறியிருந்தது. ஆனால் நீதிமன்றக் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை பா.டெனீஸ்வரன் கடந்த மாதம் 31ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எடுத்துக் கொள்வதா இல்லையா என்று கடந்த 6ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆராய்ந்திருந்தது. நீதியரசர்களான குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜகத் டி சில்வா உள்ளிட்ட குழாம் முன்னிலையில் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
நீதிமன்றின் இடைக்காலக் கட்டளை நடைமுறைப்படுத்தவில்லை. அதனை நடைமுறைப் படுத்த முடியாது என்றும் கூறப்படுகின்றது. நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கையை மலினப்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர். இவ்வாறு மன்றில் எடுத்துக்கூறப்பட்டது.
முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் இருவருக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக உங்களை ஏன் தண்டிக்கக் கூடாது என்ற காரணத்தைக் கூறுமாறு மன்று கோரியுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி மன்றில் மூவரையும் நேரில் முன்னிலையாகுமாறு கூறியுள்ளதுடன், அன்றைய தினம் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரமும் வாசிக்கப்படும்.
இதேவேளை, கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளை அடுத்த மாதம் 10ஆம் திகதி வரையில் நேற்று நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிக்கு, மன்றில் நடைபெற்ற விடயங்களை அவரது கட்சிக்காரருக்குத் தெரியப்படுத்துமாறும் நீதியரசர்கள் கூறினர். (5)

## இளைஞன்...

கரைச் சேர்ந்த ஞானசிங்கம் என்டன் குணசேகரம், இராணுவத்தினரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டார். அவரது உடல் இரு நாள்களின் பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் லெப்ரினன் கேணல் ரொனி பாத்லமியூஸ் (வயது-46), மேஜர் டிக்சன் ராஜமந்திர (வயது-45), கேணல் பியதாசகே பிரியந்த ராஜகருண (வயது-43) ஆகியோர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது. இராணுவத்தினருக்குப் பாதுகாப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றின் அனுமதியுடன் அநுராதபுரம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றது. மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவில் திருகோணமலை மேல் நீதிமன்றுக்கு வழக்கு மாற்றப்பட்டு விசாரணை நடைபெற்றது.
கொலை செய்யப்பட்ட நபரின் உடலில் 21 இடங்களில் காயங்கள் இருந்தன என்று சட்ட மருத்துவ அதிகாரி மன்றில் தெரிவித்திருந்தார்.
அந்த நபர் மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்தார் என்று இராணுவத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தனர். இராணுவத்துக்கும் உயிரிழப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இராணுவத்தினர் நீதிமன்றில் வாக்குமூலம் அளித்திருந்தனர்.
வழக்குத் தீர்ப்புக்காக திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்பாக நேற்று எடுக்கப்பட்டது.
காலை 11 மணியளவில் நீதிபதி தனது தீர்ப்பை மன்றில் அறிவித்தார். இது போன்ற சில வழக்குகளையும் மற்றும் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் போன்றவற்றையும் சுட்டிக்காட்டி தனது தீர்ப்பை வாசித்தார்.
வழக்கின் முதலாம் எதிரியான 51ஆவது படைத் தளபதி அச்சுவேலி இராணுவமுகாமைச் சேர்ந்தவர். அவர் இளைஞனைக் கைது செய்து தடுத்து வைத்ததுடன் மாத்திரமே தொடர்புபட்டுள்ளார். அவர் சித்திரவதை புரிந்தமை மற்றும் கொலை செய்தமை போன்றவற்றுடன் தொடர்புபட்டுள்ளார் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை. வழக்கிலிருந்து இராணுவ அதிகாரி விடுதலை செய்யப்படுகின்றார்.
முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் ஆதாரங்கள் என்பனவற்றை நோக்கும் போது இரண்டாம் எதிரியான 512ஆம் படைப் பிரிவின் இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் திருநெல்வேலி இராணுவ முகாம் அதிகாரி ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படுகின்றன.
வழக்கில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட 512ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் திருநெல்வேலி இராணுவ முகாமினைச் சேர்ந்த அதிகாரி ஆகியோருக்கு அரச தலைவர் விரும்பும் நேரத்தில் விரும்பும் இடத்தில் கழுத்தில் சுருக்குக் கயிறிட்டு உடலில் இருந்து உயிர் பிரியும் வரை தூக்கிலிட்டுத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று தீர்ப்பை அறிவித்தார்.
இரண்டாவது எதிரியான மேஜர் டிக்சன் ராஜமந்திர மற்றும் மூன்றாவது எதிரியான கேணல் பியதாச பிரியந்த ராஜகருண ஆகியோருக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. முதலாவது எதிரியான ரொனி பாத்லமியூஸ் விடுவிக்கப்பட்டார். (ற-5,45,114,40)

## பொலிஸ்...

சுற்றுக்காவல் நடைமுறைப்படுத்த நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
கடந்த சில வாரங்களாக அந்தப் பகுதியில் குள்ளமனிதர்கள் நடமாடுவதாகவும் அவர்கள் கல் வீசித் தாக்குதல் நடத்துவதாகவும் மக்கள் தெரிவித்திருந்தனர். இந்த விடயம் பெரும் பூதாகரமான பிரச்சினையாக உருவெடுத்திருந்தது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்திருந்தது. இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டம் அராலி அம்மன் கோயில் முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், சபா.குகதாஸ், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த. நடனேந்திரன், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குணதில, சங்கானைப் பிரதேச செயலர் உள்ளிட்ட பலர் நேற்று மாலை 3 மணிக்கு இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்றிருந்தார்கள்.
அராலிப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் முழுமையாக எடுத்துரைக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். மக்கள் கடந்த சில வாரங்களாக தாம் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் கூறினர்.
'குள்ள மனிதர்கள் போன்று இருக்கின்றார்கள். முகம் மற்றும் உடல் முழுவதும் கறுப்பாகக் காணப்படுகின்றது. பாயும் சப்பாத்துக்களை அணிந்திருக்கின்றார்கள். அவர்களைப் பிடிக்க முயன்றால் மரத்துக்கு மரம் வேகமாகத் தாவி பாய்ந்து ஓடுகின்றார்கள். வீடுகள் மீது கல் எறிந்து தாக்குதல் நடத்துகின்றார்கள்.
இந்தச் சம்பவங்களால் ஒவ்வொரு இரவும் அச்சத்துடனேயே கழிகின்றது. இளைஞர்கள் ஊரைப் பாதுகாப்பதற்கு இரவு முழித்திருந்தால் பகலில் அவர்கள் வேலைக்குச் செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். பொலிஸார் சுற்றுக் காவல் நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும்' என்று மக்கள் கோரிக்கை விடுத்தார்கள்.
யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், இந்தச் சம்பவங்கள் தென்பகுதியிலும் இடம்பெறுகின்றது. எமக்குப் பொலிஸார் பற்றாக்குறை இருக்கின்றது. பல ஆயிரம் மக்கள் வாழும் இந்தப் பகுதியில் 50 பொலிஸாரே உள்ளார்கள். இளைஞர்கள் பத்துபேரை உள்ளடக்கிய குழு அமைக்கப்படவேண்டும். அவர்களுடன் 3 பொலிஸார் இணைந்து செயற்படுவார்கள். இரவு நேரத்தில் அவர்கள் சுற்றுக் காவல்நடவடிக்கைகளில்ஈடுபடுவார்கள் -என்றார்.
இந்தக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனுக்கும் இடையில் வாக்குவாதம் நடைபெற்றிருந்தது.
குள்ளமனிதர்கள் பிரச்சினை இல்லையென்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் சயந்தன் தெரிவித்திருந்தார். இதைச் சுட்டிக்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், இங்கு மக்களுடன் வந்து பேசாமல் எப்படி அவ்வாறு தெரிவிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். உங்களது பத்திரிகையில் தான் அந்தச் செய்தி வந்தது. ஏனைய பத்திரிகைகள் போடவில்லை என்று சயந்தன் பதில் வழங்கியுள்ளார்.
மாகாணசபை உறுப்பினர் சயந்தனுக்கும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஊடகங்களைத் தாக்குவதுதான் வேலை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறிப்பிட்டுள்ளார். எங்களை இலக்கு வைத்துச் செயற்படுகின்றீர்கள். உரிய நேரத்தில் பதில் தருவோம் என்று சயந்தன் கூறினார்.
இதேவேளை, குள்ள மனிதர் விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர் சபா. குகதாஸ் பிரேரணை முன்வைக்கவுள்ளார். (5,26)

# தேசிய கால்பந்தாட்ட பெண்கள் அணியில் யாழ். வீராங்கனைகள் ஆறு பேருக்கு இடம்



யாழ்ப்பாணம், ஒக. 9

பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெறவுள்ள தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றவிருக்கும் இலங்கை கால்பந்தாட்டக் குழாமில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு வீராங்கனைகள் இடம்பிடித்தனர்.

தொடருக்குச் செல்லவுள்ள 23 பேர் கொண்ட குழாமில் உள்ளடக்கப்பட்டுள்ள வீராங்கனைகளின் பெயர் விபரங்களை நேற்றுமுன்தினம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. இதில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ர.கிருசாந்தினி, ஏ.டி.மேரிகொன்சிகா மற்றும் பா.செயந்தினி ஆகியோரும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் எஸ்.தவப்பிரியா, யு.ஜோகிதா மற்றும் ஜெ.ஜெதுன்சிகா ஆகியோரும் அவ்வாறு 23 பேர்கொண்ட அணியில் பெயரிடப்பட்டுள்ளனர். (ம-23-422)



## பாரதி கழகம் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 10:05 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது அளவெட்டி பாரதி அணி. (ம-23)

## இன்றைய மோதல்கள்

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வடக்கு - கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதோட்டை எவ்.சி. அணியை எதிர்த்து மன்னார் எவ்.சி. அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளியூர் கிங்ஸ் அணியை எதிர்த்து ரில்கோ கொங்கியூரெர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# கொக்குவில் இந்து கிண்ணம் வென்றது



இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம்நடத்திய 18 வயதுப்பிரிவு இருபால் அணிகளுக்கும் இடையிலான அணிக்கு மூன்று வீராங்கனைகள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் கேட்வே கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

## ஆவரங்கால் மத்திக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக. 9

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது.

25:18, 17:25, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்தி. (ம-23)

## ஆவரங்கால் இந்து இளைஞர் நேர்செற் கணக்கில் வென்றது

யாழ்ப்பாணம், ஒக. 9

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:16, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி. (ம-23)

## சேவியர் போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக. 9

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி பி அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக யூட் தெரிவானார். (ம-23)

## திக்கம் கழகம் அசத்தலாட்டம்

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் திக்கம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தனது பயிற்சி முகாமை துரித கதியில் முன்னெடுத்து வருகிறது யுவென்டாஸ். (ம)

# ஸ்ரோக்ஸ் இன்று களமிறங்கமாட்டார்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகும் நிலையில் இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரோக்ஸ் விளையாட மாட்டார். இது இங்கிலாந்துக்குப் பெரும் பின்னடைவே.

இங்கிலாந்தில் இரவு நேரக் களியாட்ட விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டமை தொடர்பில் வழக்கை எதிர்கொண்டு வருகிறார் ஸ்ரோக்ஸ். இந்த வழக்கு இன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதனால் இந்த வழக்கில் முன்னிலையாக வேண்டும் என்பதற்காக இந்த ஆட்டத்தில் இருந்து ஸ்ரோக்ஸ் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்தியா - இங்கிலாந்து 2ஆவது டெஸ்ட் இன்று





இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முதலாவது ஆட்டம் பேர்மிங்ஹாம் மைதானத்தில் அண்மையில் முடிவுக்கு வந்தது. இந்த ஆட்டத்தில் போராடி வெற்றிபெற்றது இங்கிலாந்து. இந்திய அணி தோல்வியடைந்த போதிலும் அந்த அணியும் அணித் தலைவர் கோக்லியும் வெளிப்படுத்திய போராட்டம் அனைவரையும் கவர்ந்திருந்தது.

இந்த நிலையில் தொடரின் இரண்டாவது ஆட்டம் பாரம்பரியம் நிறைந்த லோட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.


கடந்த ஆட்டத்தில் கோக்லி ஒட்டுமொத்தமாக 200 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இதனால் இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லியை இங்கிலாந்து எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பது இமாலக் கேள்வி. ஆனால் இந்த ஆட்டத்தில் கோக்லிக்கு 'நேரடியாக' அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று பெய்லிஸ் அண்மையில் தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

"அடுத்த ஆட்டத்தில் கோக்லிக்கு எமது பந்து வீச்சாளர்கள் நேரயாக அழுத்தம் வழங்க மாட்டார்கள். இந்திய அணியில் உள்ள ஏனைய வீரர்களுக்கு அழுத்தம்கொடுத்து அவர்களை விரைவாக வீழ்த்துவோம். இதனால் கோக்லிக்கு அவரது அணியில் இருந்தே அழுத்தமும் கூடுதல் பொறுப்பும் ஏற்படும். அவ்வாறாக சொந்த அணிக்குள் இருந்து ஏற்படும் அதீத அழுத்தம் கோக்லியை வீழ்த்த பேருதவி புரியும்" என்று பெய்லிஸ் மேலும் தெரிவித்திருந்தார். (ம)

# டோனி, கபில்தேவ் வரிசையில் கோக்லி

இந்திய அணியின் தலைவர் கோக்லி, முன்னாள் அணித் தலைவர்களான டோனி, கபில் தேவ் வரிசையில் இணைவாரா என்பதுதான் தற்போதுள்ள மிகப்பெரிய கேள்வி.

இன்றைய ஆட்டம் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த மைதானத்தில் இந்திய அணி 17 ஆட்டங்களில் இங்கிலாந்தை எதிர்த்துள்ளது. 2 வெற்றி, 4 சமநிலை, 11 தோல்வி என்றவாறாக அமைகிறது லோட்ஸில் இந்திய அணியின் பெறுதி. அந்த அணி தனது 11ஆவது ஆட்டத்தில்தான் கபில் தேவின் தலைமையில் லோட்ஸில் முதலாவது வெற்றியைப் பெற்றது. அதன் பின்னர் டோனியின் தலைமையில் இங்கிலாந்தை இந்தியா வீழ்த்தியது. இந்த அடைவை தற்போது கோக்லியும் நிலைநாட்டுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)



# சின்சினாட்டி ரென்னிஸில் செரீனாவுக்கு தரப்படுத்தல் இல்லை

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னேற்பாட்டுத் தொடராகக் கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸுக்குத் தரவரிசை வழங்கப்படவில்லை.

அமெரிக்கப் பகிர்கங்கத் தொடருக்கு முன்னாயத்தத் தொடராகக் கருதப்படுகிறது சின்சினாட்டி ரென்னிஸ் தொடர். இந்தத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அதற்குரிய அட்டவணை தயாரிப்பதற்காக தரவரிசை வழங்கப்படும். இந்தத் தரவரிசையில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸுக்கு இடம் கொடுக்கப்படவில்லை.


மற்றொரு நட்சத்திர வீராங்கனையான மரிய செரபோவாவுக்கும் தரவரிசை வழங்கப்படவில்லை. (ம)

# கேலப்புக்கு முதலிடம்

அமெரிக்கப் பகிரங்கத் தொடரான சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சிமோனா கேலப்புக்கு தரவரிசையில் முதலிடம் கிடைத்தது.


அமெரிக்கப் பகிரங்கத் தொடரான சின்சினாட்டி ரென்னிஸ் தொடருக்கு முன்னாயத்தத் தொடராகக் கருதப்படுகிறது சின்சினாட்டி தொடர். இந்தத் தொடருக்கான தரவரிசையில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடம் பிடித்தார் கேலப்.

தரப்படுத்தலில் முதலிடம் கிடைத்ததால் கேலப் சவால் வழங்கக்கூடிய வீராங்கனை எதிர்கொள்ள மாட்டார். காலிறுதி, அரையிறுதிகளில்தான் கேலப் சவாலைச் சந்திப்பார் என்று கருதப்படுகிறது. (ம)



# இரு அணிகளிலும் இரு சுழல் வீரர்கள்







இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையில் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு அணிகளிலும் தலா இரண்டு சுழல்பந்து வீச்சாளர்கள் இடம் பிடித்து விளையாடுவார்கள் என்று பொதுவானதொரு கணிப்பு நிலவுகிறது.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 31 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றாலும் அஸ்வின் 7 இலக்குகளைக் கைப்பற்றினார். எட்ஜ்பஸ்டன் ஆடுகளத்தை விட இரண்டாவது ஆட்டம் நடைபெறும் லோட்ஸ் ஆடுகளம் சுழல்பந்து வீச்சுக்கு கூடுதலாக ஒத்துழைக்கும் இதனால் இரண்டு அணிகளும் தலா இரு சுழல்பந்து வீச்சாளர்களைக் கொண்டு களமிறங்கத் திட்டமிட்டுள்ளன என்று அறியவருகிறது.

இங்கிலாந்து அணியில் ரசிட், மொயின் அலி இருவரும் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்திய அணியில் எந்த இரு சுழல்பந்து வீச்சாளர்கள் களமிறங்குவார்கள் என்பதில் குழப்பமான நிலையே நிலவுகிறது. இரண்டு சுழல்பந்து வீச்சாளர்களில் ஒருவராக அஸ்வின் களமிறங்குவது உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மற்றொரு சுழல் பந்துவீச்சாளர் ஜடேயாவா அல்லது குல்தீப் யாதவா என்பது தொடர்பில் குழப்பநிலை நீடிக்கிறது.

இங்கிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் குல்தீப் யாதவ் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய காரணத்தால் அவர் அஸ்வினுடன் இன்று களமிறங்கலாம் என்று கருதப்படுகிறது. அதேநேரம் குல்தீபை விடவும் ஜடேயா சிறந்த முறையில் துடுப்பெடுத்தாட வல்லவர் என்பது கவனிக்கத்தக்கது. (ம)

# ஆஸ்திரேலிய அணியின் துணைத்தலைவர் யார்?

## நான்கு முனைப்போட்டி

ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் யார் என்கிற போட்டி தற்போது நான்கு முனைப்போட்டியாக மாறியுள்ளது. இதன்படி மிச்செல் ஸ்ராக், மிச்செல் மார்ஷ், ஹசில்வூட், லையன் ஆகியோரிடையே போட்டி நிலவுகிறது. ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கி ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித், துணைத் தலைவர் வோர்ணர் இருவரும் தடைபெற்றனர். இதனால் பதில் தலைவராக இலக்குக் காப்பாளர் டிம் பெய்ன் அறிவிக்கப்பட்டார். துணைத் தலைவர் யார் என்பது தொடர்பில் இன்னும் உறுதியான நிலைப்பாடு எதுவும் இல்லாமல் இழுபறி நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஸ்ராக், லையன் இருவருக்கும் இடையில் இருமுனைப் போட்டியாக இந்தப் போட்டி இருந்தது. தற்போது இந்தப்போட்டி நான்கு முனைப்போட்டியாக மாறியுள்ளது. இதன்படி மிச்செல் ஸ்ராக், மிச்செல் மார்ஷ், ஹசில்வூட், லையன் ஆகியோரிடையே போட்டி நிலவுகிறது.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணி அடுத்ததாக விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கு முன்னதாக துணைத் தலைவர் அணிக்கு நியமிக்கப்படுவார் என்றும் அறிவித்துள்ளார் அணியின் தலைமைத் தெரிவாளார் கி[illegible]ப்பல். இதன்படி மிச்செல் மார்ஷ் அணியி[illegible]ணைத் தலைவராக நியமிக்கப்பட வாய்ப்பு அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், வேகப்பந்து வீச்சாளர்களான மிச்செல் ஸ்ராக், ஹசில்வூட், சுழல் பந்து [illegible]ச்சாளர் லையன் ஆகியோர் அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளனர். (ம)









# அடுத்த உலகக்கிண்ணத் தொடரில் தெ.ஆபிரிக்காவுக்கு பெரும் சவால்

## ஸ்ரெய்ன் வெளிப்படை

அடுத்த உலகக்கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவுக்குச் சவாலானது என்று தெரிவித்தார் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் அடுத்த உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறுகிறது. இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சவாலானவை. தென்னாபிரிக்க அணி வேகப்பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்படக்கூடியது. எனவே இந்த உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவின் கை ஓங்கியிருக்கும் என்பது பொதுவான கருத்து. இவ்வாறிருக்கையில் இந்த உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்குப் பெரும் சவால் காத்துள்ளது என்று தெரிவித்தார் ஸ்ரெய்ன். அதுவும் தென்னா பிரிக்காவின் வேகப்பந்து வீச்சு வரிசையில் குறை காண்கிறார் அவர்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
V2 TRAVELS

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் இயங்கிவரும் புடைவை அகத்திற்கு "பெண்" வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 075 572 4461

சட்ட ரீதியான ஆவணங்களை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை !
நாடு திரும்பிய மக்களுக்கான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு அரிய வாய்ப்பு !!!
இடம் - நகரசபை கலாசார மண்டபம், மன்னார்.
திகதி - 2018.08.12 மற்றும் 13
நேரம் - காலை 8.00 தொடக்கம்
உள்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து மீண்டும் தாயகம் திரும்பிய மக்களுக்கான தூதரகப் பிறப்புச் சான்றிதழ், குடியுரிமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தூதரகப்பிறப்புச்சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்குமான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.
இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!!!
மேற்குறிப்பிட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ள அணுக வேண்டிய முகவரி
ஒபர் சிலோன் - மன்னார் கிளை அலுவலகம், 8/19, ஒல்லிமோடை, சாவக்கட்டு. தொ.பே : 077 359 6041
தலைமை அலுவலகம் : ஒபர் சிலோன் 21, ஜெயவர்த்தன பிளேஸ், தெஹிவளை, கொழும்பு. தொலைபேசி - 011 368 4888

# நிச்சயம் உலகச் சம்பியன் பி.வி.சிந்துவின் கனவு இது

"நிச்சயம் ஒருநாள் உலகச் சம்பியனாக வருவேன்" என்று தெரிவித்தார் இந்தியப் பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்து.

உலக சம்பியன்சிப் ரென்னிஸ் தொடர் சீனாவில் அண்மையில் நடைபெற்றது. இந்தியப் பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்து, ஸ்பெய்னின் வீராங்கனை கரோலினா மரின் இருவரும் இந்த ஆட்டத்தில் மோதினார்கள். மரின் நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். இறுதி ஆட்டம் வரையில் முன்னேறி உலக சம்பியன்சிப் பட்டத்தை சிந்து தவறவிடுவது இது இரண்டாவது தடவை. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இரண்டு தடவைகள் உலக சம்பியன்சிப் பட்டம் கைமீறிப் போனதால் வருத்தம்தான். ஆனால் நான் விரக்தியடையவில்லை. ஒரு நாள் அந்தப் பட்டத்தைக் கைப்பற்றுவேன். நானும் மரினும் நல்ல தோழிகள். ஆனால் ஆட்டத்தில் இருவரும் வேறுவிதமாக மாறி விடுவோம்" என்று சிந்து மேலும் தெரிவித்தார். (ம)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.